# தினபூமி

thinaboomi.com


பூமி: 30 சுற்று: 196 ஆனி 09

Regd. No.CBE/090/2011-2013

கோவை, திங்கள், ஜூன் 23, 2025

▸ சென்னை ▸ மதுரை ▸ திருச்சி ▸ கோவை ▸ நெல்லை ▸ சேலம் ▸ வேலூர் ▸ புதுச்சேரி

பக்கம் 8 ₹ 3.00

**அமெரிக்கா தாக்குதல்: பதுங்கு குழியில் ஈரான் உயர் தலைவர் காமேனி**

...2-ம் பக்கம்

**தடையை நீக்கக்கோரி 'பைக் டாக்சி' ஓட்டுநர்கள் பெங்களூருவில் பேரணி**

...3-ம் பக்கம்

**டெஸ்ட் கிரிக்கெட் போட்டி: வாசிம் அக்ரமின் வாழ்நாள் சாதனையை தகர்த்த பும்ரா**

...6-ம் பக்கம்





ஏழு கண்டங்களில் உள்ள ஏழு உயரமான மலைகளில் ஏறி சாதனை படைத்துள்ள தமிழகத்தை சேர்ந்த முத்தமிழ்ச்செல்விக்கு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் நேரில் அழைத்து பாராட்டு தெரிவித்தார்.

### முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆட்சியில்

# நெடுஞ்சாலை துறையில் புதிய வரலாறு படைக்கும் தமிழ்நாடு

## புள்ளி விவரங்களுடன் தமிழக அரசு பட்டியல்

சென்னைஇ ஜூன் 23-

**தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆட்சியில் பல்வேறு சாலைத் திட்டங்கள், மேம்பாலப் பணிகளால் மற்ற துறைகளைப் போலவே இந்தியாவில் தமிழ்நாடு நெடுஞ்சாலைத் துறையிலும் சிறந்த மாநிலம் என புதிய வரலாறு படைத்துள்ளதாக புள்ளி விவரங்களுடன் தமிழக அரசு பெருமிதம் தெரிவித்துள்ளது.**

**முத்தமிழறிஞர் கலைஞர்**

தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டிருப்பதாவது:- ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்குச் சாலை வசதிகள் மிக மிக முக்கியமாகும். அமெரிக்க நாட்டின் ஜனாதிபதியாக இருந்த ஜான் எப். கென்னடி, அமெரிக்க நாட்டுப் பொருளாதார முன்னேற்றத்திற்கு இந்நாட்டின் பயன்படும் சாலை வசதிகள் சிறப்பாக அமைந்திருப்பதே காரணம் என்று ஒருமுறை குறிப்பிட்டார். தமிழ்நாட்டின் பொருளாதாரத்தை உயர்த்திடும் நோக்கில், முத்தமிழறிஞர் கலைஞர் தமிழ்நாட்டில் சாலை வசதிகளைப் பெருக்கிட இணைப்புச் சாலைத் திட்டம். தமிழ்நாடு அரசின் கீழ் தனித்துறையாக நெடுஞ்சாலைத் துறை, நெடுஞ்சாலைத் துறைக்கெனத் தனி அமைச்சர் முதலிய பலவற்றை உருவாக்கி, நெடுஞ்சாலைத்துறையில் தமிழ்நாடு சிறந்த மாநிலம் எனப் புகழ் பெறச் செய்தார்.

**முதல்வர் சாலை மேம்பாட்டு திட்டம்**

2021ம் ஆண்டில் தொடங்கப்பட்ட முதல்-அமைச்சர் சாலை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ. 3,858 கோடி மதிப்பீட்டில் 448 கி.மீ. நீளமுள்ள நான்கு வழித்தட சாலைகள், ரூ.2,207 கோடி மதிப்பில் 1,681 கி.மீ. நீளமுள்ள இரு வழித்தட சாலைகள் நிறைவேற்றப்பட்டுள்ளன தொடர்ந்து ரூ.2,807 கோடி மதிப்பீட்டில் 383 கி.மீ. நீளமுள்ள நான்கு வழித்தட சாலைப் பணிகளும், ரூ.709 கோடி மதிப்பீட்டில் 357 கி.மீ. நீளமுள்ள இரு வழித்தட சாலைப் பணிகளும் நடைபெற்று வருகின்றன.

**ஒருங்கிணைந்த சாலை உள்கட்டமைப்பு**

ரூ.17,154 கோடி மதிப்பீட்டில் 9,620 கி.மீ நீளமுள்ள சாலைப் பணிகள் மற்றும் ரூ.1,161 கோடி மதிப்பீட்டில் 996 பாலம் சிறு பாலப்பணிகள் நிறைவடைந்துள்ளன. ரூ.731 கோடி மதிப்பில் 164 கி.மீ. நீளத்திற்கு நகர்ப் பகுதி மேம்பாட்டு பணிகள் நிறைவடைந்துள்ள. ரூ.2,074 கோடி மதிப்பீட்டில் சாலை ஒடுதளப்பாதை மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் 6,805 கி.மீ. நீளச்சாலைகளில் ஒடுதளப் பரப்பினை மேம்படுத்தும் பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன. ரூ.662 கோடி மதிப்பீட்டில் 1,652 சாலைப் பாதுகாப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு முடிவடைந்துள்ளன.

**புறவழிச்சாலை இணைப்புச்சாலைகள்**

ரூ.307.8 கோடி மதிப்பீட்டில் மண்ணச்சநல்லூர் (கட்டம் 1) இலுப்பூர், பார்த்திபனூர், ராசிபுரம் கட்டம் 1 பிரிவு-2, திருத்துறைப்பூண்டி கட்டம்-1 பவானி கட்டம் ஐஐஇ முதுகளத்தூர், திருத்தணி, குன்னூர் மற்றும் நாமக்கல் கட்டம் ஐ ஆகிய பத்து புறவழிச் சாலை திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. ரூ.20.85 கோடி மதிப்பிட்டில் ஈரோடு மாவட்டம் வில்லரசம்பட்டி வழியாக திண்டல் சந்திப்பிலிருந்து கனிராவுத்தர்குளம் செல்லும் சாலை, ரூ.1.97 கோடி மதிப்பீட்டில் ஜவான்ஸ் பவன் சாலை, ரூ.41.89 கோடி மதிப்பீட்டில் பசுமலையில் இணைப்புச்சாலைப் பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன. ரூ.4,907.17 கோடி மதிப்பீட்டில் 5,064.53 கி.மீ நீளமுள்ள ஊராட்சி ஃ ஊராட்சி ஒன்றிய சாலைகள் மாவட்ட இதர சாலைகளாகத் தரம் உயர்த்தப்பட்டுள்ளன.

**ரூ.1,330.70 கோடி மதிப்பில் திட்டங்கள்**

சென்னை-கன்னியாகுமரி தொழில்தடத் திட்டத்தின் கீழ், ரூ.240.06 கோடி மதிப்பீட்டில் நக்கசேலம், குரும்பலூர் புறவழிச்சாலைகளுடன் கூடிய துறையூர் பெரம்பலூர் சாலை, ரூ.349.94 கோடி மதிப்பீட்டில் மோகனூர் நாமக்கல். சேந்தமங்கலம் ராசிபுரம் சாலை, ரூ.251.29 கோடி மதிப்பீட்டில் விருத்தாச்சலம் உளுந்தூர்பேட்டை சாலை, ரூ.238.90 கோடி மதிப்பீட்டில் தஞ்சாவூர் - மன்னார்குடி சாலை, ரூ.250.51 கோடி மதிப்பீட்டில் மேலூர் திருப்பத்தூர் சாலை ஆகிய 5 சாலைப் பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

**தமிழ்நாடு சாலை மேம்பாடு திட்டம்-2**

இத்திட்டத்தின் கீழ் ரூ.129.94 கோடி மதிப்பீட்டில் விருத்தாச்சலம் பரங்கிப்பேட்டை சாலை ரூ. 144.64 கோடி மதிப்பீட்டில் ஓமலூர் மேச்சேரி சாலை. ரூ.104.70 கோடி மதிப்பீட்டில் சித்தோடு ஈரோடு சாலை, ரூ.176.58 கோடி மதிப்பீட்டில் திருநெல்வேலி செங்கோட்டை கொல்லம் சாலை ஆகிய 4 சாலைப் பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

**ரூ.813.25 கோடியில் 8 சாலை மேம்பாலங்கள்**

ரூ.93.50 கோடி மதிப்பீட்டில் கோயம்பேடு ஜவஹர்லால் நேரு சாலையில் காளியம்மன் கோயில் தெரு மற்றும் சென்னை புறநகரப் பேருந்து நுழைவு வாயில் சந்திப்பில் மேம்பாலம். ரூ.67.00 கோடி மதிப்பீட்டில் வேளச்சேரி- விஜயநகரம் சந்திப்பில் தரமணி இணைப்புச் சாலையிலிருந்து வேளச்சேரி புறவழிச்சாலை செல்லும் இரண்டாம் அடுக்கு பாலப்பகுதிப் பணி மற்றும் ரூ.78.49 கோடி மதிப்பில் வேளச்சேரி புறவழிச் சாலையிலிருந்து

(கடைசி பக்கம் பார்க்க)

# 7 கண்டங்களில் உள்ள மலைகளில் ஏறி சாதனை: முத்தமிழ்ச்செல்விக்கு துணை முதல்வர் பாராட்டு

சென்னை, ஜூன் 23-

**7 கண்டங்களில் உள்ள 7 உயரமான மலைகளில் ஏறி சாதனை படைத்துள்ள முத்தமிழ்ச்செல்விக்கு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பாராட்டு தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பாக எக்ஸ் தளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில் தெரிவித்திருப்பதாவது:- ஏழு கண்டங்களில் உள்ள ஏழு உயரமான மலைகளில் ஏறி சாதனை படைத்திருக்கிறார் சகோதரி முத்தமிழ்ச்செல்வி. உயிரை பணையம் வைத்து இச்சாதனையை சாத்தியமாக்கி இருக்கும் அவருக்கு என் பாராட்டுகள்.

ஒவ்வொரு மலையேற்றத்திற்கு முன்பும் நம்மை சந்தித்து அவரது அடுத்தடுத்த மலையேற்றம் குறித்த தகவல்களையும், அதில் உள்ள சவால்களையும் பகிர்ந்து கொள்வார்.

அவருடைய வெற்றிப் பயணத்திற்கு தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் துணை நின்று வருகிறது என்பதில் பெருமை கொள்கிறோம். தங்கை முத்தமிழ்ச்செல்வி இன்னும் பல உயரங்களை தொட அவரைப்போல பலரை உருவாக்க என் வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

### பேச்சுவார்த்தையை முன்னெடுக்க வேண்டும்:

# ஈரான் அதிபரிடம் பிரதமர் மோடி பேச்சு

புதுடெல்லி, ஜூன 23-

**ஈரான் அதிபர் மசூத் பெஷேஷ்கியனுடன் பிரதமர் மோடி தொலைபேசி வழியாக பேசியுள்ளார். அப்பொழுது பாதுகாப்பு மற்றும் ஸ்திரத்தன்மையை மீட்டெடுக்க பேச்சுவார்த்தையை முன்னெடுக்க வேண்டும் என்று ஈரான் அதிபரிடம் அவர் வலியுறுத்தியுள்ளார்.**

ஈரானின் அணு ஆயுதத் திட்டங்கள் தங்களுக்கு அச்சுறுத்தலாக உள்ளதாகக் கூறி, அந்த நாடு மீது கடந்த 13-ம் தேதி முதல் இஸ்ரேல் தாக்குதல் நடத்தி வருகிறது. ஈரானின் அணு ஆயுதத் தளங்கள், அணு விஞ்ஞானிகள் உள்ளிட்ட அணுசக்தித் துறையை குறிவைத்து இஸ்ரேல் தாக்கியது. அத்துடன் அந்த நாட்டின் ராணுவ நிலைகள், எண்ணெய் சேமிப்புக் கிடங்குகள் உள்ளிட்ட பிற பகுதிகளையும் தாக்குதலுக்கு இலக்காக்கி வருகிறது.

மத்திய கிழக்கில் பெரும் பதற்றத்தை ஏற்படுத்தி வரும் இந்த ராணுவ மோதல் இரண்டாவது வாரத்தை எட்டியுள்ளது. நேற்றும் இரு நாடுகளும் தங்கள் மோதலை எவ்வித குறையுமின்றி தொடர்ந்தன.

இந்த நிலையில், ஈரான் மீது அமெரிக்காவும் தாக்குதல் நடத்தியது. ஈரானில் உள்ள போர்டோ, நடான்ஸ் மற்றும் இஸ்பஹான் உள்ளிட்ட மூன்று அணுசக்தி நிலையங்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் தாக்குதலுக்கு தக்க பதிலடி கொடுக்கப்படும் என்று ஈரான் எச்சரித்துள்ளது. இதனால், மத்திய கிழக்கில் உச்சகட்ட பதற்றம் ஏற்பட்டுள்ளது.

இந்தப் பதற்றமான சூழலில், ஈரான் அதிபருடன் பிரதமர் மோடி தொலைபேசி வழியாகப் பேசியுள்ளார்.

இது தொடர்பாக பிரதமர் மோடி தனது எக்ஸ் தளத்தில் பதிவிட்டிருப்பதாவது: "ஈரானில் நடைபெற்று வரும் போர் குறித்து ஆழ்ந்த கவலையை பகிர்ந்து கொண்டேன். பிராந்திய அமைதி, பாதுகாப்பு மற்றும் ஸ்திரத்தன்மையை மீட்டெடுக்க பேச்சுவார்த்தையை முன்னெடுக்க வலியுறுத்தினேன்" என்று குறிப்பிட்டுள்ளார்.

# அமைதி ஏற்படாவிட்டால் ஈரான் மீது மிகப்பெரிய தாக்குதல் நடத்தப்படும்

## அமெரிக்க அதிபர் ட்ரம்ப் எச்சரிக்கை

நியூயார்க், ஜூன் 23-

**ஈரானின் 3 அணுசக்தி தளங்கள் மீது அமெரிக்க ராணுவம் தாக்குதல் நடத்தியதாக அதிபர் ட்ரம்ப் அறிவித்திருந்தார். இந்நிலையில் தாக்குதல்களுக்குப்பிறகும் அமைதி ஏற்படாவிட்டால் மிகப் பெரிய தாக்குதல் நடத்தப்படும் என்று ட்ரம்ப் எச்சரித்துள்ளார்.**

அமெரிக்காவின் தாக்குதல் குறித்து செய்தியாளர்களிடம் பேசிய ட்ரம்ப், "இந்த தாக்குதல் அமெரிக்கா, இஸ்ரேல் மற்றும் உலகிற்கு ஒரு வரலாற்று தருணம்.

அமெரிக்க தாக்குதல்களில் ஈரானின் முக்கிய அணுசக்தி தளங்கள் முற்றிலும் முழுமையாகவும் அழிக்கப்பட்டன. ஈரானை தாக்க இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகுவுடன் ஒரு குழுவாக செயல்பாட்டோம். ஈரானின் அணுசக்தி செறிவூட்டல் திறனை நிறுத்தவும், அணுசக்தி அச்சுறுத்தலை நிறுத்தவும் இந்த தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

ஈரான் இப்போது இந்த போரை முடிவுக்குக் கொண்டுவர ஒப்புக்கொள்ள வேண்டும். எங்களின் தாக்குதலுக்கு பதிலடி கொடுக்க நினைத்தால் கடும் விளைவுகளை சந்திக்க நேரிடும்.

ஈரானுக்கு அமைதி அல்லது சோகம் ஆகியவற்றில் ஒன்றில் ஒரு தேர்வு மட்டுமே உள்ளது. மத்திய கிழக்கு பகுதியை கொடுமைப்படுத்தும் நபராக ஈரான் உள்ளது.

அந்த நாடு அமைதியை ஏற்படுத்தவில்லை என்றால் கூடுதல் தாக்குதல்கள் நடத்தப்படும்.

கடந்த 8 நாட்களில் நாம் கண்டதை விட மிகப்பெரிய அமைதி ஏற்படும் அல்லது ஈரானுக்கு மிகப்பெரிய சோகம் ஏற்படும். இன்னும் பல இலக்குகள் குறி வைக்கப்பட்டு உள்ளன.

அமைதி விரைவாக வரவில்லை என்றால் மற்ற இலக்குகளை துல்லியம், வேகம் மற்றும் திறமையுடன் நாங்கள் தாக்குவோம்" என்று கூறினார்.

### பஹல்காம் பயங்கரவாதிகளுக்கு அடைக்கலம்:

# காஷ்மீரை சேர்ந்த 2 பேர் கைது

## தேசிய புலனாய்வு அமைப்பு நடவடிக்கை

புதுடெல்லி, ஜூன் 23-

**பஹல்காம் பயங்கரவாத தாக்குதலில் தொடர்புடைய பாகிஸ்தான் பயங்கரவாதிகளுக்கு அடைக்கலம் கொடுத்ததாக 2 பேரை தேசிய புலனாய்வு அமைப்பு கைது செய்துள்ளது.**

ஜம்மு காஷ்மீர் மாநிலம் பஹல்காம் சுற்றுலாத் தலத்தில் கடந்த ஏப்ரல் 22ம் தேதி நடந்த பயங்கரவாத தாக்குதலில் 26 அப்பாவி சுற்றுலாப் பயணிகள் கொல்லப்பட்டனர். 16 பேர் படுகாயமடைந்தனர். இந்த தாக்குதலுக்கு பாகிஸ்தானைச் சேர்ந்த பயங்கரவாத அமைப்பான லஷ்கர் இ தொய்பாவின் உட்பிரிவான தி ரெசிஸ்டன்ஸ் போர்ஸ் என்ற அமைப்பு பொறுப்பேற்றது.

இந்நிலையில், இந்த தாக்குதலில் தொடர்புடைய பாகிஸ்தானைச் சேர்ந்த மூன்று பயங்கரவாதிகளுக்கு அடைக்கலம் கொடுத்ததாக இரண்டு பேரை தேசிய புலனாய்வு அமைப்பு (என்.ஐ.ஏ) கைது செய்துள்ளது. இது தொடர்பாக என்.ஐ.ஏ. வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், "பஹல்காம் பயங்கரவாத தாக்குதல் வழக்கில் முக்கிய திருப்புமுனையாக, 26 அப்பாவி சுற்றுலாப் பயணிகளைக் கொன்ற மற்றும் 16 பேரைக் கடுமையாகக் காயப்படுத்திய கொடூரமான தாக்குதலை நடத்திய பயங்கரவாதிகளுக்கு அடைக்கலம் கொடுத்த இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டுள்ள இரண்டு குற்றவாளிகளில் ஒருவர் பஹல்காமில் உள்ள பட்கோட் பகுதியைச் சேர்ந்த பர்வைஸ் அகமது ஜோதர். மற்றொருவர், பஹல்காமில் உள்ள ஹில் பார்க் பகுதியைச் சேர்ந்த பஷீர் அகமது ஜோதர். தாக்குதலில் ஈடுபட்ட மூன்று ஆயுதமேந்திய பயங்கரவாதிகளின் அடையாளங்களை இவர்கள் வெளிப்படுத்தியுள்ளனர்.

1967 ஆம் ஆண்டு சட்டவிரோத நடவடிக்கைகள் (தடுப்பு) சட்டத்தின் பிரிவு 19 இன் கீழ் இரண்டு குற்றவாளிகளும் கைது செய்யப்பட்டுள்ளனர். தொடர்ந்து அவர்களிடம் விசாரணை நடத்தப்பட்டு வருகிறது" என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தமிழகத்தில் 28-ம் தேதி வரை மிதமான மழைக்கு வாய்ப்பு

சென்னை, ஜூன் 23-


**சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள அறிக்கையில், மேற்கு திசை காற்றின் வேக மாறுபாடு காரணமாக இன்று முதல் 28-ம் தேதி வரை தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.**

வரும் 24-ம் தேதி வரை தமிழகம் மற்றும் புதுவையில் ஒருசில இடங்களில் அதிகபட்ச வெப்பநிலை 2-3 டிகிரி செல்சியஸ் இயல்பை விட அதிகமாக இருக்கக்கூடும். அதிக வெப்பநிலையும், அதிக ஈரப்பதமும், குறைந்த பட்ச வெப்பநிலை ஓரிரு இடங்களில் இயல்பை விட 2-3 டிகிரி செல்சியஸ் அதிகமாகவும் இருக்கும் நிலையில், தமிழகத்தில் ஓரிரு பகுதிகளில் அசௌகரியம் ஏற்படலாம்.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் இன்று வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒருசில பகுதிகளில் லேசான மழை பெய்ய வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்பநிலை 36-37 டிகிரி செல்சியஸை ஒட்டியும், குறைந்தபட்ச வெப்பநிலை 28-29 டிகிரி செல்சியஸை ஒட்டியும் இருக்கக்கூடும்.

இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மார்க்கெட் விலை நிலவரம்



| BSE | NSE |
|---|---|
| 1,46.30 | 319.15 |
| பாயிண்ட் 82,408.17 | பாயிண்ட் 25,112.40 |



**தங்கம்**
1 சவரன் ₹71,360
1 கிராம் ₹9,235



**வெள்ளி**
1 கிலோ ₹120,000
1 கிராம் ₹120.00

**டாலர்** ₹86.58

**பெட்ரோல்** ₹102.63
**டீசல்** ₹94.24



### அமெரிக்கா தாக்குதல் எதிரொலி:
# பதுங்கு குழியில் ஈரான் உயர் தலைவர் காமேனி

**தெக்ரான், ஜூன் 23-**

ஈரான் மீது இஸ்ரேல் மற்றும் அமெரிக்கா தாக்குதல் நடத்தி வரும் சூழலில் அந்நாட்டின் உயர் தலைவர் அயதுல்லா காமேனி பாதுகாப்பாக ஒரு ரகசிய நிலத்தடி பதுங்கு குழிக்குச் சென்றதாகக் கூறப்படுகிறது.

அனைத்து வகையான மின்னணு தகவல்தொடர்புகளும் நிறுத்தப்பட்டுள்ளதாகவும், நம்பகமான உதவியாளர் மூலம் மட்டுமே இராணுவத் தளபதிகளுக்கு செய்திகள் அனுப்பப்படுவதாகவும் தெரிகிறது. காமேனி இன்னும் இந்த உலகில் இருக்க கூடாது என்று இஸ்ரேல் பாதுகாப்பு அமைச்சர் சமீபத்தில் கூறியிருந்தார்.



மேலும் இஸ்ரேல் தாக்குதலில் ஈரானில் சில விஞ்ஞானிகள் மற்றும் ராணுவ தலைவர்களும் கொல்லப்பட்ட சூழலில் காமேனி பதுங்கு குழியில் தஞ்சம் அடைந்துள்ளார்.

இந்த சூழலில் தனது உயிருக்கு ஆபத்து இருப்பதால் தனக்குப் பின் உயர் தலைவர் பதவிக்கு மூன்று மூத்த மதத் தலைவர்களின் பெயர்களை காமேனி பரிந்துரைத்ததாக தகவல்கள் வெளியாகி உள்ளன. மேலும் அந்த பட்டியலில் அவரின் மகன் பெயர் இடம்பெறவில்லை. கடந்த காலத்தில், மறைந்த அதிபர் இப்ராஹிம் ரைசி கமேனியின் வாரிசு என்று கூறப்பட்டது. ஆனால் ஹெலிகாப்டர் விபத்தில் அவர் இறந்தது அந்த ஊகத்திற்கு முற்றுப்புள்ளி வைத்தது. இப்போது, காமேனியின் சொந்த மகன், திரைக்குப் பின்னால் ஒரு முக்கிய நபராகக் கருதப்படும் மோஜ்தபாவும் பட்டியலில் இடம் பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

### அமெரிக்காவின் தாக்குதலை அடுத்து
# ரஷ்ய அதிபர் புதினுடன் இன்று ஈரான் அமைச்சர் ஆலோசனை

**ஈரான்,ஜூன் 23-**

இஸ்தான்புல்லில் செய்தியாளர்களை சந்தித்து பேசிய ஈரான் வெளியுறவுத்துறை அமைச்சர், இன்று ரஷ்ய அதிபர் புதினை சந்தித்து ஆலோசனை நடத்தவுள்ளேன் என்று தெரிவித்தார்

அமெரிக்க ராணுவம் ஈரானின் ஃபோர்டோ , இஸ்ஃபஹான் மற்றும் நடான்ஸ் அணுசக்தி தளங்கள் மீது தாக்குதல்களை நடத்தியதாகத் அதிபர் டிரம்ப் தெரிவித்திருந்தார். அமெரிக்காவின் தாக்குதல் சர்வதேச சட்டத்தை மீறுவதாக ஈரான் அணுசக்தி கழகம் கண்டனம் தெரிவித்திருந்தது. ஈரான் மீதான அமெரிக்காவின் தாக்குதலை தொடர்ந்து, போரில் அதிகாரப்பூர்வமாக இணைந்துவிட்டோம் என ஏமன் ராணுவம் அறிவித்துள்ளது.

செங்கடல் பகுதியில் உள்ள கப்பல்களை குறிவைத்து தாக்குதல் நடத்த உள்ளதாக அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளுக்கு ஏமன் எச்சரிக்கை விடுத்துள்ளது. இந்நிலையில், ஈரான் வெளியுறவுத்துறை அமைச்சர் செய்யத் அப்பாஸ் அரக்சி, ரஷ்யா செல்லவுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

இஸ்தான்புல்லில் செய்தியாளர்களை சந்தித்து பேசிய ஈரான் வெளியுறவுத்துறை அமைச்சர், இன்று ரஷ்ய அதிபர் புதினை சந்தித்து ஆலோசனை நடத்தவுள்ளேன். ரஷ்யாவுடன் இணைந்து செயல்படுவோம் என்று தெரிவித்தார்.

### ஹமாஸ் ஆயுதக்குழுவால் கடத்தப்பட்ட
# இஸ்ரேல் பணய கைதிகளில் மூன்று பேர் சடலமாக மீட்பு

**காசா முனை, ஜூன் 23-**

ஹமாஸ் ஆயுதக்குழுவால் கடத்தப்பட்ட பணய கைதிகளில் 3 பேர் சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக இஸ்ரேல் தெரிவித்துள்ளது.



காசா முனையை நிர்வகித்து வரும் ஹமாஸ் ஆயுதக்குழுவினர் கடந்த 2023ம் ஆண்டு அக்டோபர் 7ம் தேதி இஸ்ரேலுக்குள் புகுந்து பயங்கரவாத தாக்குதல் நடத்தினர். இந்த தாக்குதலில் 1,139 இஸ்ரேலியர்கள் கொல்லப்பட்டனர்.

மேலும், இஸ்ரேலில் இருந்து 251 பேரை பணய கைதிகளாக காசா முனைக்கு ஹமாஸ் கடத்தி சென்றது. இதையடுத்து, ஹமாஸ் ஆயுதக்குழு மீது போர் அறிவித்த இஸ்ரேல் காசா முனையின் அதிரடி தாக்குதல் நடத்தி வருகிறது. அதேவேளை, பணய கைதிகளில் பலரை ஒப்பந்த அடிப்படையிலும், ராணுவ நடவடிக்கை மூலமும் இஸ்ரேல் மீட்டுள்ளது.

பணய கைதிகளில் சிலர் ஹமாஸ் ஆயுதக்குழுவினரால் கொல்லப்பட்ட நிலையில் அவர்களின் சடலங்களும் மீட்கப்பட்டுள்ளன. தற்போதைய நிலவரப்படி, ஹமாஸ் ஆயுதக்குழுவின் பிடியில் இன்னும் 50 பேர் பணய கைதிகளாக உள்ளனர். இதில் 25க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளதாக தகவல் வெளியாகி இருக்கிறது. அதேவேளை, இஸ்ரேல், ஹமாஸ் இடையேயான போரில் காசாவில் 55 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். 1 லட்சத்திற்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர். இந்த போர் ஓராண்டுக்குமேல் தொடர்ந்து நீடித்து வருகிறது.

இந்நிலையில், அக்டோபர் 7ம் தேதி பயங்கரவாத தாக்குதலின் போது ஹமாஸ் ஆயுதக்குழுவால் காசாவுக்குள் கடத்தி செல்லப்பட்ட பணய கைதிகளில் 3 பேர் சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக இஸ்ரேல் ராணுவம் இன்று அறிவித்துள்ளது. பணய கைதைகளாக கடத்தி செல்லப்பட்டு ஹமாஸ் ஆயுதக்குழுவால் கொல்லப்பட்ட அப்ரா கிதர், ஜொனாதன் சமிரனோ, ஷாய் லிவின்சன் ஆகிய 3 பேரின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளனர். மீட்கப்பட்ட 3 பேரின் சடலங்களும் இறுதிச்சடங்கிற்காக உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. அதேவேளை, ஹமாஸ் ஆயுதக்குழுவால் கடத்தப்பட்டு இன்னும் 50 பேர் காசா முனையில் பணய கைதிகளாக உள்ளனர்.

### ஈரான் மீது அமெரிக்காவின் தாக்குதல்:
# அதிபர் ட்ரம்புக்கு நெதன்யாகு நன்றி

**டெல் அவிவ், ஜூன் 23-**

ஈரானின் மூன்று அணுசக்தி தளங்கள் மீது அமெரிக்கா குண்டுவீசி தாக்குதல் நடத்தியதற்கு இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு அதிபர் டிரம்ப்புக்கு நன்றி தெரிவித்துள்ளார்.

டிரம்ப் தலைமை "மத்திய கிழக்கு மற்றும் அதற்கு அப்பால் செழிப்பு மற்றும் அமைதியான எதிர்காலத்திற்கு வழிவகுக்கும் வரலாற்றின் ஒரு மையப்புள்ளியை உருவாக்கியுள்ளது என்று கூறிய நெதன்யாகு தாக்குதல் முடிந்தவுடன் அதிபர் டிரம்பிடம் இருந்து தனக்கு உடனடியாக அழைப்பு வந்ததாக தெரிவித்தார்.

ஆபரேஷன் ரைசிங் லயன், இஸ்ரேல் உண்மையிலேயே அற்புதமான காரியங்களைச் செய்துள்ளது. ஆனால் ஈரானின் அணுசக்தி வசதிகளுக்கு எதிரான இன்றைய நடவடிக்கையில், அமெரிக்கா உண்மையிலேயே நிகரற்றதாக இருந்துள்ளது. பூமியில் வேறு எந்த நாடும் செய்ய முடியாததை அது செய்துள்ளது," என்று நெதன்யாகு சிலாகித்தார்.

இந்திய நேரப்படி நேற்று அதிகாலையில், அமெரிக்கா ஈரானின் ஃபோர்டோ, நடான்ஸ், மற்றும் இஸ்ஃபஹான் ஆகிய மூன்று அணுசக்தி வசதிகள் மீது தாக்குதல் நடத்தியது. ஈரானின் மிகவும் மேம்பட்ட வசதியான ஃபோர்டோ, ஒரு மலைக்குள் கட்டப்பட்டுள்ளது. இது அமெரிக்காவின் "பங்கர் பஸ்டர்" ஆயுதத்தால் தாக்கப்பட்டதாக கூறப்படுகிறது.

### ஈரான் மீது திடீர் தாக்குதல்:
# அமெரிக்காவுக்கு பாக்., கண்டனம்

**லாகூர், ஜூன் 23-**

ஈரான் மீதான அமெரிக்காவின் தாக்குதலுக்கு பாகிஸ்தான் கண்டனம் தெரிவித்துள்ளது.

அமெரிக்க ராணுவம் (இந்திய நேரப்படி நேற்று அதிகாலை), ஈரானின் ஃபோர்டோ *(Fordo)*, இஸ்ஃபஹான் *(Isfahan)* மற்றும் நடான்ஸ் *(Natanz)* அணுசக்தி தளங்கள் மீது தாக்குதல்களை நடத்தியதாகத் அதிபர் டிரம்ப் தெரிவித்திருந்தார். அமெரிக்காவின் தாக்குதல் சர்வதேச சட்டத்தை மீறுவதாக ஈரான் அணுசக்தி கழகம் கண்டனம் தெரிவித்திருந்தது.

இந்நிலையில் அமெரிக்க தாக்குதலில் பொதுமக்களுக்கு எந்தவித பாதிப்பில்லை என்று ஈரான் விளக்கம் அளித்துள்ளது. இந்நிலையில், ஈரான் மீதான அமெரிக்காவின் தாக்குதலுக்கு பாகிஸ்தான் கண்டனம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக பாகிஸ்தான் வெளியிட்டுள்ள அறிக்கையில், "ஈரான் மீதான அமெரிக்காவின் தாக்குதல் அனைத்து சர்வதேச சட்டங்களுக்கும் எதிரானது. தாக்குதலில் இருந்து தங்களை தற்காத்துக்கொள்ள ஈரானுக்கு சட்டப்பூர்வ அதிகாரம் உள்ளது" என தெரிவித்துள்ளது.

அமெரிக்க அதிபர் டிரம்புக்கு அமைதிக்கான நோபல் பரிசு வழங்க வேண்டும் என நேற்று பாகிஸ்தான் பரிந்துரை செய்திருந்த நிலையில், தற்போது அமெரிக்காவுக்கு பாகிஸ்தான் கண்டனம் தெரிவித்துள்ளது.

# அமெரிக்காவுக்கு பதிலடி: ஈரான் கடும் எச்சரிக்கை

**டெஹ்ரான், ஜூன் 23-**

சுய பாதுகாப்பு சார்ந்து சட்டபூர்வமான பதிலடி மூலம் ஈரானின் இறையாண்மை மற்றும் மக்கள் பாதுகாக்கப்படுவார்கள் என்று ஈரான் தெரிவித்துள்ளது.

ஈரானில் அமைந்துள்ள அணுசக்தி நிலையங்கள் மீது அமெரிக்கா தாக்குதல் நடத்தியது. இதை அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப் உறுதி செய்தார். இந்நிலையில், இது தொடர்பாக ஈரான் கண்டனம் தெரிவித்துள்ளது.

அமெரிக்காவின் தாக்குதலுக்கு ஈரானின் வெளியுறவுத்துறை அமைச்சர் அப்பாஸ் அரக்ஸி கண்டனம் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக எக்ஸ் தளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், "ஐ.நா பாதுகாப்பு கவுன்சிலின் நிரந்தர உறுப்பினராக உள்ள அமெரிக்கா, ஈரானின் அணுசக்தி நிலையங்கள் மீது தாக்குதல் நடத்தியதன் மூலம் ஐ.நா சாசனம், சர்வதேச சட்டம் மற்றும் அணுக்கரு பரவாமை ஒப்பந்தம் உள்ளிட்டவற்றை மீறியுள்ளது. ஐ.நா சாசனம் மற்றும் அதன் விதிகளின்படி, சுய பாதுகாப்பு சார்ந்து சட்டபூர்வமான பதிலடி மூலம் ஈரானின் இறையாண்மை மற்றும் மக்கள் பாதுகாக்கப்படுவார்கள்" என தெரிவித்துள்ளார்.

முன்னதாக, ஈரான் மீதான தாக்குதல் தொடர்பாக அதிபர் ட்ரம்ப் கூறுகையில் "ஈரானின் அணுசக்தி நிலையங்களை அழிப்பதும், அரசு ஆதரவு பெற்ற பயங்கரவாத அணு ஆயுத அச்சுறுத்தலுக்கு முற்றுப்புள்ளி வைப்பதும் தான் அமெரிக்காவின் முதல் நோக்கம். அமெரிக்கா மேற்கொண்ட தாக்குதலில் ஈரானின் முக்கிய அணுசக்தி நிலையங்கள் அழிக்கப்பட்டன. ஃபோர்டோ, நடான்ஸ் மற்றும் இஸ்பஹான் உள்ளிட்ட மூன்று அணுசக்தி நிலையங்கள் மீது நாங்கள் மிகவும் வெற்றிகரமான தாக்குதலை நடத்தி முடித்துள்ளோம் என்று தெரிவித்தார்.

# எங்களுக்கு மக்களை பாதுகாக்கும் உரிமை உள்ளது: ஈரான் அமைச்சர்

**தெஹ்ரான், ஜூன் 23-**

ஈரானின் இறையாண்மை, மக்களை பாதுகாக்கும் உரிமை எங்களிடம் உள்ளது: வெளியுறவு துறை மந்திரி

ஈரான் மீது ஆபரேஷன் ரைசிங் லயன் என்ற பெயரில் கடந்த 13-ந்தேதி இஸ்ரேல் தாக்குதல் நடத்தியது. அப்போது, ஈரானின் அணு ஆயுத பயன்பாட்டுக்கு எதிரான தாக்குதல் இது என இஸ்ரேல் தெரிவித்தது. இதனை தொடர்ந்து ஈரானும் பதில் தாக்குதலில் ஈடுபட்டது. இதனால், 2 நாடுகள் இடையே போர் பதற்றம் அதிகரித்து உள்ளது. இந்நிலையில், ஈரானுக்கு எதிராக அமெரிக்காவும் போரில் இறங்கியுள்ளது. ஈரானின் பர்தவ், நடான்ஸ் மற்றும் எஸ்பஹான் ஆகிய 3 அணு உலைகள் மீது தாக்குதல் நடத்தப்பட்டு உள்ளது.

இதுபற்றி ஈரானின் வெளியுறவு துறை மந்திரி சையது அப்பாஸ் அராக்சி நேற்று வெளியிட்டு உள்ள எக்ஸ் பதிவில், ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலின் நிரந்தர உறுப்பினராக அமெரிக்கா உள்ளது. ஆனால், ஐ.நா.வின் விதிகளை மீறி பெரும் தவறை செய்துள்ளது. சர்வதேச சட்டங்களையும் மற்றும் அணு ஆயுத பரவல் தடை சட்டம் ஆகியவற்றை மீறும் வகையில், ஈரானின் அமைதியான அணு ஆயுத நிலைகள் மீது தாக்குதல் நடந்துள்ளது. நேற்று காலை நடந்த சம்பவங்கள், தீராத தொடர் விளைவுகளை கொண்டிருக்கும்.

ஐ.நா.வின் உறுப்பினராக உள்ள ஒவ்வொரு நாடும் இந்த ஆபத்து தரும், சட்டவிரோத மற்றும் குற்ற அணுகுமுறையால் எச்சரிக்கப்பட்டு உள்ளனர். ஐ.நா. அமைப்பின் ஆவணங்கள் மற்றும் அதன் பிரிவுகளின்படி, சுய பாதுகாப்புக்கு சட்டப்பூர்வ அனுமதியளிக்கும் வகையில், ஈரான் தன்னுடைய இறையாண்மை, நலன் மற்றும் மக்களை பாதுகாக்க எல்லாவித வாய்ப்புகளையும் வைத்திருக்கிறது என கூறியுள்ளார். இதனால், ஈரான் சொந்த மக்களை பாதுகாக்கும் வகையிலான நடவடிக்கைகளை எடுப்பதுடன், இறையாண்மையை பாதுகாக்கும் உரிமை தங்களிடம் உள்ளது என்ற வகையில் தீவிர பதில் தாக்குதலிலும் ஈடுபட கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

### ஈரான் தாக்குதல் அச்சம்:
# நியூயார்க், லாஸ் ஏஞ்சல்ஸ் உள்ளிட்ட நகரங்களில் உச்சகட்ட பாதுகாப்பு

**அமெரிக்கா,ஜூன் 23-**

அமெரிக்காவின் முக்கிய நகரங்களான லாஸ் ஏஞ்சல்ஸ், நியூயார்க் மற்றும் வாஷிங்டன் டிசி ஆகியவற்றில் தீவிர பாதுகாப்பு எச்சரிக்கை நிலையில் உள்ளன.

அமெரிக்க இராணுவம், ஈரானில் உள்ள இஸ்ஃபஹான், ஃபோர்டோ மற்றும் நடான்ஸ் ஆகிய மூன்று முக்கிய அணுசக்தி நிலையங்கள் மீது குண்டுவீசி தாக்குதல் நடத்தின. இதைத்தொடர்ந்து அமெரிக்காவின் முக்கிய நகரங்களான லாஸ் ஏஞ்சல்ஸ், நியூயார்க் மற்றும் வாஷிங்டன் டிசி ஆகியவற்றில் தீவிர பாதுகாப்பு எச்சரிக்கை நிலையில் உள்ளன.

இந்த நகரங்களில் கூடுதல் பாதுகாப்புப் படைகள் குவிக்கப்பட்டு, பொதுமக்களுக்கு எச்சரிக்கை வழங்கப்பட்டுள்ளன. நியூயார்க் நகர காவல்துறை வெளியிட்டுள்ள அறிவிப்பில், நகரின் மத, கலாச்சார மற்றும் முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் கூடுதல் படைகள் நிறுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஈரானில் உருவாகி வரும் சூழ்நிலையை உன்னிப்பாகக் கண்காணித்து வருவதாகவும், எந்தவொரு சாத்தியமான அச்சுறுத்தலையும் எதிர்கொள்ள மத்திய படைகளுடன் ஒருங்கிணைந்து செயல்படுவதாகவும் கூறியுள்ளது.

வாஷிங்டன் டிசியின் பெருநகர காவல்துறை வெளியிட்டுள்ள அறிக்கையில், ஈரானில் நடக்கும் நிகழ்வுகளைக் கண்காணித்து வருவதாகவும், குடிமக்களை பாதுகாக்க மாகாண மற்றும் மத்திய அதிகாரிகளுடன் இணைந்து செயல்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. தற்போது அச்சுறுத்தல்கள் எதுவும் இல்லை என்றாலும், மத தளங்களில் கண்காணிப்பு அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும், பொதுமக்கள் விழிப்புடன் இருக்குமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

லாஸ் ஏஞ்சல்ஸ் காவல் துறையும் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக பாதுகாப்பை அதிகரித்துள்ளது. வழிபாட்டுத் தலங்கள் மற்றும் பொதுக் கூட்டங்கள் நடைபெறும் இடங்கள் போன்ற இடங்களில் பாதுகாப்பிற்கான அச்சுறுத்தல்களை உன்னிப்பாகக் கண்காணித்து வருவதாக லாஸ் ஏஞ்சல்ஸ் மேயர் கரேன் பாஸ் தெரிவித்துள்ளார். தற்போது நம்பகமான அச்சுறுத்தல்கள் எதுவும் இல்லை என்றும், ரோந்துப் பணிகள் அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.


## ஹவாய் தீவில் வெடித்து சிதறிய எரிமலை

**ஹவாய் தீவு, ஜூன் 23-**

அமெரிக்காவின் ஹவாய் தீவில் கிலாவியா எரிமலை அமைந்துள்ளது. கிலாவியா எரிமலை சமீப காலமாக அடிக்கடி வெடித்துச் சிதறுவது வழக்கம். இந்நிலையில், கிலாவியா எரிமலை பயங்கர சத்தத்துடன் வெடித்துச் சிதறியுள்ளது. இதன் காரணமாக எரிமலையில் இருந்து 1000 மீட்டர் உயரத்திற்கு தீக்குழம்பு வெளியேறியுள்ளது.

அதில் இருந்து வெளியேறிய சாம்பல் அருகில் உள்ள ஹலேமா தேசிய பூங்காவில் பரவியதால் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக பூங்கா மூடப்பட்டது. மேலும் எரிமலையைச் சுற்றியுள்ள பகுதியில் வசிக்கும் மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேறுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

**23-06-2025**



## இன்றைய ராசி பலன்கள்

**மேஷம்:-** சிறுசிறு பிரச்சனைகள் உங்களை கஷ்டத்துக்கு உள்ளாக்கலாம். எதிர்பார்த்த இனங்களில் இருந்து பணவரவு இல்லாமல் எரிச்சல் உண்டாகும். எடுத்த காரியங்கள் வெற்றி பெற இடைவிடாத உழைப்புத் தேவை.

**ரிஷபம்:-** சம்பாத்தியம் அதிகரிப்பதால், பொருளாதார நிலை திருப்திகரமாக இருக்கும். வியாபாரத்தில் எதிர்பார்த்த முன்னேற்றம் ஏற்படும். தொழிலில் முன்னேற்றம், பணியில் இருப்பவர்களுக்கு பதவியுயர்வு கிடைக்கும்.

**மிதுனம்:-** தேவையற்ற பயணங்கள் ஏற்படலாம். மங்கையரால் ஏற்படும் மாறாத செலவுகளால் பணமுடை ஏற்பட்டுக் கடன் பெறும் சூழ்நிலை உருவாகலாம். கோபத்தால் காரியங்கள் கெடும்.

**கடகம்:-** பெரிய மனிதர்களின் நட்பால் பேருதவிகள் கிடைக்கும். திருமணம் ஆகாதவர்களுக்கு கவலை வேண்டாம். சீக்கிரம் கால்கட்டு விழும். வெளிநாட்டு வாய்ப்புகள் கிடைக்கும்.

**சிம்மம்:-** வாக்கு வன்மையால் சாதுர்யத்தால், எடுத்த காரியங்கள் அனைத்திலும். வெற்றி அடைவது உறுதி, அனைவரையும் கவர்வீர்கள். புதிய உத்தியோக வாய்ப்புகள், பதவி உயர்வு ஆகியவற்றை எதிர்பார்க்கலாம்.

**கன்னி:-** பல பயணங்கள் ஏற்படலாம். அதில் ஒன்று புண்ணியப் பயணமாகி சுகானுபவங்கள் ஏற்படும். மாணவர்களுக்கு கல்வியில் முன்னேற்றம் ஏற்படும். வாழ்க்கையில் இனிய மாற்றங்களை எதிர்பார்க்கலாம்.

**துலாம்:-** சாதகமற்ற சூழ்நிலை நிலவுவதால், வழக்குகளை ஒத்திப் போடுவது நல்லது. அதிகாரிகள் போடும் உத்தரவுகளை மதித்து நடந்தால் முன்னேற்றம் ஏற்படும். மனதில் எண்ணியபடி எண்ணிய காரியங்கள் ஏற்றம் தரும்.

**விருச்சிகம்:-** மனையாளின் ஒத்துழைப்பு மட்டற்ற மகிழ்ச்சி தரும். தனவரவு கூடும். புதிய முகநூல் நண்பர்கள் சேர்க்கையால், புதிய விஷயங்களைக் கற்றுக் கொள்வீர்கள். எண்ணிய எண்ணியாங்கு நடக்கும்.

**தனுசு:-** எல்லா வளமும் பெறும் இனிய நாள். இனிய சுற்றுலாப் பயணங்களின் இன்பம் பெருகும். பெண்ணின் சிநேகமும், தனக்கெனத் தனி வீடு அமையும். குடும்பத்தில் சுப காரிய கொண்டாட்டங்கள் நிறைவேறும்.

**மகரம்:-** உங்கள் பிள்ளைகளின் ஆரோக்கியத்தில் அக்கறை செலுத்துங்கள். வண்டி வாகனங்களில் செல்லும் போது மிகவும் எச்சரிக்கையுடன் செல்லவும். எல்லாவிதத்திலும் செலவுகள் கூடும். நிதானமாக செயல்படுங்கள்.

**கும்பம்:-** எடுக்கும் காரியங்கள் அனைத்தும் ஏனோ தானோ என முடிக்கும் சூழ்நிலை உருவாகும். இயலாமை காரணமாக இல்லத்தில் உள்ளவர்கள் மீது ஏற்படும் எரிச்சலை குறைத்தால் அமைதி உண்டாகும்,

**மீனம்:-** நல்ல உடை உடுத்தி, நாகரீகமாக, மிடுக்காக மற்றவர்களை கவரும் வண்ணம் நடந்துகொள்வீர்கள். உங்கள் தேஜஸ் கூடும். தேவைக்கு அதிகமாகவே தனவரவு உண்டாகும்.

# ஈரானில் இருந்து மேலும் 280 இந்தியர்கள் நாடு திரும்பினர்

**டெல்லி, ஜூன் 23-**

ஈரானில் இருந்து மேலும் 280 இந்தியர்கள் நாடு திரும்பினர்.



இஸ்ரேல், ஈரான் இடையே பல ஆண்டுகளாக மோதல்போக்கு நிலவி வருகிறது. இதனிடையே, கடந்த 13ம் தேதி அதிகாலை ஈரானில் உள்ள அணு ஆராய்ச்சி மையங்கள், ஏவுகணை சேமிப்பு கிடங்குகள், கச்சா எண்ணெய் சேமிப்பு கிடங்குகள் உள்பட பல்வேறு இடங்களை குறிவைத்து இஸ்ரேல் தாக்குதல் நடத்தியது.

இந்த தாக்குதலுக்கு பதிலடியாக இஸ்ரேல் மீது ஈரான் தாக்குதல் நடத்தியது. இரு தரப்பிற்கும் இடையே தொடர்ந்து நேற்று 10வது நாளாக மோதல் நடைபெற்று வருகிறது. அதேவேளை, ஈரானின் அணு ஆராய்ச்சி மையங்கள் மீது அமெரிக்கா தாக்குதல் நடத்தியது. இதனால் மத்திய கிழக்கில் பதற்றமான சூழ்நிலை நிலவுகிறது.

இதன் காரணமாக ஈரானில் வசித்து வரும் வெளிநாட்டினர் தங்கள் நாடுகளுக்கு திரும்பிக்கொண்டிருந்தனர். இந்தியாவை சேர்ந்த பலரும் ஈரானில் தங்கில் கல்வி, மருத்துவம், தொழில் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் செயல்பட்டு ஈடுபட்டு வந்தனர். அவர்கள் பாதுகாப்பு கருதி இந்தியாவுக்கு திரும்பிக் கொண்டிருக்கின்றனர்.

அந்த வகையில் ஈரானில் இருந்து சிறப்பு விமானங்கள் மூலம் ஏற்கனவே 1000-க்கும் மேற்பட்ட இந்தியர்கள் நாடு திரும்பியுள்ளனர். இதில் பெரும்பாலானோர் ஈரானில் கல்வி பயின்று வந்த மாணவ-மாணவியர் ஆவர். தற்போது மேலும், 280 இந்தியர்கள் நாடு திரும்பியுள்ளனர். ஈரானின் மெஹன் விமானம் மூலம் டெல்லிக்கு வந்துள்ளனர். இதில் 200க்கும் மேற்பட்டோர் ஜம்மு-காஷ்மீரை சேர்ந்த மாணவ - மாணவியர் ஆவர்.

# எகிப்து அமைச்சரின் இந்திய பயணம் திடீர் ஒத்திவைப்பு

**டெல்லி, ஜூன் 23-**

எகிப்து வெளியுறவுத் துறை மந்திரியின் இந்திய பயணம் ஒத்திவைக்கப்பட்டுள்ளது



எகிப்து வெளியுறவுத் துறை மந்திரி பதிர் அப்தெலாட்டி. இவர் 2 நாட்கள் அரசு முறை பயணமாக இன்று இந்தியா வரவிருந்தார். அவர் இந்திய வெளியுறவுத்துறை மந்திரி ஜெய்சங்கர், வர்த்தகத்துறை மந்திரி பியூஷ் கோயல் உள்ளிட்டோரை சந்திக்க திட்டமிட்டிருந்தார்.

இந்நிலையில், பதிர் அப்தெலாட்டியின் இந்திய பயணம் ஒத்திவைக்கப்பட்டுள்ளது. இஸ்ரேல் - ஈரான் மோதல், மத்திய கிழக்கில் நிலவிவரும் பதற்றமான சூழ்நிலை போன்றவற்றின் காரணமாக எகிப்து வெளியுறவுத்துறை மந்திரியின் இந்திய பயணம் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

பதிர் அப்தெலாட்டியின் இந்திய பயணம் தற்காலிகமாக ஒத்திவைக்கப்பட்டுள்ளதாகவும் விரைவில் அவர் இந்தியா வருவார் என்றும் வெளியுறவுத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

# பிறந்தநாள்: விஜய்க்கு அரசியல் கட்சித் தலைவர்கள் வாழ்த்து



**சென்னை, ஜூன் 23-**

தமிழக வெற்றிக் கழகம் கட்சியின் தலைவர் நேற்று தனது 51-வது பிறந்தநாளை கொண்டாடினார்.

இதனை முன்னிட்டு ரசிகர்கள், திரைப் பிரபலங்கள் மற்றும் பல்வேறு அரசியல் தலைவர்கள் விஜய்க்கு வாழ்த்து தெரிவித்து வருகின்றனர்.

தமிழிசை சவுந்தரராஜன்: நாளைய தீர்ப்பு" - இல் ஆரம்பித்து "அழகிய தமிழ் மகனாக" வலம் வந்து "திருப்பாச்சி"-இல் தங்கை பாசத்தையும் "சிவகாசி" இல் தாயின் அன்பையும் பிரதிபலித்து "துப்பாக்கி" ஏந்தி தீவிரவாதிகளை அழித்து தேச பக்தியை வெளிப்படுத்தி "வாரிசு" அரசியலை எதிர்த்தாலும் தனக்கு வந்த இன்னல்களிலிருந்து "சுறா" வாக நீந்தி "கில்லி" யாக வெற்றி கண்ட "தமிழன்" "ஜனநாயகன்" தம்பி விஜய்க்கு என் மனமார்ந்த பிறந்தநாள் வாழ்த்துகளை தெரிவித்துக்கொள்கிறேன். "புதிய கீதை" வழியில் தீய சக்திகளை எதிர்த்து நல்லது நடக்க துணை நிற்க வாழ்த்து கிறேன் என்று தெரிவித்துள்ளார்.

அன்புமணி ராமதாஸ்: தம்பி விஜய் நீண்ட, நோயில்லா வாழ்வு பெற்று பொதுவாழ்க்கையில் புதிய சாதனைகளை படைக்க வாழ்த்துகிறேன் என்று தெரிவித்துள்ளார்.

சீமான்: தனித்துவமிக்க நடிப்பு, ஈர்க்கும்படியான நடனம், ரசிக்கத்தக்க நகைச்சுவை, கதாபாத்திரங்களை உள்வாங்கிக் கொண்டு, உயிரோட்டமாகப் பிரதிபலிக்கும் திறன் என எல்லா ஆற்றல்களையும் வளர்த்துக் கொண்டு மக்களை மகிழ்வித்து. தமிழ்த்திரைத்துறையில் உச்சம் தொட்ட ஆகச்சிறந்த திரைக்கலைஞன். தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவர் அன்புத்தம்பி விஜய்க்கு என்னுடைய உளப்பூர்வமான பிறந்த நாள் நல்வாழ்த்துகள் என்று தெரிவித்துள்ளார்.

ஜி.கே.வாசன்: விஜய் தமிழக மக்கள் நலன் காக்கும் பணியாற்ற நல்ல உடல் நலத்துடன், நீடூழி வாழ தமிழ் மாநில காங்கிரஸ்(மூ) சார்பில் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

டி.டி.வி. தினகரன்: விஜய் நீண்ட ஆயுளோடும் பூரண உடல்நலத்துடனும், மக்கள் பணியை தொடர எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கிறேன் என்று தெரிவித்துள்ளார். அண்ணாமலை: சகோதரர் விஜய் நல்ல உடல் நலத்துடன், நீண்ட ஆயுளுடன், தனது மக்கள் பணிகள் தொடர, இறைவனை வேண்டிக் கொள்கிறேன் என்று தெரிவித்துள்ளார்.

# முருகப்பெருமான் தமிழ்நாடு முதல்வர் பக்கம் இருக்கிறார்

## அமைச்சர் சேகர்பாபு பேட்டி

**சென்னை, ஜூன் 23-**

"எது ஆன்மிகம், எது அரசியல் என்பதை ஆண்டவன் பார்த்துக் கொண்டிருக்கின்றான். அவர்கள் நடத்துகின்ற மாநாடு முழுக்க முழுக்க அரசியல் மாநாடு," என்று இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் சேகர்பாபு கூறியுள்ளார்.

இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் சேகர்பாபு சென்னை அயனாவரம், காசி விஸ்வநாதர் கோவிலில் பொது நல நிதி மற்றும் திருக்கோவில் நிதி மூலம் ரூ.97 லட்சம் மதிப்பீட்டில் குளத்தை சீரமைக்கும் பணிகளை நேற்று (ஜூன் 22) தொடங்கி வைத்தார்.

பின்னர் செய்தியாளர்களைச் சந்தித்த அவர் கூறியதாவது: "தமிழ் கடவுள் முருகனுக்கு பெருமை சேர்க்க கூடிய ஆட்சியாக இந்த ஆட்சி திகழ்கிறது. எந்த ஆட்சியிலும் அனைத்துலக முத்தமிழ் முருகன் பக்தர் மாநாடு நடத்தப்படவில்லை. வருகின்ற ஜூலை 7ம் தேதி அன்று குடமுழுக்கு நடைபெறும் திருச்செந்தூர் கோயிலுக்கு ரூ.400 கோடி மதிப்பில் திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகு பழனி, தண்டாயுதபாணி சுவாமி கோவில் உள்பட 117 திருக்கோவில்களுக்கு குடமுழுக்கு நடத்தப்பட்டுள்ளது.

இந்த ஆட்சியில் தான் தமிழ்க் கடவுள் முருகனுக்கு பெருமைக்கு பெருமை சேர்த்து வருகின்றோம். ஆகவே முருக பெருமான் முழுவதுமாக எங்கள் முதல்வர் பக்கத்தில் இருக்கின்றார். எது ஆன்மிகம், எது அரசியல் என்பதை ஆண்டவன் பார்த்துக் கொண்டிருக்கின்றான். அவர்கள் நடத்துகின்ற மாநாடு முழுக்க முழுக்க அரசியல் மாநாடு. நிச்சயமாக இது போன்ற போலியான நடவடிக்கைகளுக்கு இறைவன் எந்நாளும் துணை இருக்க மாட்டார். இவ்வாறு அவர் கூறினார்.

## தி.மு.க. கூட்டணியில்

# அதிக தொகுதிகளில் போட்டியிட ம.தி.மு.க. பொதுக்குழுவில் தீர்மானம்




**ஈரோடு, ஜூன் 23-**

தி.மு.க. கூட்டணியில் ம.தி.மு.க. அதிக தொகுதிகள் பெற்று போட்டியிட வேண்டும் என்று ஈரோட்டில் நடந்த பொதுக்குழுவில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

ம.தி.மு.க. 31-வது பொதுக்குழு நேற்று காலை 10 மணி அளவில் ஈரோடு, பெருந்துறை சாலையில் உள்ள பரிமளம் மகாலில், அவைத்தலைவர் ஆடிட்டர் அர்ஜூன்ராஜ் தலைமையில் நடைபெற்றது. ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ எம்.பி., பொருளாளர் மு.செந்திலதிபன், முதன்மைச் செயலாளர் துரை வைகோ எம்.பி., துணைப்பொதுச்செயலாளர்கள் மல்லை சி.ஏ.சத்யா, செஞ்சி ஏ.கே.மணி, ஆடுதுறை இரா.முருகன், தி.மு.இராசேந்திரன், டாக்டர் ரொஹையா மற்றும் பொதுக்குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

இந்த பொதுக்குழுவில், 2026-ம் ஆண்டு சட்டசபை தேர்தலிலும் தி.மு.க. தலைமையிலான கூட்டணி மாபெரும் வெற்றி பெற்று நல்லாட்சி தொடர வேண்டும், தேர்தல் ஆணையத்தின் அங்கீகாரத்தை பெறுவதற்கு ஏதுவாக கூடுதல் தொகுதிகளைக் கூட்டணியில் பெற்று போட்டியிட வேண்டும், பல்வேறு சதிகளின் மூலமாக தமிழ் மொழியையும், தமிழரின் தொன்மை வரலாற்றையும் இருட்டடிப்பு செய்ய முயலும் பாசிச சக்திகளை முறியடிக்க வேண்டியது தமிழ் மக்களின் கடமை ஆகும்.

கட்டாய கல்வி உரிமை சட்டத்தின் கீழ் பள்ளிகளில் மாணவர்கள் சேர்க்கைக்கு நிதியை ஒன்றிய அரசு விடுவிக்க வேண்டும். வக்ப் திருத்த சட்டத்தையும் திரும்பப் பெறுவதற்கு ஜனநாயக முற்போக்கு சக்திகள் இணைந்து போராட வேண்டும். மருத்துவ காலி பணியிடங்களை விரைந்து நிரப்ப வேண்டும். முழு மதுவிலக்கு என்பதை நடைமுறைப்படுத்தும் வகையில் படிப்படியாக டாஸ்மாக் மதுக்கடைகளை மூட வேண்டும் என்பன உள்ளிட்ட 28 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

# தமிழ்நாடு ஒருநாளும் இந்தி திணிப்பை ஏற்காது: ஆ.ராசா



**சென்னை, ஜூன் 23-**

தமிழ்நாடு ஒருநாளும் இந்தித் திணிப்பை ஏற்காது என்று ரயில்வே அமைச்சருக்கு ஆ.ராசா எம்.பி. கடிதம் எழுதியுள்ளார்.

மத்திய ரயில்வே அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ்-க்கு திமுக எம்.பி. ஆ.ராசா எழுதிய கடிதத்தில் கூறியிருப்பதாவது:- இந்திய ரயில் நிலையங்களில் இந்திப் பயன்பாடு நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது.

குறிப்பாக எனது நீலகிரி நாடாளுமன்ற தொகுதியில் 100 ஆண்டுகள் பழமை கொண்ட #உதகமண்டலம் ரயில் நிலையத்தில் இந்தியில் நிறுவப்பட்டுள்ள பதாகைகள், தமிழ் மக்களின் உணர்வுகளை பாதிக்கக்கூடிய வகையில் உள்ளன. உடனடியாக அவற்றை அகற்ற உரிய அதிகாரிகளுக்கு அறிவுறுத்த கேட்டுக் கொள்கிறேன். தமிழ்நாடு ஒருநாளும் இந்தித் திணிப்பை ஏற்காது.

உதகை ரயில் நிலையத்தில் இந்தி மொழியை விளம்பரப்படுத்தும் வகையில் மற்றும் பாரதியாரின் வாசகத்தை இந்து மகாசபை நிறுவனர் மதன் மோகன் மாளவியா எழுதியதாக வைக்கப்பட்டுள்ள பலகைகளை அகற்றுங்கள் என கூறினார்..

# குமரியில் குவிந்த சுற்றுலா பயணிகள்

**கன்னியாகுமரி, ஜூன் 23-**

வார விடுமுறையை யொட்டி, கன்னியாகுமரியில் சுற்றுலா பயணிகள் குவிந்தனர்.

உலக புகழ்பெற்ற சுற்றுலா தலமான கன்னியாகுமரிக்கு தினமும் ஆயிரக்கணக்கான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் வந்து செல்கிறார்கள். விடுமுறை நாட்களிலும், பண்டிகை நாட்களிலும் அதிகளவில் சுற்றுலா பயணிகள் கன்னியாகுமரிக்கு வருகை தருவது வழக்கம்.

இந்தநிலையில் நேற்று ஞாயிற்றுக்கிழமை விடுமுறை என்பதால் அதிகாலையிலேயே ஏராளமான சுற்றுலா பயணிகள் கன்னியாகுமரியில் குவிந்தனர். அவர்கள் முக்கடலும் சங்கமிக்கும் திரிவேணி சங்கமம் கடற்கரை பகுதியில் திரண்டு ஆர்வத்துடன் சூரிய உதயத்தை பார்த்து ரசித்தனர். பலர் தங்களது செல்போனில் படம் எடுத்து மகிழ்ந்தனர்.

அதைத்தொடர்ந்து சுற்றுலா பயணிகள் முக்கடல் சங்கமத்தில் புனித நீராடி பகவதி அம்மன் கோவிலில் சாமி தரிசனம் செய்தனர். இதையடுத்து கடலின் நடுவே அமைந்துள்ள விவேகானந்தர் நினைவு மண்டபம், 133 அடி உயர திருவள்ளுவர் சிலை ஆகியவற்றை பார்வையிட படகு துறையில் நீண்ட நேரம் வரிசையில் காத்திருந்தனர்.

பின்னர் படகில் உற்சாகத்துடன் சென்று விவேகானந்தர் நினைவு மண்டபத்தை பார்த்து விட்டு திரும்பினர்.

இதேபோல் விவேகானந்த கேந்திர வளாகத்தில் அமைந்துள்ள பாரத மாதா கோவில், ராமாயண தரிசன சித்திர கண்காட்சி கூடம், காந்தி நினைவு மண்டபம், காமராஜர் மணிமண்டபம், அரசு அருங்காட்சியகம், கலங்கரை விளக்கம், மீன் காட்சி சாலை, அரசு பழத்தோட்டம் உள்பட அனைத்து இடங்களிலும் சுற்றுலா பயணிகள் கூட்டம் அலைமோதுகிறது.

கடற்கரையில் சுற்றுலா பயணிகளின் கூட்டம் அதிகமாக காணப்பட்டதால் போலீசாரும், கடலோர பாதுகாப்பு குழும போலீசாரும், சுற்றுலா பாதுகாவலர்களும் தீவிர கண்காணிப்பு பணியில் ஈடுபட்டு இருந்தனர்.

## இ.பி.எஸ். கார்டூன் விவகாரம்:

# புதுச்சேரியில் அ.தி.மு.க. கண்டன ஆர்ப்பாட்டம்



**புதுச்சேரி, ஜூன் 23-**

எடப்பாடி பழனிச்சாமி கார்டூன் விவகாரத்தில் தி.மு.க.வைக் கண்டித்து புதுச்சேரியில் அ.தி.மு.க.வினர் கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அ.தி.மு.க. பொதுச் செயலாளரும், தமிழக எதிர்கட்சித் தலைவருமான எடப்பாடி பழனிச்சாமியை விமர்சித்து கார்டூன் வெளியிட்ட தி.மு.க. தகவல் தொழில்நுட்பப் பிரிவைக் கண்டித்தும், தி.மு.க.வின் சமூக வலைதள பக்கங்களை உடனே முடக்கம் செய்ய வலியுறுத்தியும், தி.மு.க. அரசை குறைந்த பட்சம் 6 மாதத்துக்கு இந்திய தேர்தல் ஆணையம் முடக்கம் செய்யக்கோரியும் புதுச்சேரியில் அ.தி.மு.க.வினர் நேற்று கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

பழைய பேருந்து நிலையம் அண்ணா சிலை அருகில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்துக்கு மாநில செயலாளர் அன்பழகன் தலைமை தாங்கினார். மாநில அவைத் தலைவர் அன்பானந்தம், மாநில அம்மா பேரவை செயலாளரும், முன்னாள் எம்எல்ஏவுமான பாஸ்கர் ஆகியோர் முன்னிலை வகித்தனர். அ.தி.மு.க.வினர் பலர் கலந்து கொண்டு தி.மு.க.வுக்கு எதிராக கோஷங்களை எழுப்பினர்.

பின்னர் அன்பழகன் பேசும்போது, ''பொய்யான வாக்குறுதிகளை கொடுத்து தமிழகத்தில் ஆட்சி அமைத்துள்ள தி.மு.க. அரசு அனைத்து துறைகளிலும் தோல்வி கண்ட அரசாக உள்ளது. தி.மு.க. முதல்வர் ஸ்டாலினின், தவறுகளை ஆதாரப்பூர்வமாக எங்களது பொதுச் செயலாளர் பழனிச்சாமி மக்களிடம் தினந்தோறும் எடுத்துரைத்து வருகிறார். அவருடைய ஆணித்தரமான குற்றச்சாட்டுகளுக்கு பதிலளிக்க திராணியற்ற தமிழக முதல்வர் ஸ்டாலின் தனது கட்சியினரை வைத்து பழனிச்சாமியை விமர்சித்து கார்ட்டூன்களை வெளியிட்டு அற்ப அரசியல் செய்கிறார். தி.மு.க.வை எதிர்ப்பவர்களை தி.மு.க. அரசு காவல்துறையினர்களை ஏவிவிட்டு அடக்குமுறையை கையாண்டு வருகின்றனர். ஆனால் அந்த தி.மு.க.வினரே மற்ற கட்சிகளை அவதூறாக சித்தரித்து வருவது எந்த விதத்தில் நியாயம்'' என தெரிவித்தார்.

# தேர்தல் ஆணைய உத்தரவுக்கு ராகுல் காந்தி கடும் கண்டனம்

**புதுடில்லி, ஜூன் 23-**

வாக்குச்சாவடிகளில் பதிவு செய்யப்பட்ட சி.சி.டிவி. காட்சிகளை, 45 நாட்களில் அழிக்க வேண்டும் என்ற தேர்தல் ஆணையத்தின் உத்தரவிற்கு ராகுல் காந்தி கண்டனம் தெரிவித்துள்ளார்.

வாக்குச்சாவடிகளில் பதிவு செய்யப்பட்ட சி.சி.டிவி. காட்சிகளை, வாக்குப்பதிவு முடிந்த 45 நாட்களில் அழித்துவிட வேண்டும் என்று தேர்தல் ஆணையம் புதிய உத்தரவு ஒன்றை பிறப்பித்திருந்தது. இந்நிலையில் மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி, தேர்தல் ஆணையம் தேர்தல் தொடர்பான தரவுகளை வேண்டுமென்றே அழிக்க முயற்சிப்பதாக மீண்டும் குற்றம் சாட்டியுள்ளார். ராகுல் காந்தி தனது எக்ஸ் பதிவில், "வாக்காளர் பட்டியல்? இயந்திரத்தால் படிக்கக்கூடிய வடிவத்தில் வழங்க மாட்டார்கள். சி.சி.டிவி. காட்சிகள்? சட்டத்தை மாற்றி மறைத்துவிட்டார்கள். தேர்தலின் புகைப்படம்-வீடியோ? இப்போது, 1 வருடத்தில் அல்ல, 45 நாட்களில் அழித்துவிடுவோம். யார் பதில் சொல்ல வேண்டுமோ அவர்களே ஆதாரங்களை அழிக்கிறார்கள். இது தெளிவாகிறது - மேட்ச் பிக்சிங் செய்யப்படுகிறது. மேலும் ஒரு சமரசம் செய்யப்பட்ட தேர்தல் ஜனநாயகத்திற்கு விஷம்'' என்று குறிப்பிட்டுள்ளார். இதற்கு பதிலளித்த தேர்தல் ஆணையம், வாக்குச்சாவடிகளின் வெப்காஸ்டிங் காட்சிகளை பொதுவெளியில் வெளியிடுவது வாக்காளர்களின் தனியுரிமை மற்றும் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலானது என்று தெரிவித்துள்ளது.

தேர்தல் ஆணைய அதிகாரிகள், இத்தகைய கோரிக்கைகள் வாக்காளர்களின் தனியுரிமை, மக்கள் பிரதிநிதித்துவச் சட்டங்கள் 1950 மற்றும் 1951 இன் கீழ் உள்ள சட்ட விதிகள், மற்றும் உச்ச நீதிமன்றத்தின் உத்தரவுகளுக்கு நேர் முரணானது என்று தெரிவித்தனர். காட்சிகளைப் பகிர்வது வாக்காளர்களை அடையாளம் காணவும், வாக்களிக்காதவர்களைக் கண்டறியவும் வழிவகுக்கும். இது சமூக விரோத சக்திகளால் வாக்காளர்கள் அழுத்தம், பாகுபாடு அல்லது அச்சுறுத்தலுக்கு ஆளாக நேரிடலாம். ஒரு குறிப்பிட்ட பூத்தில் ஒரு அரசியல் கட்சிக்கு குறைவான வாக்குகள் கிடைத்திருந்தால், சி.சி.டிவி. காட்சிகளைப் பயன்படுத்தி யார் வாக்களித்தார்கள், யார் வாக்களிக்கவில்லை என்பதைக் கண்டறிந்து, அவர்களைக் குறிவைத்து துன்புறுத்துதல் அல்லது மிரட்டுதல் போன்றவற்றுக்கு வழிவகுக்கும் என்று அதிகாரிகள் மேலும் தெரிவித்தனர்.

# முதல்வரின் வாழ்த்து மகிழ்ச்சி அளிக்கிறது: திருநங்கை ஜென்சி



**சென்னை, ஜூன் 23-**

முதல்வர் வாழ்த்து தெரிவித்தது மகிழ்ச்சி அளிக்கிறது என்று லயோலா கல்லூரியில் ஆங்கில உதவி பேராசிரியராக நியமனம் செய்யப்பட்டுள்ள திருநங்கை ஜென்சி தெரிவித்துள்ளார்.

லயோலா கல்லூரியில் ஆங்கிலத்துறையில் முனைவர் பட்டம் பெற்ற முதல் திருநங்கை ஜென்சி, அக்கல்லூரியில் ஆங்கில உதவி பேராசிரியராக நியமனம் செய்யப்பட்டுள்ளார். அவருக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள எக்ஸ் தள பக்கத்தில்,'' வாழ்த்துகள் டாக்டர். ஜென்சி! உங்களது உழைப்பின் ஒளியால் இன்னும் பலநூறு பேர் கல்விக்கரை சேரட்டும்! தடைகளையும் புறக்கணிப்புகளையும் கல்வி எனும் பேராற்றலால் வெல்லட்டும்!'' என்றார்.

முதல்வரின் வாழ்த்து குறித்து பேசிய டாக்டர் ஜென்சி,'' 'டாக்டர் ஜென்சி' என என்னை குறிப்பிட்டு முதல்வர் வாழ்த்து தெரிவித்தது மகிழ்ச்சி அளிக்கிறது. தமிழகத்தில் உள்ள ஏதாவது ஒரு அரசு கல்லூரியில் எனக்கு பணி நிரந்தரம் செய்து வேலை வழங்க வேண்டும்'' என்றார்.

# தடையை நீக்கக்கோரி பெங்களூருவில் 'பைக் டாக்சி' ஓட்டுநர்கள் பேரணி

**பெங்களூரு, ஜூன் 23-**

கர்நாடகாவில் தடை செய்யப்பட்டுள்ள பைக் டாக்ஸி சேவையை மீண்டும் அனுமதிக்கக் கோரி 8 மாவட்டங்களைச் சேர்ந்த 5,000க்கும் மேற்பட்ட பைக் டாக்ஸி ஓட்டுநர்கள் பெங்களூருவில் பேரணி நடத்தினர். கர்நாடகத்தில் ஓலா, ஊபர், ரேபிடோ உள்ளிட்ட தனியார் டாக்சி நிறுவனங்கள் பைக் டாக்சி சேவையை வழங்கி வருகின்றன. பெங்களூருவில் மட்டும் சுமார் 1.20 லட்சம் பைக் டாக்சிகள் பதிவு செய்யப்பட்டு இயக்கப்பட்டு வந்தன. பைக் டாக்சியால் தங்களது வாழ்வாதாரம் பாதிக்கப்படுவதாக குற்றம் சாட்டிய ஆட்டோ டிரைவர்கள் பைக் டாக்சி சேவைக்கு தடை விதிக்குமாறு கோரி தீவிர போராட்டம் நடத்தினர்.

இதனையடுத்து, கர்நாடக அரசு, இந்த பைக் டாக்சி சேவைக்கு தடை விதித்து உத்தரவிட்டது. இதனால் கர்நாடகத்தில் பைக் டாக்சி சேவை முடிவுக்கு வந்துள்ளது. இதன் காரணமாக பைக் டாக்சி சேவையை வழங்கிய 1.20 லட்சம் இருசக்கர வாகன ஓட்டிகள் மற்றும் அதை நம்பி இருந்த மக்கள் பாதிப்புக்கு உள்ளாகி உள்ளனர்.

இந்நிலையில், கர்நாடகாவில் தடை செய்யப்பட்டுள்ள பைக் டாக்ஸி சேவையை மீண்டும் அனுமதிக்கக் கோரி 8 மாவட்டங்களைச் சேர்ந்த 5,000க்கும் மேற்பட்ட பைக் டாக்ஸி ஓட்டுநர்கள் பெங்களூருவில் பேரணி நடத்தினர். மைசூரு உள்ளிட்ட மாவட்டங்களை சேர்ந்த பைக் டாக்ஸி ஓட்டுநர்கள் இந்த போராட்டத்தில் கலந்து கொண்டனர்.

# ஆந்திர முன்னாள் முதல்வர் ஜெகன் மோகன் கார் டயரில் சிக்கி தொண்டர் பரிதாப பலி

**அமராவதி, ஜூன் 23-**

ஆந்திரப் பிரதேச முன்னாள் முதல்வர் ஒய்.எஸ். ஜெகன் மோகன் ரெட்டியின் கார் கான்வாயில் ஏற்பட்ட விபத்தில், ஒய்.எஸ்.ஆர். காங்கிரஸ் கட்சி தொண்டர் செலி சிங்கையா என்பவர் உயிரிழந்தார்.

இந்த சம்பவம் கடந்த ஜூன் 18ம் தேதி அன்று குண்டூர் மாவட்டத்தில் உள்ள எடுகூரு கிராமத்திற்கு அருகிலுள்ள தேசிய நெடுஞ்சாலையில் நடந்துள்ளது.

ஜெகன் மோகன் ரெட்டி, பால்நாடு மாவட்டத்தில் உள்ள ரெண்டபல்லா கிராமத்தில் தற்கொலை செய்து கொண்ட ஒய்.எஸ்.ஆர்.சி.பி. தொண்டரின் குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறுவதற்காக பயணித்து கொண்டிருந்தார். அப்போது, அவரது கான்வாயைப் பின்தொடர்ந்த பெரும் கூட்டத்தில், செலி சிங்கையா மலர்கள் தூவ முயன்றபோது தவறி விழுந்து, ஜெகனின் காரின் முன் வலது சக்கரத்தின் கீழ் சிக்கி உயிரிழந்தார்.

முதலில், விபத்து ஜெகனின் கான்வாயில் உள்ள மற்றொரு வாகனத்தால் நடந்ததாக குண்டூர் காவல் கண்காணிப்பாளர் சதீஷ் குமார் தெரிவித்திருந்தார். ஆனால், சமூக வலைதளங்களில் பரவிய வீடியோக்கள் மற்றும் சிசிடிவி காட்சிகளை ஆய்வு செய்த பின்னர், ஜெகன் பயணித்த வாகனமே சிங்கையாவை மோதியது உறுதியானது. விபத்துக்குப் பிறகு, சிங்கையாவை உடனடியாக மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார், ஆனால் அவர் வழியிலேயே இறந்தார்.

ஒய்.எஸ்.ஆர்.சி.பி. தலைவர்கள், சிங்கையாவின் குடும்பத்திற்கு 10 லட்ச ரூபாய் இழப்பீடு வழங்கியதாக தகவல் வெளியாகியுள்ளது.

# பயிர் நிவாரண நிதியில் மோசடி: 11 அதிகாரிகள் சஸ்பெண்ட்

**மும்பை, ஜூன் 23-**

பருவ மழையின் போது சேதமடைந்த பயிர்களுக்கான நிவாரணத்தில் ரூ. 40 கோடி மோசடி செய்ததாக 11 அதிகாரிகள் சஸ்பெண்ட் செய்யப்பட்டுள்ளனர்.

மராட்டிய மாநிலத்தில் பருவ மழையின் போது விவசாயிகள் பயிரிட்டிருந்த பயிர்கள் சேதமடைந்தன. சேதமடைந்த பயிர்களுக்காக விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்க மாநில அரசு உத்தரவிட்டது. அதன்படி, பல்வேறு மாவட்டங்களில் விவசாயிகளுக்கு இழப்பீடு வழங்கப்பட்டது. ஆனால், அம்மாநிலத்தின் ஜால்னா மாவட்டத்தில் விவசாயிகளுக்கு வழங்கவேண்டிய பயிர் நிவாரணத்தில் மோசடி நடைபெறுவதாக கலெக்டரிடம் புகார் அளிக்கப்பட்டது.

புகார் தொடர்பாக விசாரணை நடத்த விசாரணை குழுவை கலெக்டர் அமைத்தார். அந்த குழு நடத்திய விசாரணையில் விவசாயிகளுக்கு வழக்கவேண்டிய பயிர்களுக்கான நிவாரணத்தில் 40 கோடி ரூபாய் மோசடி நடத்திருப்பது தெரியவந்தது. இந்த மோசடியில் வருவாய்த்துறை அதிகாரிகள் 11 பேர் சஸ்பெண்ட் செய்து மாவட்ட நிர்வாகம் உத்தரவிட்டுள்ளது. மேலும், இந்த மோசடி தொடர்பாக கிராம நிர்வாக அலுவலகங்களில் ஏற்கனவே சில அதிகாரிகள் சஸ்பெண்ட் செய்யப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## தலைவர்கள் சொல்வதை படிங்க....




இஸ்ரேல்-ஈரான் விவகாரத்தில் இந்தியா அமைதி காப்பது ஏன்?. இது ராஜதந்திர தவறாகும். இந்தியாவின் தார்மீக பாரம்பரியத்தில் இருந்து விலகிச் செல்வதாகும். இஸ்ரேல் தாக்குதல் சட்டவிரோதமானது மற்றும் இறையாண்மை மீறிய செயலாக உள்ளது.காசாவில் நிகழ்த்தப்படும் கொடூரமான தாக்குதல்களும் கண்டிக்கத்தக்கது.

**- சோனியா காந்தி**



எங்கள் கூட்டணி ஒன்றும் சிதறுவதற்கு நெல்லிக்காய் மூட்டை கிடையாது. இந்த கூட்டணியானது எக்கு கோட்டையாகும். எங்கள் கூட்டணிக்குள் சிறு, சிறு பிரச்சினைகள் இருக்கலாம். அதனை எல்லாம் நாங்களே பேசி தீர்த்து கொள்வோம். தி.மு.க. கூட்டணி உடையும் என அ.தி.மு.க.- பா.ஜ.க. பகல் கனவு காண்கிறது.

**- செல்வ பெருந்தகை**



இந்தியாவில் ராஜஸ்தான், மேற்கு வங்கம், ஜார்கண்ட், சத்தீஷ்கர், பஞ்சாப், கர்நாடகா, இமாச்சல பிரதேசம் ஆகிய 7 மாநிலங்களில் பழைய ஓய்வூதியத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. அதேபோல் தமிழகத்திலும் பழைய ஓய்வூதியத் திட்டத்தை செயல்படுத்த தமிழக அரசு முன்வர வேண்டும்.

**- அன்புமணி**



கீழடி அகழாய்வு விவகாரத்தில் இன்னும் துல்லியமாக ஆராய வேண்டும் என்று கூறி குழப்பி வருகிறது. இவர்கள் ஆரிய கலாச்சாரத்தை இங்கு திணிக்க வேண்டும் என்ற நோக்கத்தில் இருப்பதால் கீழடி உள்ளிட்ட பகுதிகளில் பல ஆண்டுகளுக்கு முன்பு நாகரீகமாக வாழ்ந்தார்கள் என்ற சான்றுகள் கிடைப்பதை தாங்கிக் கொள்ள முடியவில்லை.

**- வைகோ**



சென்னை ராயபுரம் அறிஞர் அண்ணா பூங்காவில் நடந்த ரத்த பரிசோதனை முகாமில் நடப்போர் நலச் சங்கத்தின் தலைவர் நா.மனோகரன் தலைமையில் செயலாளர் குணசேகரன், பொருளாளர் ராஜசேகரன், துணைத்தலைவர் அண்ணாதுரை, மற்றும் ராஜ காந்தி, ரேவதி ஜோதி உள்ளிட்டவர்கள் கலந்துகொண்டனர். ஆர்த்தி ஸ்கேன் நிறுவனம் நடத்திய இந்த முகாமில் நூற்றுக்கணக்கானவர்கள் பயனடைந்தனர்.

# 234 தொகுதிகளிலும் போட்டியிடுவோம்: தேசிய மக்கள் சக்தி கட்சி அறிவிப்பு

**சென்னை, ஜூன் - 23**

234 தொகுதிகளிலும் போட்டியிடுவோம் என்று தேசிய மக்கள் சக்தி கட்சி என்ற புதிய கட்சி அறிவித்து உள்ளது.

சென்னையில் அக்கட்சியின் தலைவர் வழக்கறிஞர் எம்எல்ஏ ரவி மற்றும் சேர்மா செல்வராஜ் ஆகியோர் நிருபர்களுக்கு பேட்டியளிக்கையில் கூறியதாவது 2026 சட்டமன்ற தேர்தலில் தமிழகத்தில் உள்ள அனைத்து தொகுதிகளிலும் போட்டியிட திட்டமிட்டிருக்கிறோம். எங்களோடு மறுமலர்ச்சி ஜனதா இப்போது கைகோர்த்திருக்கிறது. இன்னும் சில கட்சிகளும் அமைப்புகளும் சேர்ந்தால் வரவேற்போம். நாங்கள் வெற்றி பெறுவோமா என்று கேட்கக்கூடாது. அதை மக்கள் தான் தீர்மானிப்பார்கள். தேர்தலில் மதுவை ஒழிப்பதும் போதை பொருட்களில் இருந்து தமிழகத்தை விடுவிப்பதும் தான எங்கள் நோக்கமாக இருக்கும். தேர்தலில் அரசியல் கட்சிகள் சாதிக்க சாதனைகளை சொல்ல வேண்டும் அதன் மூலம் ஓட்டுக்களை பெற வேண்டும். நோட்டுக்களை வழங்க கூடாது. சாலைவசதிகளை தரமாக செய்து தரவேண்டும் என்று தொகுதியில் அதிகாரிகளை வலியுறுத்துவோம் என்று அவர் தெரிவித்தார்

# மசாஜ் செய்வதாக 20 சவரன் தங்க நகைகள் மற்றும் பணம் பறித்த வழக்கில் இருவர் கைது

**சென்னை ஜூன் 23-**

சென்னை, ஓட்டேரி, வள்ளுவன் சாலை பகுதியில் வசித்து வரும் சார்லஸ், வ/50 என்பவர் வழக்கமாக செல்லும் மசாஜ் சென்டரில் அறிமுகமான ஆன்ட்ரியா என்ற பெண் தனது தோழி ரேகா என்பவர் தங்களுக்கு நன்றாக மசாஜ் செய்வதாக கூறி ரேகாவின் முகவரி மற்றும் செல்போனை கொடுத்தின்பேரில், சார்லஸ் 29 ந் தேதி அன்று காலை சூளைமேடு பகுதியில் உள்ள ஒரு வீட்டிற்கு சென்ற போது அங்கிருந்த ரேகா மற்றும் 2 ஆண்கள் சார்லஸை அவதூறாக பேசி கையால் தாக்கி மயக்கமடைய வைத்து, அவரிடமிருந்து 20 சவரன் எடை கொண்ட தங்கச்சங்கிலி, கைச்சங்கிலி 1 கைக்கடிகாரம் மற்றும் ஜிபே மூலம் ரூ.40,000/- பணம் ஆகியவற்றை பறித்துக் கொண்டு தப்பிச் சென்றனர். இது குறித்து சார்லஸ் சூளைமேடு காவல் நிலைய குற்றப்பிரிவில் கொடுத்த புகாரின் பேரில் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டனர்.

சூளைமேடு காவல் நிலைய குற்றப்பிரிவு ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை செய்து மேற்படி வழக்கில் சம்பந்தப்பட்ட எதிரிகள் 1.ரேகா சாவித்திரி, மற்றும் அவரது பேரன் நவீன்குமார், ஆகிய இருவரை தென்காசி மாவட்டம், செங்கோட்டையில் வைத்து கைது செய்து. நீதிமன்றக் காவலுக்கு உட்படுத்தப்பட்டனர். அவர்களிடமிருந்து ரூ.2,85,000/- பணம் பறிமுதல் செய்யப்பட்டது.

விசாரணையில் ஆன்ட்ரியா என்ற பெண் புகார்தாரர் அடிக்கடி தொடர்பில் இருந்ததாகவும், மாற்று இளம் நபர்களை கேட்டதன்பேரில், எதிரி ஆன்ட்ரியா மற்ற எதிரிகளுடன் சேர்ந்து புகார்தாரரின் நகைகளை பறிக்க திட்டமிட்டு ஏற்பாடு செய்துள்ளார் என தெரியவந்துள்ளது. மேற்கண்ட பாலியல் இச்சை குறித்தான விவரம் தெரிந்தால் புகார் கொடுக்கமாட்டார்கள் என மேற்படி சம்பவத்தை நிகழ்த்தியது தெரியவந்தது. சூளைமேடு காவல் நிலைய குற்றப்பிரிவு ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை மற்றும் தேடுதலில் ஈடுபட்டு, தலைமறைவாக இருந்த எதிரிகளின் விவரங்கள் பெற்று தொடர்ந்து கண்காணித்து, இவ்வழக்கில் தொடர்புடைய முக்கிய எதிரிகள் ஆன்ட்ரியா (எ) நிக்கி (எ) நிக்கோலா, கோகுலகிருஷ்ணன், ஆகிய இருவரை கோயம்புத்தூர், மேட்டுப்பாளையத்தில் கைது செய்தனர். அவர்களிடமிருந்து சுமார் 114 கிராம் தங்க நகைகள் மீட்கப்பட்டது.

# காலிமனை விற்பனைக்கு தருவதாக கூறி, ரூ.5 லட்சம் முன்பணம் பெற்று ஏமாற்றியவர் கைது

**சென்னை ஜூன் 23-**

சென்னை, கொடுங்கையூர், திருவள்ளுவர் நகரைச் சேர்ந்த லட்சுமிபிரியா, என்பவர் தனக்கு அறிமுகமான 2 இடைத்தரகர்கள் தன்னிடம் பிரித்விராஜ் கடேல் என்பவருக்கு சொந்தமாக 1,000 சதுரடி கொண்ட அரசு அங்கீகரிக்கப்பட்ட நிலம் இருப்பதாகவும், அதனை விற்க உள்ளதாகவும் கூறியதன்பேரில், 2024ம் ஆண்டு, லட்சுமிபிரியா, பிரித்விராஜ் கடேலை இடைத்தரகர்கள் மூலம் சந்தித்து, மேற்படி நிலத்திற்கு ரூ.1.03 கோடி விலை நிர்ணயம் செய்து, 07.05.2024 அன்று, பாரிநகரில் உள்ள ஒரு ஜூஸ் கடையில் வைத்து, முன்பணமாக ரூ.5 லட்சம் பணத்தை பிரித்விராஜ் கடேலிடம் கொடுத்து கிரைய அட்வான்ஸ் ஒப்பந்தம் போட்டதாகவும், பின்னர், லட்சுமிபிரியா மேற்படி காலிமனையை நில அளவையர் கொண்டு, அளந்தபோது, 965 சதுரடியுள்ள அங்கீகரிக்கப்படாத நிலம் என்பதும் தெரியவந்ததால், லட்சுமி பிரியா, பிரித்விராஜ் கடேலிடம் தான் முன்பணமாக கொடுத்த ரூ.5 லட்சம் பணத்தையும், கிரைய அட்வான்ஸ் அசல் ஒப்பந்த பத்திரத்தையும் திருப்பி கேட்டபோது, பிரித்விராஜ் கடேல் திருப்பி தராமல் ஏமாற்றி வருவதாக எம்.கே.பி நகர் காவல் நிலைய குற்றப்பிரிவில் லட்சுமி பிரியா புகார் கொடுத்ததின் பேரில், போலீசார் மோசடி பிரிவுகளில் வழக்குப்பதிவு விசாரணை மேற்கொண்டனர். எம்.கே.பி நகர் காவல் நிலைய குற்றப்பிரிவு ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை செய்து, வழக்கில் சம்மந்தப்பட்ட எதிரி பிரித்விராஜ் என்பவரை கைது செய்தனர்.

# அசோக்நகர் பகுதியில் மைத்துனர் கொலை வழக்கில் 3 பேர் கைது

**சென்னை ஜூன் 23-**

சென்னை, மேற்கு மாம்பலம், எல்.ஐ.ஜி பிளாட்ஸ் பகுதியில் வசித்து வந்த கலையரசன், என்பவர் கடந்த 15. ந் தேதி அன்று அதிகாலை, அசோக் நகர், 35வது தெருவில் நின்றிருந்தபோது, அங்கு இரு சக்கர வாகனத்தில் வந்த உறவினர்களான சஞ்சய் மற்றும் சுனில்குமார் ஆகியோர் கலையரசனை தகாத வார்த்தைகளால் பேசி, கத்தியால் தாக்கி விட்டு தப்பி சென்றனர். படுகாயமடைந்த கலையரசன் இராயப்பேட்டை அரசு மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சை பெற்று வந்த நிலையில், மேற்படி சம்பவம் குறித்து, கலையரசனின் தாயார் கொடுத்த புகார் மீது அசோக் நகர் காவல் நிலையத்தில் கொலை முயற்சி உள்ளிட்ட சட்டப்பிரிவுகளில் வழக்குப் பதிவு செய்து விசாரணை மேற்கொண்டனர்.

**வழக்கு**

அசோக் நகர் காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை செய்து, இவ்வழக்கில் தொடர்புடைய 1.சஞ்சய், 2.சக்திவேல், 3.சுனில் குமார், ஆகிய 3 பேரை கடந்த 15 ந் தேதி அன்று கைது செய்து, நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி, நீதிமன்றக் காவலுக்கு உட்படுத்தப்பட்டனர். இவர்களிடமிருந்து 1 கத்தி மற்றும் 1 இருசக்கர வாகனம் பறிமுதல் செய்யப்பட்டது.

விசாரணையில் இறந்து போன கலையரசன் தமிழரசி என்பவரை காதலித்து திருமணமாகி 3 வயது ஆண் குழந்தை உள்ளதும், கலையரசனும், தமிழரசியும் கருத்து வேறுபாடு காரணமாக சுமார் 1 ½ வருடங்களாக பிரிந்து வாழ்ந்து வருவதும், இது தொடர்பாக 2024ம் ஆண்டு கலையரசனுக்கும், தமிழரசியின் சகோதரர் சக்திவேல் என்பவருக்கும் தகராறு ஏற்பட்டு, அசோக் நகர் காவல் நிலையத்தில் வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, கலையரசனும், சக்திவேலும் சிறைக்கு சென்று வந்ததும், கடந்த 14 ந்தேதி அன்று இரவு, கலையரசனுக்கும், சக்திவேல் இவரது தம்பி சஞ்சய் இவர்களது சித்தி மகன் சஞ்சய் ஆகியோருக்கு வாக்குவாதம் ஏற்பட்டு பிரிந்து சென்றதும், மறு நாள் 15. ந்தேதி அன்று அதிகாலை சஞ்சய் மற்றும் சுனில்குமார் சேர்ந்து கலையரசனை கத்தியால் தாக்கியதும் தெரியவந்தது.

மேலும் விசாரணையில் எதிரிகள் சக்திவேல், சுனில்குமார் ஆகியோர் அசோக் நகர் காவல் நிலைய சரித்திர பதிவேடு குற்றவாளிகள் என்பதும், இவர் மீது தலா 3 குற்ற வழக்குகள் உள்ளதும் தெரியவந்தது.

இந்நிலையில், மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த கலையரசன் சிகிச்சை பலனின்றி இறந்ததால், இவ்வழக்கின் சட்டப்பிரிவு, கொலை வழக்காக மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

# போதை பொருட்களின் நடமாட்டத்தை குறைக்க கோரி சட்டமன்றத்தில் குரல் கொடுத்த 21 திமுக எம்எல்ஏக்களின் பதவியை பறிக்க முயன்றவர் தான் எடப்பாடி பழனிசாமி: அமைச்சர் மா.சுப்பிரமணியன் தாக்கு

**சென்னை,ஜூன்.23**

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.மா.சுப்பிரமணியன் சென்னை, அரும்பாக்கத்தில் உள்ள அரசு யோகா மற்றும் இயற்கை மருத்துவக் கல்லூரி மருத்துவமனை வளாகத்தில், 11 வது சர்வதேச யோகா தினம் 2025 முன்னிட்டு யோகா பயிற்சியினை செய்து, விழா பேரூரையாற்றினார்கள். பின்னர் அமைச்சர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

இன்று உலகம் முழுவதும் 11வது சர்வதேச யோகா தினம் அனுசரிக்கப்படுகிறது. அந்தவகையில் சென்னையில் உள்ள யோகா மற்றும் இயற்கை மருத்துவக்கல்லூரியில் மருத்துவ மாணவர்களோடு யோகா பயிற்சி செய்து யோகா தினம் அனுசரிக்கப்பட்டது. இன்றைக்கான கருப்பொருள் என்பது ஒரே பூமி ஒரே ஆரோக்கியம் *"Yoga for One Earth, One Health"* என்கின்ற பெயரில் அனுசரிக்கப்பட்டு வருகிறது. யோகா செய்வதன் மூலம் கிடைக்கும் நன்மைகள் குறித்து அனைவரும் நன்கு அறிவார்கள். உடல்களையும், அதன் உள் உறுப்புகளையும் பலம் பெற செய்வது, நாள் முழுவதும் சுறுசுறுப்புடன் இருக்க உதவுவது, நோய் வராமல் தடுப்பது, வந்த நோயினை கட்டுப்படுத்துவது, கோபம் மற்றும் பயம் சார்ந்த உடல்நிலையை சாந்தப்படுத்துவது, உடல் தசைகளை தளர்வடைய செய்வது போன்ற பல்வேறு சிகிச்சைகளுக்கு யோகா பயிற்சி என்பது உறுதுணையாக இருந்து வருகிறது. முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் 1997ஆம் ஆண்டு யோகா மற்றும் இயற்கை மருத்துவக்கல்லூரியை தொடங்கி வைத்தார்கள். இந்தியாவிலேயே சித்தா, யோகா, ஆயுர்வேதம், யுனானி, ஓமியோபதி போன்ற 5 இந்திய மருத்துவ முறைகளும் ஒரே மாநிலத்தில் இருப்பது என்பது தமிழ்நாட்டில் மட்டும் தான். இதற்கு அடித்தளமிட்டவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். இந்தியாவில் அரசு யோகா மற்றும் இயற்கை மருத்துவக்கல்லூரிகள் 2 சேர்த்து 19 யோகா மற்றும் இயற்கை மருத்துவக்கல்லூரிகள் தமிழ்நாட்டில் மட்டும்தான் இருக்கின்றது. இந்தியாவில் உள்ள மற்ற மாநிலங்களை விட அதிகப்படியான யோகா மற்றும் இயற்கை மருத்துவக்கல்லூரிகளை கொண்ட மாநிலமாக தமிழ்நாடு உள்ளது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 2022 ஆம் ஆண்டு ரூ.96 கோடி செலவில் 50 ஏக்கர் நிலப்பரப்பில் செங்கல்பட்டில் கட்டப்பட்ட சர்வதேச யோகா மற்றும் இயற்கை அறிவியல் நிறுவனத்தை தொடங்கி வைத்தார்கள் என்பது சிறப்புக்குரிய ஒன்று. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் யோகா மற்றும் இயற்கை மருத்துவத்திற்கு பல்வேறு வகைகளில் முக்கியத்துவம் அளித்து வருகிறார்கள். குறிப்பாகவும், சிறப்பாகவும் தமிழ்நாட்டில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 44வது சர்வதேச சதுரங்கம் ஒலிம்பியாப் போட்டி மிகச் சிறப்பாக நடத்தப்பட்டது. உலகின் பல்வேறு நாடுகளிலிருந்து சதுரங்க விளையாட்டு வீரர்கள் அப்போட்டிகளில் பங்கேற்க வந்தார்கள். வந்த விளையாட்டு வீரர்களுக்கு மனஅழுத்தத்தை குறைக்கும் வகையில் யோகா மற்றும் இயற்கை மருத்துவ மன அழுத்த மேலாண்மை குழு ஒன்று அமைத்து அவர்களுக்கு மன அழுத்த மேலாண்மை பயிற்சி வழங்கப்பட்டது. அதனால் யோகா இயற்கை மருத்துவ மாணவர்களுக்கு 2022 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 24 ஆம் தேதி முதலமைச்சர் அவர்கள் பரிசுகளை வழங்கி யோகா துறையில் பயின்று வரும் மாணவர்களுக்கு ஒரு மிகப்பெரிய அளவில் முக்கியத்துவம் வழங்கினார்கள். அதோடுமட்டுமல்லாமல் மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் யோகாவிற்கான கேலோ விளையாட்டு விருதினை 2024 பிப்ரவரி திங்கள் 23 ஆம் தேதி வழங்கி சிறப்பித்தார்கள். முதலமைச்சர் அவர்களால் இந்திய மருத்துவத்துறையில் பல்வேறு மருத்துவ கட்டமைப்புகள் மேம்படுத்தப்பட்டு வருகிறது. அந்தவகையில் இன்றைக்கு தமிழ்நாடு முழுவதிலும் அனைத்து அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைகளில் மாவட்ட அளவிலான மருத்துவமனைகளில் யோகா பயிற்று மையங்கள், இந்திய மருத்துவ முறைகள் போன்ற பல்வேறு கட்டமைப்புகள் அமைக்கப்பட்டிருக்கிறது.



தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இந்த துறைக்கு 38 மாவட்டங்களில் 100 அரசு மருத்துவமனைகளில் ரூ.7 கோடி செலவில் இயற்கை மருத்துவ நலவாழ்வு மையங்களை அமைப்பதற்கு கடந்த நிதி நிலை அறிக்கையில் ஒப்புதல் தந்து அந்த கட்டமைப்பும் மிக விரைவில் அமையவிருக்கிறது. இந்த அரசு பொறுப்பேற்றபிறகு சித்தா, யுனானி, ஆயுர்வேதா, ஓமியோபதி, யோகா போன்ற துறைகளில் உள்ள மருத்துவர் காலிப்பணியிடங்களை கடந்த ஆண்டு நிரப்பினார்கள். தற்போது காலியாக உள்ள சித்த மருத்துவர் பணியிடங்கள் 59, ஆயுர்வேதா மருத்துவர் பணியிடங்கள் 2, யுனானி மருத்துவர் – 1, யோகா மற்றும் இயற்கை மருத்துவர்கள் 53 ஆக 115 இந்திய மருத்துவமுறை மருத்துவர் பணியிடங்கள் வரும் 30.06.2025 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பணி ஆணையினை வழங்க இருக்கிறார்கள். இந்த பணி ஆணைகள் வழங்கப்பட்ட பிறகு இந்திய மருத்துவ துறையில் ஒரு மருத்துவர் காலிப்பணியிடம் கூட இல்லை என்கின்ற நிலை உருவாக இருக்கிறது. அதோடு 56 சுருக்கெழுத்து தட்டச்சர் பணியிடங்களுக்கும் பணி ஆணைகள் தர இருக்கிறார்கள்.

அதோடு மட்டுமல்லாமல் இந்திய மருத்துவ முறைக்கு தேவையான மருத்துவ கட்டமைப்புகளை பயன்படுத்துவதற்குரிய நிதியினை தொடர்ந்து வழங்கி உதவிக் கொண்டிருக்கிறார்கள். அந்தவகையில் இந்த சர்வதேச யோகா தினத்தில் மாணவர்களும், பொதுமக்களும் மகிழ்ச்சியுடன் பங்கேற்று சிறப்பித்திருக்கிறார்கள்.

. எடப்பாடி பழனிச்சாமி முதலமைச்சராக இருந்த சமயத்தில் சட்டமன்றத்தில் எதிர்க்கட்சி தலைவராக இருந்த இன்றைய முதலமைச்சர் அவர்கள் தான் போதை பொருட்கள் நடமாட்டம் தமிழ்நாட்டில் அதிகரித்திருக்கிறது, குறிப்பாக தடைசெய்யப்பட்ட போதை பொருட்கள் அனைத்துமே தமிழ்நாட்டில் அதிகமாக இருக்கிறது என்று சொன்னார்கள், உடனடியாக அன்றைய முதலமைச்சராக இருந்த எடப்பாடி பழனிச்சாமி அவர்கள் மறுத்தார்கள். அடுத்தநாளே 21 சட்டமன்ற உறுப்பினர்கள் சென்னையில் எங்கெயெல்லாம் கிடைக்கின்றது, தாராளமாக கிடைக்கின்ற போதை பொருட்களை சட்டமன்றத்திலே கொண்டு சென்று இன்றைய தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடத்தில் காட்டினோம். உண்மையில் போதை பொருட்களின் நடமாட்டத்தினை குறைக்கும் நல்ல எண்ணம் கொண்ட முதலமைச்சராக இருந்திருந்தால் எடப்பாடி பழனிச்சாமி என்ன செய்திருக்க வேண்டும், இது எங்கு கிடைத்தது சொல்லுங்கள் உடனடியாக நடவடிக்கை மேற்கொள்கிறேன் என்று சொல்லி இருக்க வேண்டும், மாறாக சபாநாயகரை கொண்டு 21 சட்டமன்ற உறுப்பினரின் பதவியை பறிப்பதற்குரிய நடவடிக்கைகளை எடுத்தனர். அப்படிப்பட்ட எடப்பாடி பழனிச்சாமி இது பற்றி சொல்வது என்பது வேடிக்கையான ஒன்று. இந்த அரசுப் பொறுப்பேற்ற பிறகும் கூட ஆந்திரா மாநிலத்தில் கூட 4000 ஏக்கர் நிலப்பரப்பில் கஞ்சா பயிரிடப்படுவதை இங்கிருக்கும் காவல் துறை உயர் அலுவலர் அவர்கள் சொல்லி அதன்பிறகு ரூ.6000 கோடி மதிப்பிலான அந்த கஞ்சா பொருட்களை அழிக்கப்பட்டது. இது தென்னிந்திய காவல்துறை உயரலுவலர்கள் மாநாட்டில் சொல்லி அது அகற்றப்பட்டது. தமிழ்நாட்டைப் பொறுத்தவரை கஞ்சா பயன்பாடு 0% என்கின்ற அளவில் ஒரு இடத்திலும் இல்லை. எங்கேயாவது இருந்து எடப்பாடி பழனிச்சாமி அவர்கள் சொன்னால் நடவடிக்கை எடுக்கப்படும். அதுமட்டுமல்லாமல் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்றபிறகுதான் குறிப்பாக பள்ளி மாணவர்கள் மற்றும் கல்லூரி மாணவர்களுக்கு போதை பொருட்களுக்கு எதிராக விழிப்புணர்வு ஏற்படுத்திடும் வகையில் தொடர்ந்து கின்னஸ் சாதனை படைத்து வருகிறார்கள். ஒவ்வொரு வருடமும் 70 இலட்சம் மாணவர்கள் அதற்கான விழிப்புணர்வில் பங்கேற்று சிறப்பித்து வருகிறார்கள். இப்படி விழிப்புணர்வு மூலம் அனைத்து துறைகளையும் ஒருங்கிணைத்து போதை பொருட்களின் நடமாட்டத்தை அழிப்பது, சமூக விரோதிகளின் சொத்துக்களை முடக்கி அவர்கள் மேல் தொடர்ந்து நடவடிக்கைகளை எடுத்து வருவது இந்த அரசு தான். கடந்த காலங்களில் பெருகி இருந்த போதை வஸ்துக்களின் நடமாட்டத்தை கட்டுக்குள் கொண்டு வந்து மிகப்பெரிய அளவிலான விழிப்புணர்வை ஏற்படுத்தி இன்றைக்கு 0% நிலை கஞ்சா பயன்பாடு இல்லை என்பதை எடப்பாடி பழனிச்சாமி நன்கு உணர வேண்டும் என்றார்.

இந்நிகழ்வில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அரசு முதன்மைச் செயலாளர் முனைவர் ப.செந்தில் குமார்,இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி துறை ஆணையர்எம்.விஜயலட்சுமி, இணை இயக்குநர் மரு.என்.மணவாளன் கலந்து கொண்டனர்.

# நீதிமன்ற விசாரணை வழக்குகளில், பிடியாணை பிறப்பிக்கப்பட்ட தலைமறைவு குற்றவாளி இருவர் கைது

**சென்னை ஜூன் 23-**

சென்னை பெருநகர காவல் ஆணையர் ஆ.அருண், உத்தரவின் பேரில் நீதிமன்ற விசாரணை நிலுவை வழக்குகளில் அதிக முக்கியத்துவம் வழங்கப்பட்டு கொடுங்குற்றம் மற்றும் இதர குற்ற வழக்குகளில் பாதிக்கப்பட்டோருக்கு உரிய நீதி பெற்று தந்திடவும் வழக்கின் எதிரிகளுக்கு உரிய நீதிமன்ற தண்டனை பெற்று தந்திட 12 காவல் மாவட்டங்களிலும் உதவி ஆணையர்கள் காவல் ஆய்வாளர்கள் ஆகியோர் தலைமையில் நீதிமன்ற நடவடிக்கைகளை கண்காணித்து வழக்குகளில் முன்னேற்றத்திற்காக தனிப்படைகள் அமைக்கப்பட்டு நீதிமன்ற வழக்குகளில் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட தலைமறைவு குற்றவாளிகளை கைது செய்து, தீவிர நடவடிக்கை எடுக்கப்பட்டு, நீதிமன்ற விசாரணை நடவடிக்கைகளுக்கு முக்கியத்துவம் வழங்கப்படுகிறது. இதன் தொடர்ச்சியாக, வடக்கு கடற்கரை காவல் நிலையத்தில் கடந்த 2023ம் ஆண்டு தாக்கலான கஞ்சா வழக்கில் கைது செய்யப்பட்ட எதிரி கயர் நிஷா என்பவர் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தப்பட்டு, சென்னை, ஜார்ஜ் டவுன் 7 வது பெருநகர குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் வழக்கு விசாரணை நடைபெற்று வந்த நிலையில், நீதிமன்ற பிணையில் சிறையிலிருந்து வெளியே வந்தவர் நீதிமன்றத்தில் விசாரணைக்கு ஆஜராகாமல் இருந்த காரணத்தினால், கடந்த 19.ந் தேதி அன்று எதிரி கயர் நிஷாவை கைது செய்து, நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்தது.

வடக்கு கடற்கரை காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான தனிப்படை, மேற்படி நீதிமன்ற பிடியாணை பிறப்பிக்கப்பட்ட தலைமறைவு எதிரி கயர் நிஷா, என்பவரை தகுந்த புலன் வைத்து பல்வேறு இடங்களில் தேடி தனிப்படையினர் கைது செய்து நீதிமன்ற பிடியாணை நிறைவேற்றப்பட்டு நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தப்பட்டார்.மேலும் பட்டினம்பாக்கம் காவல் நிலையத்தில் கடந்த 2018ம் ஆண்டு ஒரு வரை தாக்கி காயம் ஏற்படுத்திய வழக்கில் தொடர்புடைய எதிரி ரங்கநாதன் என்பவரை கைது செய்து, நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தப்பட்டார்.

மேற்கண்ட வழக்கு, சைதாப்பேட்டை, 23 வது பெருநகர குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் விசாரணை நடைபெற்று வந்த நிலையில், நீதிமன்ற பிணையில் சிறையிலிருந்து வெளியே வந்த எதிரி ரங்கநாதன் என்பவர் நீதிமன்றத்தில் விசாரணைக்கு ஆஜராகாமல் இருந்த காரணத்தினால்,

கடந்த 21.01.2025 அன்று ரங்கநாதன் என்பவரை கைது செய்து, நீதிமன்றத்தில் ஆஜர் படுத்த நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்தது.பட்டினம்பாக்கம் காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான தனிப்படை போலீசார், தகுந்த புலனுடன் தீவிர தேடுதலில் ஈடுபட்டு, மேற்படி நீதிமன்ற பிடியாணை பிறப்பிக்கப்பட்ட தலைமறைவு எதிரி ரங்கநாதன், சென்னை என்பவரை கைது செய்து நீதிமன்ற பிடியாணை நிறைவேற்றப்பட்டது.

# சர்வதேச யோகா தினத்தில் கலைமகள் பள்ளி சாதனை



**கும்மிடிப்பூண்டி,ஜூன்.23-**

கும்மிடிப்பூண்டி ஸ்ரீ கலைமகள் வித்யாமந்திர் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி மாணவர்கள், 325 பேர், சுப்த வஜ்ராசனத்தில் தொடர்ந்து, ஐந்து நிமிடங்கள் அமர்ந்து, வஜ்ராசனம் எனும் யோகாசன உருவத்தை ஏற்படுத்தி நோபல் உலக சாதனை புத்தகத்தில் இடம் பிடித்தனர். கும்மிடிப்பூண்டியில் இயங்கி வரும் ஸ்ரீ கலைமகள் வித்யாமந்திர் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி வாளகத்தில் நேற்று சர்வதேச யோகா தின விழா கொண்டாடப்பட்டது. பள்ளியின் செயலர் டாக்டர் ஞானதீபன் தலைமையில் நடந்த விழாவில், நிறுவனர் மற்றும் முதல்வர் டாக்டர் திருஞானம், தாளாளர் தேன்மொழி திருஞானம், துனண முதல்வர் அனிதா, ஸ்ரீ சங்கரி யோகா பயிற்சி மைய நிறுவனர் சந்தியா ஆகியோர் முன்னிலை வகித்தனர். விழாவின் போது, பள்ளி மாணவ, மாணவியர் 325 பேர், சுப்த வஜ்ராசனத்தில், தொடர்ந்து ஐந்து நிமிடங்கள் அமர்ந்தபடி, வஜ்ராசனம் எனும் யோகாசன உருவத்தை ஏற்படுத்தினர். இவர்களது முயற்சி, நோபல் உலக சாதனை புத்தகத்தில் இடம் பிடித்தது. நோபல் உலக சாதனை தீர்ப்பாளர்கள் ஹேமந்த்குமார், பரத்குமார், பரணிதரன் ஆகியோர் உலக சாதனைக்கான சான்றை பள்ளி நிர்வாகத்திடம் வழங்கினர். தொடர்ந்து சர்வதேச யோகா தினத்தின் சிறப்புகள் குறித்து பள்ளி மாணவர்களுக்கு விளக்கி கூறப்பட்டது.

# கிராமப்புறங்களில் 10,700 பெண்களுக்கு உயிர்காக்கும் புற்றுநோய் பரிசோதனை

**சென்னை ஜூன் 23-**

ஐ.வி.டி.பி தலைவர் குழந்தை பிரான்சிஸ் கிராமப்புறங்களில் 10,700 பெண்களுக்கு உயிர்காக்கும் புற்றுநோய் பரிசோதனை செய்தமைக்காக கௌரவிக்கப்பட்டார். ரமோன் மக்ஸஸாய் விருது பெற்ற ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சி திட்டத்தின் (ஐவிடிபி) குழந்தை பிரான்சிஸ் சமீபத்தில் நடைபெற்ற சிறப்பு விழாவில் கௌரவிக்கப்பட்டார். . ஐவிடிபி இன் பெண்களின் நலன் மற்றும் ஆரம்பக் கண்டறிதல் குறித்த அர்ப்பணிப்பை இந்த சாதனை உறுதிபடுத்துகிறது. கார்க்கினோஸ் ஹெல்த்கேர் நிறுவனமும் இந்த முக்கிய சாதனையை உற்சாகத்துடன் பாராட்டியது.இந்த நிகழ்வில் ஐவிடிபி தலைவர் குழந்தை பிரான்சிஸ் கூறியதாவது:எங்கள் அமைப்பின் திசைமுகம் எப்போதும் கிராமப்புற மக்களின் முழுமையான முன்னேற்றத்தையும், பெண்களின் ஆரோக்கியத்தை உறுதி செய்வதையும் குறிக்கோளாகவே கொண்டுள்ளது. இந்த சாதனை எங்கள் உறுப்பினர்களின் நம்பிக்கையையும், எங்கள் குழுவின் அர்ப்பணிப்பையும், எங்களது பார்ட்னராக கார்க்கினோஸ் ஹெல்த்கேர் போன்ற அமைப்புகளின் ஆதரவையும் பிரதிபலிக்கிறது. இந்த முன்முயற்சி, சமூகமையப்பட்ட மாதிரிகள் எவ்வாறு சிக்கலான சுகாதார சவால்களை சமாளிக்க முடியும் என்பதற்கான முக்கிய உதாரணமாக நிற்கிறது என்றார்

# சமூக வலைதளத்தில் ரீல்ஸ் வீடியோ பதிவிட்ட மனைவிக்கு கத்தி குத்து: கணவர் கைது

**சென்னை ஜூன் 23-**

சென்னை, கொருக்குப்பேட்டை, கண்ணகி நகர் முதல் தெருவில் வசித்த வரும் 22 வயதுடைய பெண் பிராட்வே பகுதியில் உள்ள பழக்கடையில் வேலை செய்து வருகிறார். இவர் இன்ஸ்டாகிராம் சமூக வலைதளத்தில் ரீல்ஸ் வீடியோ பதிவிட்டு வந்ததால் அவரது கணவர் சங்கர் மனைவியிடம் அடிக்கடி தகராறு செய்து வந்துள்ளார். இந்நிலையில் கடந்த 19 ந் தேதி அன்று இரவு மனைவி வீட்டிலிருந்தபோது, குடிபோதையில் வந்த கணவர் சங்கர் சமூகவலைதளத்தில் வீடியோ போடுவதை கண்டித்து அவதூறாக பேசி, கத்தியால் தாக்கி உள்ளார். இரத்த காயமடைந்த 22 வயதுடைய பெண் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று இது குறித்து கொடுத்த புகாரின் பேரில் ஆர்.கே.நகர் காவல் நிலையத்தில் வழக்குப்பதிவு செய்து போலீசார் விசாரணை மேற்கொண்டனர்.

ஆர்.கே நகர் காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை செய்து மேற்படி குற்ற சம்பவத்தில் ஈடுபட்ட கணவர் சங்கர், என்பவரை கைது செய்தனர். அவரிடமிருந்து குற்ற செயலுக்கு பயன்படுத்திய கத்தி பறிமுதல் செய்யப்பட்டது.

கைது செய்யப்பட்ட எதிரி சங்கர் விசாரணைக்குப் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்.

வாகனங்கள் ஓட்டும் போது செல்போன் பேசாதே... பேசுவது எமனாக இருக்கலாம்

# இத்தலார் மற்றும் நஞ்சநாடு ஊராட்சிகளில் நடைபெற்று வரும் வளர்ச்சி திட்டப்பணிகள்

## கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு ஆய்வு



ஊட்டி, ஜூன்.23-

நீலகிரி மாவட்டம், இத்தலார் மற்றும் நஞ்சநாடு ஊராட்சிப்பகுதிகளில் முடிக்கப்பட்ட மற்றும் நடைபெற்று வரும் வளர்;சி திட்டப்பணிகளை, மாவட்ட கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

அப்போது இத்தலார் ஊராட்சி அலுவலகம் அருகில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ் ரூ.16.11 இலட்சம் மதிப்பில் கட்டப்பட்டுள்ள நியாயவிலைக்கடையினையும், சிறப்புப்பகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூ.27 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் நூலக கட்டடத்தினையும், இத்தலார் ஊராட்சிக்குட்பட்ட அப்புக்கோடு பகுதியில் உதகை சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ. 5 இலட்சம் மதிப்பில் கட்டப்பட்டுள்ள பயணியர் நிழற்குடையினையும், நஞ்சநாடு ஊராட்சிக்குட்பட்ட முத்தோரை பாலாடா பகுதியில் உதகை சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ.15 இலட்சம் மதிப்பில் கட்டப்பட்டு வரும் சமுதாய கூட கட்டடத்தினையும் என முடிக்கப்பட்ட மற்றும் நடைபெற்று வரும் வளர்ச்சி திட்ட பணிகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.ஆய்வின் போது ஊட்டி வட்டார வளர்ச்சி அலுவலர்கள் ஸ்ரீதரன், சிவக்குமார் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# 103 டிகிரி பதிவு: ஈரோட்டில் மீண்டும் வாட்டி வதைக்கும் வெயிலால் மக்கள் அவதி

ஈரோடு, ஜூன். 23 -

தமிழகத்தில் இரண்டு நாட்களுக்கு இயல்பை விட மூன்று டிகிரி செல்சியஸ் வரை வெயில் தாக்கம் இருக்கும் என வானிலை ஆய்வு மையம் தெரிவித்திருந்தது. அதன்படி தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் மீண்டும் வெயிலின் தாக்கம் அதிகரித்து உள்ளது. ஈரோடு மாவட்டத்தில் கடந்த மார்ச் ஏப்ரல் மாதங்களில் வெயிலின் தாக்கம் உச்சத்தில் இருந்தது. சர்வ சாதாரணமாக 100 டிகிரிக்கு மேல் பதிவாகி வந்ததால் மக்கள் அவதி அடைந்து வந்தனர். பின்னர் மே மாதம் அக்னி நட்சத்திர வெயில் உச்சத்தில் இருந்தது. 104 டிகிரி வரை வெயில் பதிவானதால் பொதுமக்கள் வயதானவர்கள் குழந்தைகள் வாகன ஓட்டிகள் என அனைத்து தரப்பு மக்களும் அவதி அடைந்து வந்தனர். பின்னர் சில நாட்களாக பரவலாக மழை பெய்ததால் வெயிலின் தாக்கம் குறைந்து காணப்பட்டது. இந்நிலையில் கடந்த மூன்று நாட்களாக மாவட்டத்தில் மீண்டும் வெயிலின் தாக்கம் . வெயில் தாக்கம் காரணமாக வீடுகளில் புழுக்கம் நிலவி வருகிறது. அனல் காற்றுடன் வெயில் கொளுத்துவதால் வாகன ஓட்டிகள் திணறி வருகின்றனர். மதிய நேரங்களில் முக்கிய சாலைகள் அனைத்தும் மக்கள் நடமாட்டம் இன்றி வெறிச்சோடி காணப்படுகிறது. காலை 7 மணிக்கு தொடங்கும் வெயிலின் தாக்கம் மாலை 5 மணி வரை நீடிக்கிறது.குறிப்பாக காலை 10 மணி முதல் மாலை 4 மணி வரை வெயிலின் தாக்கம் உச்சத்தில் உள்ளது. நேற்று மாவட்டத்தில் வெயிலின் தாக்கம் அதிகரித்து காணப்பட்டது. எப்போதும் பரபரப்பாக காணப்படும் பன்னீர்செல்வம் பார்க், மணிக்கூண்டு பகுதி, ஈஸ்வரன் கோவில் வீதி, அரசு மருத்துவமனை ரவுண்டானா போன்ற பகுதிகளில் மதிய நேரங்களில் மக்கள் கூட்டம் இன்றி வெறிச்சோடி காணப்பட்டது. வெயிலின் தாக்கத்திலிருந்து தப்பிக்க வெளியே செல்லும் பெண்கள் குடையை பிடித்த படியும், முகத்தை துணியால் மூடிய படியும் செல்கின்றனர். மோர் இளநீர் நுங்கு வியாபாரம் விறுவிறுப்பாக நடந்து வருகிறது.

# வாக்குறுதிகளை நிறைவேற்றியதால், மக்கள் மத்தியில் திமுகவிற்கு ஆதரவு அதிகரித்துள்ளது

## ஈரோட்டில் வைகோ பேட்டி



ஈரோடு ஜூன் 23-

ஈரோட்டில் நடந்த மதிமுக பொதுக்குழுவில் பங்கேற்ற அக்கட்சியின் பொதுச்செயலாளர் வைகோ நிருபர்களுக்கு அளித்த பேட்டியில் கூறியதாவது:

கடவுளின் பெயரால் ஒரு கட்சி மாநாடு நடத்துவது தவறானது. தமிழகத்தில் அரசியல் கட்சிகள், கடவுள் பெயரால் மாநாடு நடத்தியது இல்லை. முருகன் முருகன் மாநாட்டுக்கு பின்னால், பாஜக, ஆர்எஸ்எஸ் இந்துத்துவா சக்திகள் உள்ளது. இந்த மாநாடு மூலம் இந்து வாக்கு வங்கியை உருவாக்க முடியாது. மதிமுகவிற்கு 8 எம்.எல்.ஏ.க்கள் கிடைத்தால் தேர்தல் ஆணைய அங்கீகாரம் கிடைக்கும். எனவே, திமுக விடம் அதற்கேற்ப தொகுதிகளை கூடுதலாக கேட்டுப் பெறுவோம். தமிழகத்தில் கள் விற்பனை கடைகள் கூடாது. தமிழகத்தில் கூட்டணி ஆட்சி வேண்டும் என்று நாங்கள் கேட்கவில்லை. திமுக எடுக்கும் முடிவை ஆதரிப்போம்.

திமுக கூட்டணியில் இருந்து எங்களிட பேசுவதாக, நயினார் நாகேந்திரன் பொறுப்பற்ற முறையில் பேசிக்கொண்டு இருக்கிறார். துரை வைகோவிற்கு மத்திய இணை அமைச்சர் பதவி தருவதாக எந்த பேச்சுவார்த்தையும் நடக்கவில்லை. அப்படி இருந்தால் வெளிப்படையாக சொல்லி விடுவோம். பெரும்பாலான வாக்குறுதிகளை நிறைவேற்றியதால், மக்கள் மத்தியில் திமுகவிற்கு முன்பை விட ஆதரவு அதிகரித்துள்ளது. வலுவாக உள்ள திமுக கூட்டணி சுலபத்தில் வெற்றி பெற்று விடும். திமுக, மதிமுக ஆகியவை திராவிட இயக்கங்கள். அவர்களோடு விசிக, கம்யூனிஸ்டுகளை ஒப்பிட முடியாது. கம்யூனிஸ்டுகள் தினம் ஒரு கருத்து சொல்லலாம். பிறகு அதனை மாற்றிச் சொல்லலாம். தமிழகத்தில் முழுமையான மதுவிலக்கு கொண்டு வரவேண்டும். கடந்த 2017-ம் ஆண்டு முதல் திமுக கூட்டணியில் இருப்பதால் சலிப்பு இல்லை. கொள்கை அடிப்படையில் நாங்கள் சரியாக இருக்கிறோம். 2026 தேர்தலில் மீண்டும் மக்கள் நலக்கூட்டணி அமைய வாய்ப்பு கிடையாது. இவ்வாறு அவர் தெரிவித்தார். ஈரோடு மாநகர மாவட்ட செயலாளர் நா.முருகன் மாநில தொண்டரணி செயலாளர் முசிறி ரவி உட்பட பலர் உடன் இருந்தனர்

# பணி நிறைவு பாராட்டு விழா



ஈரோடு ஜூன் 23 -

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழக அனைத்து தொழிலாளர் முன்னேற்ற சங்கத்தின் சார்பாக ஈரோடு மண்டலத்தில் சிறப்பு உதவியாளராக 40 ஆண்டுகள் பணி புரிந்த எஸ் தர்வேஸ்மைதீனுக்கு பணி நிறைவு பாராட்டு விழா நேற்று ஈரோட்டில் நடைபெற்றது

மாநிலச் செயலாளர் விதணிகைவேல் வரவேற்றார் இவ்விழாவிற்கு சங்கத்தின் மாநில தலைவர் செ.மருந்தன் தலைமை தாங்கினார்

இதில் சங்க சட்ட ஆலோசகர் ஆர் பரமசிவம் மாநிலச் செயலாளர் கோ ஜெய்சங்கர் மாநில பொருளாளர் மாமனோகரன் மற்றும் மத்திய மண்டல சங்க நிர்வாகிகள் ஈரோடு பணியாளர்கள் மற்றும் கழக ஊழியர்கள் அனைவரும் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினர்.

இதைத்தொடர்ந்து பணி நிறைவு பெற்ற எஸ் தர்வேஸ்மைதீன் ஏற்புரை வழங்கினார் நிகழ்ச்சியில் ஈரோடு மண்டல சங்க நிர்வாகிகள் மற்றும் சங்க உறுப்பினர்கள் நேரடி கொள்முதல் பிரிவு நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள் திரளாக கலந்து கொண்டனர்

முடிவில் மண்டல பொருளாளர் டி இரவிச்சந்திரன் நன்றி கூறினார்

# பவானிசாகர் அணையில் இருந்து தடப்பள்ளி - அரக்கன் கோட்டை பாசனத்திற்கு 800 கன அடி நீர் திறப்பு

ஈரோடு, ஜூன்.23-

ஈரோடு மாவட்ட மக்களின் முக்கிய குடிநீர் ஆதாரமாகவும், விவசாயிகளின் வாழ்வாதாரமாகவும் உள்ளது பவானிசாகர் அணை. 105 அடி கொள்ளளவு கொண்ட பவானிசாகர் அணையின் முக்கிய நீர் பிடிப்பு பகுதியாக நீலகிரி மலைப்பகுதி உள்ளது. பவானிசாகர் அணையின் மூலம் ஈரோடு, திருப்பூர், கரூர் மாவட்டங்களைச் சேர்ந்த 2 லட்சத்து 50 ஆயிரம் ஏக்கர் விவசாய நிலங்கள் பாசன வசதி பெற்று வருகின்றன.இந்நிலையில் கடந்த சில நாட்களாக நீர்ப்பிடிப்பு பகுதியில் பரவலாக மழை பெய்து வந்ததால் அணையின் நீர்மட்டம் உயர்ந்து வந்தது. நீலகிரி, கோவை மாவட்டத்தில் பரவலாக மழை பெய்து வருவதால் பவானிசாகர் அணைக்கு நீர்வரத்து அதிகரிக்க தொடங்கியுள்ளது. இதனை எதிரொலியாக அணையின் நீர்மட்டமும் உயர்ந்து வருகிறது. நேற்று காலை நிலவரப்படி பவானிசாகர் அணையின் நீர்மட்டம் 89.71 அடியாக உயர்ந்து உள்ளது. நேற்று காலை அணைக்கு 3,072 கன அடி நீர் வந்து கொண்டிருக்கிறது. பவானிசாகர் அணையில் இருந்து குடிநீருக்காக பவானி ஆற்றுக்கு 100 கன அடி நீரும், தடப்பள்ளி -அரக்கன் கோட்டை பாசனத்திற்கு 800 கன அடியும், காலிங்கராயன் பாசனத்திற்கு 500 கன அடியும், கீழ்பவானி வாய்க்கால் பாசனத்திற்கு 5 கன அடி நீரும் என மொத்தம் 1,405 கன அடி நீர் திறந்து விடப்பட்டு வருகிறது. பவானிசாகர் அணையின் நீர்மட்டம் அதிகரித்து வந்தாலும் மற்ற அணைகள் நீர்மட்டம் தொடர்ந்து சரிந்து வருகிறது. நேற்று காலை நிலவரப்படி குண்டேரி பள்ளம் அணையின் நீர்மட்டம் 25.53 அடியாக உள்ளது. இதேபோல் வரட்டுபள்ளம் அணையின் நீர்மட்டம் 22.51 அடியாக சரிந்து உள்ளது. 30 அடி கொள்ளளவு கொண்ட பெரும்பள்ளம் அணையின் நீர்மட்டம் 15.45 அடியாக சரிந்து உள்ளது.

# ஊட்டி யுனிக் பள்ளியில் உலக யோகா தினம்



ஊட்டி, ஜூன்.23-

உலக யோகா தினத்தினை முன்னிட்டு, மேரா யுவ பாரத் சார்பில் ஊட்டியில் உள்ள யுனிக் பள்ளி வளாகத்தில் மாணவ, மாணவியர்களுக்கான யோகாசன பயிற்சி விழிப்புணர்வு வழங்கப்பட்டது.

நிகழ்விற்கு பள்ளியின் தலைமை ஆசிரியர் காயத்ரி தலைமை வகித்தார் , நீலகிரி மாவட்ட சமூக தன்னார்வலர்கள் கூட்டமைப்பின் மாவட்ட தலைவர் சுரேஷ் ரமணா முன்னிலை வகித்தார். ஜே.சி. ஐ ஊட்டி ஹில்ஸ்பார்க்ஸ் தலைவர் டேனியல் கிறிஸ்டோபர் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார்

மேலும் நீலகிரி மாவட்ட சமூக தன்னார்வலர் கூட்டமைப்பின் ஊட்டி பகுதி ஒருங்கிணைப்பாளர் ஜாபர், மற்றும் பேரிடர் பொறுப்பாளர் அஜய் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்

நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை நேரு யுவகேந்திரா ரஞ்சித் செய்திருந்தார்.



நீலகிரி மாவட்ட பாஜக தலைவர் வழக்கறிஞர் தருமன் வழிகாட்டுதலின்படி, மாவட்ட செயற்குழு உறுப்பினரும், கேத்தி ஊர்தலைவருமான சங்கர் தலைமையில் மதுரையில் நடைபெறும் முருக பக்தர்கள் மாநாட்டில் பங்கேற்க சென்ற முருக பக்தர்கள். இதில் கிருஷ்ணமூர்த்தி, பிரகாஷ், ராமு, ஜோகி உட்பட பலர் சென்றனர்.

# தடைக்காலம் முடிவு: ஈரோடு மார்க்கெட்டில் 20 டன்களாக மீன்கள் வரத்து அதிகரிப்பு

ஈரோடு, ஜூன். 23

ஈரோடு ஸ்டோனி பிரிட்ஜ் மார்க்கெட்டிற்கு மீன்பிடி தடைகாலத்தில் 9 டன் கடல் மீன்கள் மட்டுமே விற்பனைக்கு கொண்டுவரப்பட்டது. வரத்து குறைவு எதிரொலியாக மீன்கள் விலையும் அதிகரித்து காணப்பட்டது. இந்நிலையில் மீன்பிடி தடைக்காலம் நிறைவடைந்ததால் இன்று மார்க்கெட்டுக்கு மீன்கள் வரத்து அதிகரித்துள்ளது. ராமேஸ்வரம், நாகப்பட்டினம், தூத்துக்குடி, காரைக்கால், கேரளா போன்ற பகுதிகளில் இருந்து 20 டன் கடல் மீன்கள் இன்று ஈரோடு மீன் மார்க்கெட்டுக்கு விற்பனைக்கு கொண்டுவரப்பட்டிருந்தது. வரத்து அதிகரிப்பு எதிரொலியாக கடந்த வாரத்தை விட மீன்களின் விலை சற்று குறைந்துள்ளது.நேற்று மார்க்கெட்டில் விற்கப்பட்ட மீன்களின் விலை கிலோவில் வருமாறு:- கடல் கொடுவா - 850, வெள்ளை வாவல் - 1, 200, கருப்பு வாவல் - 900, வஞ்சரம் - 1,100, சால்மோன் - 900, முரல் - 450, மயில் - 800, கிளி - 700, சங்கரா - 400, விளமின் - 600, தேங்காய் பாறை - 600, பெரிய இறால் - 800, சின்ன இறால் - 600, ப்ளூ நண்டு - 750, அயிலை - 300, மத்தி - 300, டுயானா - 700, திருக்கை - 450, வசந்தி - 600, கனவா - 500. இதேபோல் கருங்கல்பாளையத்தில் உள்ள மீன் மார்க்கெட்டிலும் மீன்கள் வரத்து அதிகரித்து காணப்பட்டது. இதனால் வியாபாரமும் விறுவிறுப்பாக நடைபெற்றது.

ஊட்டியருகே போர்த்தி கிராமத்தில்

# கால்பந்தாட்ட போட்டி: நவீன் ஸ்போர்ட்ஸ் கிளப் அணி வெற்றி

## அ.தி.மு.க. மாவட்ட செயலாளர் கப்பச்சி வினோத் பரிசு கோப்பையை வழங்கினார்



ஊட்டி, ஜூன்.23-

ஊட்டியருகேயுள்ள போர்த்தி கிராமத்தில் நடைபெற்ற கால்பந்தாட்டப்போட்டியில் வெற்றி பெற்ற நவீன் ஸ்போர்ட்ஸ் கிளப் அணிக்கு அ.தி.மு.க. மாவட்ட செயலாளர் கப்பச்சி வினோத் பரிசுக் கோப்பையை வழங்கினார்

நீலகிரி மாவட்டம் ஊட்டி அருகேயுள்ள போர்த்தி கிராம விளையாட்டு மைதானத்தில் கால்பந்தாட்ட போட்டிகள் நடைபெற்றது. இறுதி போட்டியில்

போர்த்தி ஸ்போர்ட்ஸ் கிளப் சார்பாகவும் ,ஊர் மக்களின் சார்பாகவும், அழைப்பை ஏற்று சிறப்பு விருந்தினராக கலந்துக்கொண்ட அ.தி.மு.க. மாவட்ட கழக செயலாளர் அண்ணன் கப்பச்சி வினோத்திற்கு சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது. இறுதி போட்டியை துவக்கி வைத்து வெற்றி பெற்ற அணிக்கு வெற்றி கோப்பை வழங்கினார்.இறுதி போட்டியில் உதகை நவீன் ஸ்போர்ட்ஸ் கிளப் அணிக்கும் கீழ் கௌஹட்டி ஸ்போர்ட்ஸ் கிளப் அணிக்கும் நடைபெற்றது இதில் நவீன் ஸ்போர்ட்ஸ் கிளப் அணி 2க்கு 1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று கோப்பையை வென்றது.அதன் பின்னர் நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் மாவட்ட செயலாளர் கப்பச்சி வினோத் வெற்றி பெற்ற நவீன் ஸ்போர்ட்ஸ் கிளப் அணிக்கு வெற்றிக்கோப்பையை வழங்கினார்.இந்நிகழ்ச்சியில் குந்தா ஒன்றிய செயலாளர் கல்லக்கொரை ராஜேஸ், கேத்தி பேரூராட்;சி செயலாளர் ஜெய்(எ) ராதாகிருஷ்;ணன், அம்மா பேரவை மாவட்ட இணை செயலாளர் தாம்பட்டி சிவக்குமார், குந்தா ஒன்றிய பாசறை செயலாளர் இத்தலார் நரேந்திரன் மற்றும் கழக நிர்வாகிகள் நஞ்சநாடு செந்தில், போர்த்தி பௌ;ளி முத்தன், மற்றும் பொதுமக்கள் உட்பட கலந்துகொண்டனர்.சிறப்பான முறையில் நடைபெற்ற இப்போட்டிக்கான ஏற்பாடுகளை போர்த்;தி முருகேஸ் செய்திருந்தார்

# சிறப்பு கராத்தே பயிற்சி முகாம் மற்றும் பட்டை வழங்கும் விழா



ஈரோடு ஜூன் 23-

சுபோகாய் ஷிட்டோரியோ இன்டர்நேஷனல் கராத்தே தலைவர் அல்தப் ஆலம் ஆலோசனைப்படி சுபோகாய் ஷிட்டோரியோ இன்டர்நேஷனல் கராத்தே அமைப்பு மற்றும் ஈரோடு சேலஞ்சர்ஸ் கராத்தே கிளப் சார்பில் நேற்று ஈரோட்டில் சிறப்பு கராத்தே பயிற்சி முகாம் மற்றும் தகுதி பட்டை வழங்கும் விழா நடைபெற்றது

விழாவில் சிட்டோரியோ கராத்தே பெடரேஷன் சென்னை மாவட்ட செயலாளர் சார்லஸ் அண்ணாதுரை தலைமையில் நூற்றுக்கு மேற்பட்ட மாணவ மாணவியர்களுக்கு சிறப்பு பயிற்சி அளித்தார் தொடர்ந்து

மற்றும் தகுதி வாய்ந்தவர்களுக்கு கராத்தே பட்டை வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது இதில் பாராளுமன்ற உறுப்பினர் கே இ பிரகாஷ்ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி சந்திரகுமார் ஈரோடு டிஎஸ்பி பி சண்முகம் ஈரோடு வடக்கு மாவட்ட காவல் ஆய்வாளர் செந்தில் பிரபு திமுக மாநகரச் செயலாளர் மு. சுப்பிரமணி இரண்டாவது மண்டல தலைவர் காட்டு சுப்பு (எ) முப சுப்பிரமணியம் 12வது வார்டு உறுப்பினர் ஜெகதீசன் மற்றும் சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர் பி நீலாவதி பழனிச்சாமி உட்பட பலர் கலந்து கொண்டு தகுதி வாய்ந்தவர்களுக்கு கராத்தேப்பட்டைகள் வழங்கி வாழ்த்தி பேசினர்

விழாவில் உதவி பயிற்சியாளர்கள் சதீஷ் பவித்ரா உட்பட பலர் கலந்து கொண்டனர் இதில் 4 வயது முதல் 20 வயது வரை உள்ள மாணவ மாணவிகள் பங்கேற்றனர் நிகழ்ச்சி ஏற்பாடுகளை தமிழ்நாடு ஸ்போர்ட்ஸ் கராத்தேடு அசோசியேசன் ஈரோடு மாவட்ட செயலாளர் எம் குமார் மற்றும்சேலஞ்சர்ஸ் கராத்தே கிளப் துணை பயிற்சியாளர் கே லட்சுமி ஆகியோர் செய்து இருந்தனர்

# டிஜிட்டல் பண பரிவர்த்தனையில் சிறப்பான சேவை : இண்டஸ்இந்த் வங்கிக்கு மத்திய அரசு விருது வழங்கி பாராட்டு

கோவை, ஜூன் 23-

டிஜிட்டல் பண பரிவர்த்தனையில் சிறப்பான செயல்பாட்டிற்காக இண்டஸ்இந்த் வங்கிக்கு மத்திய நிதி அமைச்சகம் விருது வழங்கி பாராட்டி உள்ளது. புதுடெல்லியில் நடந்த டிஜிட்டல் பேமெண்ட் விருதுகள் வழங்கும் விழாவில் இந்த விருது வழங்கப்பட்டது, இதில் மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன், இணை அமைச்சர் பங்கஜ் சவுத்ரி உள்ளிட்ட முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.கடந்த நிதி ஆண்டில் டிஜிட்டல் பணம் செலுத்துதலில் சிறப்பாக செயல்பட்டதற்காக தனியார் துறை வங்கிகளில் 3வது இடத்தைப் பிடித்ததன் மூலம் இந்த விருது இவ்வங்கிக்கு கிடைத்துள்ளது.நாடு முழுவதும் லட்சக்கணக்கான மக்களுக்கு பாதுகாப்பாக டிஜிட்டல் முறையில் வங்கி சேவைகளை வழங்கியவதற்கும், புதுமையான டிஜிட்டல் கட்டணங்களை வழங்கியதற்கும், அதன் டிஜிட்டல் திறன்களை மேம்படுத்துவதற்கும் ஊக்கம் அளிக்கும் வகையில் இந்த விருது உள்ளது என்று இவ்வங்கி தெரிவித்துள்ளது. நிதிச் சேவைகள் துறையால் வெளியிடப்பட்ட அதிகாரப்பூர்வ மதிப்பெண்படி, இண்டஸ்இந்த் வங்கி கடந்த நிதியாண்டில் அதன் டிஜிட்டல் பரிவர்த்தனை இலக்கில் 120 சதவீதத்தை எட்டியுள்ளது. இந்தியாவில் உள்ள பிற தனியார் துறை வங்கிகளுடன் இதை ஒப்பிடுகையில் இது மிக உயர்ந்த சதவீதம் ஆகும்.டிஜிட்டல் பேமெண்ட்ஸ் விருது வழங்கும் விழாவில், நிதி சேவைகள் துறை செயலாளர் நாகராஜு மற்றும் பொருளாதார ஆலோசகர் டாக்டர் அபிஜித் பூகோன் ஆகியோரால் வழங்கப்பட்ட விருதை, இண்டஸ்இந்த் வங்கியின் தலைவர் ரித்தேஷ் ராஜ் சக்சேனா மற்றும் கட்டணங்கள், அட்டைகள் மற்றும் அரசு வணிகப் பிரிவு தலைவர் தேவ்ரத்தன் சூரி ஆகியோர் பெற்றுக் கொண்டனர்.இந்த சாதனை குறித்து கருத்து தெரிவித்த இண்டஸ்இந்த் வங்கி நுகர்வோர் வங்கிப் பிரிவு தலைவர் சௌமித்ரா சென் கூறுகையில், நாடு முழுவதும் டிஜிட்டல் வங்கி சேவையை வழங்க எங்கள் வங்கி மேற்கொண்ட முயற்சிகளை அங்கீகரிக்கும் விதமாக இந்த விருதை வழங்கிய நிதிச் சேவைகள் துறைக்கு நாங்கள் நன்றி தெரிவித்துக் கொள்கிறோம். இந்த அங்கீகாரம், பாதுகாப்பான மற்றும் தனிப்பயனாக்கப்பட்ட வங்கி சேவைகளை வழங்குவதற்கும், தொடர்ந்து புதுமைகளை உருவாக்குவதற்கும் எங்களுக்கு உத்வேகம் அளிக்கும்.

Printed, Published and Owned by S.Manimaran and Printed at Manimaran Printers
C3, Private industrial Estate, sidco industrial Estate,sidco po
Coimbatore-641 021
Phone: 0422-2410092
E-Mail: coimbatoreedi@thinaboomi.com
RNI.Regn No.61508/94
Editor:S.MANIMARAN
Subject to Madurai Jurisdiction Only

### டெஸ்ட் கிரிக்கெட் போட்டி:

# வாசிம் அக்ரமின் வாழ்நாள் சாதனையை தகர்த்த பும்ரா



**லீட்ஸ், ஜூன் 23-**

டெஸ்ட் போட்டிகளில் இங்கிலாந்துக்கு எதிரான முதல் ஆட்டத்தில் கைப்பற்றிய 3 விக்கெட்டுகளையும் சேர்த்து ஜஸ்பிரித் பும்ரா 'சேனா' நாடுகளில் (தென் ஆப்பிரிக்கா, இங்கிலாந்து, நியூசிலாந்து மற்றும் ஆஸ்திரேலியா) மட்டும் 148 விக்கெட்டுகள் கைப்பற்றியுள்ளார். இதன் மூலம் 'சேனா' நாடுகளில் அதிக விக்கெட்டுகள் கைப்பற்றிய ஆசிய வீரர் என்ற சாதனையை படைத்துள்ளார்.

**ஐந்து போட்டிகள்....**

இங்கிலாந்துக்கு சென்றுள்ள சுப்மன் கில் தலைமையிலான இந்திய கிரிக்கெட் அணி 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடுகிறது. இதில் இந்தியா-இங்கிலாந்து அணிகள் இடையிலான முதலாவது டெஸ்ட் போட்டி லீட்சில் நேற்று முன்தினம் தொடங்கியது. இதில் டாஸ் வென்ற இங்கிலாந்து அணி பீல்டிங்கை தேர்வு செய்தது.

**471 ரன்கள் குவிப்பு...**

அதன்படி முதலில் பேட் செய்த இந்திய அணி முதல் இன்னிங்சில் 113 ஓவர்களில் 471 ரன்கள் குவித்து ஆல்-அவுட் ஆனது. இந்திய அணி தரப்பில் ஜெய்ஸ்வால் (101 ரன்கள்), கில் (147 ரன்கள்) மற்றும் ரிஷப் பண்ட் (134 ரன்கள்) சதம் விளாசினர். இங்கிலாந்து அணி தரப்பில் கேப்டன் பென் ஸ்டோக்ஸ், ஜோஷ் டாங்கு தலா 4 விக்கெட் சாய்த்தனர்.

**209 ரன்கள் எடுத்தது..**

இதனையடுத்து முதல் இன்னிங்சை தொடங்கிய இங்கிலாந்து அணி 3 விக்கெட்டுக்கு 209 ரன்கள் எடுத்தது. ஆலி போப் 100 ரன்களுடனும் (131 பந்து, 13 பவுண்டரி), ஹாரி புரூக் ரன் ஏதுமின்றியும் களத்தில் உள்ளனர். இந்திய தரப்பில் பும்ரா மட்டுமே 3 விக்கெட்டுகளையும் கைப்பற்றியுள்ளார். நேற்று 3-வது நாள் ஆட்டம் நடைபெற்றது.

**148 விக்கெட்டுகள்...**

டெஸ்ட் போட்டிகளில் இந்த ஆட்டத்தில் கைப்பற்றிய 3 விக்கெட்டுகளையும் சேர்த்து ஜஸ்பிரித் பும்ரா 'சேனா' நாடுகளில் (தென் ஆப்பிரிக்கா, இங்கிலாந்து, நியூசிலாந்து மற்றும் ஆஸ்திரேலியா) மட்டும் 148 விக்கெட்டுகள் கைப்பற்றியுள்ளார். இதன் மூலம் 'சேனா' நாடுகளில் அதிக விக்கெட்டுகள் கைப்பற்றிய ஆசிய வீரர் என்ற சாதனையை படைத்துள்ளார். இதற்கு முன்னர் பாகிஸ்தான் முன்னாள் ஜாம்பவான் வீரரான வாசிம் அக்ரம் 146 விக்கெட்டுகள் கைப்பற்றியிருந்ததே சாதனையாக இருந்தது. தற்போது அந்த சாதனையை முறியடித்துள்ள பும்ரா புதிய சாதனை படைத்துள்ளார்.

**ஜோ ரூட்டை அவுட்...**

மேலும் ஜோ ரூட்டை அதிகமுறை அவுட் செய்த வீரர்கள் பட்டியலில், ஹசில்வுட் சாதனையை (2வது இடம்) பும்ரா சமன் செய்தார். முன்னதாக ஜோ ரூட் 28 ரன்னில் பும்ரா பந்து வீச்சில் ஆட்டமிழந்தார். இதன் மூலம் டெஸ்ட் போட்டிகளில் ஜோ ரூட்டை அதிக முறை அவுட் செய்த வீரர்கள் பட்டியலில், ஹசில்வுட் சாதனையை (2வது இடம்) சமன் செய்த பும்ரா சமன் செய்தார். ரூட்டை அதிகமுறை விக்கெட் எடுத்த வீரர் பட்டியலில் ஆஸ்திரேலியாவை சேர்ந்த பேட் கம்மின்ஸ் (11 முறை) வீழ்த்தி முதல் இடத்தில் உள்ளார்.

**அதிக விக்கெட்கள் பட்டியல்:**

1. ஜஸ்பிரித் பும்ரா - 148 விக்கெட்டுகள்.
2. வாசிம் அக்ரம் - 146 விக்கெட்டுகள்.
3. அனில் கும்ப்ளே - 141 விக்கெட்டுகள்.
4. இஷாந்த் சர்மா - 130 விக்கெட்டுகள்.

### 99 ரன்னில் ஆட்டமிழந்து

# சதம் அடிக்கும் வாய்ப்பை தவறவிட்ட ஹாரி ப்ரூக்..!

**லீட்ஸ், ஜூன் 23-**

இந்தியாவுக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியில், ஹாரி ப்ரூக் 99 ரன்னில் சதம் அடிக்கும் வாய்ப்பை தவற விட்டார்.

**முதலாவது டெஸ்ட்...**

இந்தியா-இங்கிலாந்து இடையிலான முதலாவது டெஸ்ட் போட்டி லீட்சில் நடந்து வருகிறது. டாஸ் வென்ற இங்கிலாந்து பந்துவீச்சை தேர்வு செய்தது. அதன்படி, இந்திய அணி முதல் இன்னிங்சில் 113 ஓவரில் 471 ரன்கள் குவித்து ஆல் அவுட் ஆனது. இதையடுத்து, இங்கிலாந்து அணி தனது முதல் இன்னிங்சில் களமிறங்கியது. இரண்டாம் நாள் ஆட்ட நேர முடிவில் இங்கிலாந்து அணி 49 ஓவரில் 3 விக்கெட்டுக்கு 209 ரன்கள் எடுத்தது.

**99 ரன்னில்...**

இந்நிலையில் நேற்று 3-வது நாள் ஆட்டம் நடைபெற்றது. இப்போட்டியில் சிறப்பாக விளையாடிய ஹாரி ப்ரூக் 99 ரன்னில் அவுட்டாகி சதம் அடிக்கும் வாய்ப்பை நூலிழையில் இழந்தார். பிரசித் கிருஷ்ணா பந்துவீச்சில் ஹாரி ப்ரூக் ஆட்டமிழந்தார். ஏற்கனவே 0 மற்றும் 46 ரன்னில் இருக்கும் போது ப்ரூக் கொடுத்த கேட்ச் வாய்ப்பை இந்திய வீரர்கள் தவறவிட்டனர். 2 முறை ப்ரூக்கிற்கு இருந்த அதிர்ஷ்டம் 99 ரன்னில் இல்லாமல் போனதால் சதம் அடிக்கும் வாய்ப்பை இழந்தார்.

### நடுவரின் முடிவு மீது அதிருப்தி:

# கோபத்தில் பந்தை தூக்கி எறிந்த பண்ட்

**லீட்ஸ், ஜூன் 23-**

நடுவரின் முடிவு மீதான அதிருப்தியால் கோபத்தில் பண்ட் பந்தை தூக்கி எறிந்த சம்பவம் இணையத்தில் வைரலாகி உள்ளது.

**முதலாவது டெஸ்ட்...**

இங்கிலாந்துக்கு சென்றுள்ள சுப்மன் கில் தலைமையிலான இந்திய கிரிக்கெட் அணி 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடுகிறது. இதில் இந்தியா-இங்கிலாந்து அணிகள் இடையிலான முதலாவது டெஸ்ட் போட்டி லீட்சில் தொடங்கியது. இதில் டாஸ் வென்ற இங்கிலாந்து அணி பீல்டிங்கை தேர்வு செய்தது.

**471 ரன்கள் குவிப்பு...**

அதன்படி முதலில் பேட் செய்த இந்திய அணி முதல் இன்னிங்சில் 113 ஓவர்களில் 471 ரன்கள் குவித்து ஆல்-அவுட் ஆனது. இந்திய அணி தரப்பில் ஜெய்ஸ்வால் (101 ரன்கள்), கில் (147 ரன்கள்) மற்றும் ரிஷப் பண்ட் (134 ரன்கள்) சதம் விளாசினர். இங்கிலாந்து அணி தரப்பில் கேப்டன் பென் ஸ்டோக்ஸ், ஜோஷ் டாங்கு தலா 4 விக்கெட் சாய்த்தனர். இதனையடுத்து முதல் இன்னிங்சை தொடங்கிய இங்கிலாந்து அணி 3 விக்கெட்டுக்கு 209 ரன்கள் எடுத்தது. ஆலி போப் 100 ரன்களுடனும் ஹாரி புரூக் ரன் ஏதுமின்றியும் களத்தில் இருந்தனர். இந்திய தரப்பில் பும்ரா மட்டுமே 3 விக்கெட்டுகளையும் கைப்பற்றியிருந்தார்.

**கோரிக்கை....**

இந்த சூழலில் 3-வது நாள் ஆட்டம் நேற்று நடைபெற்றது. நேற்றைய ஆட்டம் தொடங்கிய 12-15 ஓவர்களிலேயே பந்தின் தன்மை மாறிவிட்டது. வேறு புதிய பந்தை தரும்படி நடுவர்களிடம் அடிக்கடி முறையிட்டனர். இருப்பினும் நடுவர்கள் இந்திய அணியினரின் கோரிக்கைகளை நிராகரித்தார்.

**தூக்கி எறிந்து...**

ஒரு கட்டத்தில் இந்திய அணியின் துணை கேப்டனான ரிஷப் பண்ட் நடுவரிடம் நேரடியாக சென்று பந்தின் தன்மையை குறிப்பிட்டு காட்டி முறையிட்டார். ஆனாலும் நடுவர் அதனை கண்டுகொள்ளவில்லை. இதனால் அதிருப்தியடைந்த பண்ட் பந்தை வேகமாக தூக்கி எறிந்து விட்டு சென்றார். இந்த வீடியோ இணையத்தில் வைரலாகி வருகிறது.

## பும்ராவுக்கு டக்கெட் புகழாரம்

இந்தியா மற்றும் இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான லீட்ஸ் டெஸ்ட் போட்டியின் முதல் இன்னிங்ஸில் பென் டக்கெட் விக்கெட்டை பும்ரா கைப்பற்றியது குறிப்பிடத்தக்கது. இந்நிலையில், பும்ரா குறித்து பென் டக்கெட் கூறுகையில், "உலகின் தலைசிறந்த பவுலர் பும்ரா. அவரது பந்து வீச்சை எதிர்கொள்வது அவ்வளவு கடினமாக உள்ளது. எந்த மாதிரியான சூழலிலும் தனது ஆட்டத்திறன் மூலம் அவர் சிறந்து விளங்குகிறார். இந்தியாவின் தட்டையான ஆடுகளம் (பிளாட் பிட்ச்) மற்றும் இங்கிலாந்து என எங்கும் அவரது பந்து வீச்சு தரமாக உள்ளது.

அவர் வீசும் பந்து இரண்டு பக்கமும் இங்கு ஸ்விங் ஆகிறது. இருப்பினும் நாங்கள் சேதாரத்தை குறைத்துள்ளோம். இல்லையென்றால் நிலைமை மோசமாகி இருக்கும். அவர் ஒரு உலகத் தரம் வாய்ந்த பந்து வீச்சாளர். அவரைப் போன்ற ஒருவரை நீங்கள் அப்படியே பந்து வீச செய்து கடந்துவிட முடியாது. அவரை அழுத்தத்தில் வைக்க முயற்சிக்கலாம். மோசமான லைன் மற்றும் லெந்த்தில் வரும் பந்துகளை ஆடலாம்" என டக்கெட் கூறியுள்ளார்.

## காம்பீர் மீது குற்றச்சாட்டு

இங்கிலாந்துக்கு சென்றுள்ள சுப்மன் கில் தலைமையிலான இந்திய கிரிக்கெட் அணி 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடுகிறது. இதில் இந்தியா-இங்கிலாந்து அணிகள் இடையிலான முதலாவது டெஸ்ட் போட்டி லீட்சில் தொடங்கியது. முதலில் பேட் செய்த இந்திய அணி முதல் இன்னிங்சில் 113 ஓவர்களில் 471 ரன்கள் குவித்து ஆல்-அவுட் ஆனது. இந்திய அணி தரப்பில் ஜெய்ஸ்வால் (101 ரன்கள்), கில் (147 ரன்கள்) மற்றும் ரிஷப் பண்ட் (134 ரன்கள்) சதம் விளாசினர். இந்நிலையில் இந்த ஆட்டத்தில் ரிஷப் பண்ட் ஆட்டமிழக்க இந்திய அணியின் தலைமை பயிற்சியாளர் கவுதம் காம்பீர் கொடுத்த தவறான மெசெஜ் தான் காரணம் என்று முன்னாள் வீரரான தினேஷ் கார்த்திக் குற்றம்சாட்டியுள்ளார்.

இது குறித்து அவர் பேசுகையில், " மிகவும் சுவாரஸ்யமான விஷயம் என்னவென்றால், ரிஷப் பண்டிற்கு வெளியிலிருந்து ஒரு செய்தி அனுப்பப்பட்டபோது, அது அவரது ஆட்டத்தைக் கட்டுப்படுத்தியது. ஒரு பயிற்சியாளராக, நீங்கள் பேட்டருக்கு ஒரு செய்தியை தெரிவிக்க விரும்புவது முற்றிலும் புரிந்து கொள்ளத்தக்கது.

ஆனால் காலப்போக்கில், சில வீரர்களுக்கு, நீங்கள் அந்த செய்தியை எவ்வாறு அனுப்புகிறீர்கள் என்பது மிக முக்கியமானதாக மாறும். சில வீரர்களுக்கு தவறான செய்தியை வெளியில் இருந்து அனுப்பினால் இப்படித்தான் நடக்கும்" என்று கூறினார்.

## ஹாக்கி: இந்தியா தோல்வி

9 அணிகள் பங்கேற்றுள்ள 6-வது புரோ ஹாக்கி லீக் தொடரில் ஐரோப்பிய சுற்று போட்டிகள் பெல்ஜியத்தில் உள்ள ஆன்ட்வெர்ப்பில் நடந்து வருகிறது. இதில் ஆண்கள் பிரிவில் நடந்த ஆட்டம் ஒன்றில் இந்தியா- பெல்ஜியம் அணிகள் மோதின. இதில் கோல் மழை பொழிந்த பெல்ஜியம் 6-3 என்ற கோல் கணக்கில் இந்தியாவை வீழ்த்தியது. இந்த சுற்றில் இந்திய அணி தொடர்ச்சியாக சந்தித்த 7-வது தோல்வி இதுவாகும். இந்திய அணி தனது அடுத்த லீக் ஆட்டத்தில் மீண்டும் பெல்ஜியத்தை சந்திக்கிறது.

முன்னதாக பெண்கள் பிரிவில் நடந்த ஆட்டத்தில் இந்திய அணி 1-5 என்ற கோல் கணக்கில் பெல்ஜியத்திடம் பணிந்தது. இன்று நடைபெறும் ஆட்டத்தில் இந்திய அணி மறுபடியும் பெல்ஜியத்துடன் மோதுகிறது.

### அடுத்த ஒருநாள் உலகக்கோப்பையில்

# கோலி, ரோகித் விளையாடுவது எளிதான காரியமல்ல: கங்குலி

**மும்பை, ஜூன் 23-**

விராட், ரோகித் ஒருநாள் உலகக்கோப்பையில் விளையாடுவது எளிதல்ல என்று இந்திய அணியின் முன்னாள் கேப்டன் சவுரவ் கங்குலி தெரிவித்துள்ளார்.

**ரோகித், கோலி ஓய்வு...**

இந்திய கிரிக்கெட் அணியின் முன்னணி வீரர்களான ரோகித் சர்மா மற்றும் விராட் கோலி இந்திய அணிக்காக பல்வேறு போட்டிகளில் வெற்றியை பெற்று தந்துள்ளனர். இவர்கள் இருவரும் கடந்த டி20 உலகக்கோப்பை தொடரை வென்ற பின்னர் சர்வதேச டி20 கிரிக்கெட்டில் ஓய்வு பெறுவதாக அறிவித்தனர். இந்நிலையில், யாரும் எதிர்பார்க்காத வண்ணம் டெஸ்ட் கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெறுவதாக இருவரும் சமீபத்தில் அறிவித்தனர்.

**அதிர்ச்சி...**

இந்த முடிவு அவர்களது ரசிகர்களுக்கு மட்டுமின்றி ஒட்டுமொத்த கிரிக்கெட் உலகத்தையும் அதிர்ச்சியில் ஆழ்த்தியது. இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரில் இருவரும் விளையாடுவர்கள் என எதிர்பார்த்த வேளையில் இருவரும் அடுத்தடுத்து ஓய்வு முடிவை அறிவித்து அதிர்ச்சி அளித்தனர்.

**சந்தேகம்...**

இதனையடுத்து ஒருநாள் போட்டிகளில் மட்டுமே தொடர்ந்து விளையாட உள்ள அவர்கள் அடுத்த உலகக்கோப்பை (2027) வரை விளையாடுவதை இலக்காக கொண்டுள்ளனர். இருப்பினும் அவர்களால் ஒருநாள் உலகக்கோப்பை வரை தொடர்ந்து பார்மில் இருக்க முடியுமா? என்பது சந்தேகம் தான். அந்த உலகக்கோப்பை தொடருக்கு முன்னதாக இந்திய அணி ஏறக்குறைய 27 ஒருநாள் போட்டிகளில் மட்டுமே விளையாட உள்ளது. அந்த போட்டிகளில் இருவரும் தொடர்ந்து அசத்தினால் மட்டுமே உலகக்கோப்பை வரை இந்திய அணியில் இடம்பெறுவார்கள் என்று கூறப்படுகிறது.

**எளிதானதல்ல...**

இந்நிலையில் 2027 ஒரு நாள் உலகக்கோப்பை தொடரில் விராட் கோலி மற்றும் ரோகித் சர்மா விளையாடுவது எளிதானதல்ல என்று இந்திய அணியின் முன்னாள் கேப்டனான சவுரவ் கங்குலி தெரிவித்துள்ளார். இதற்கான காரணம் குறித்து அவர் பேசியது பின்வருமாறு:- "அது அவ்வளவு எளிதானதாக இருக்காது. அவர்கள் விளையாட வருடத்திற்கு 15 ஆட்டங்கள் மட்டுமே இருக்கிறது. எனவே என்னிடம் எந்த ஆலோசனையும் இல்லை. அவர்களுக்கும் என்னைப் போலவே விளையாட்டு தெரியும் என்று நினைக்கிறேன். அவர்கள் ஒரு முடிவை எடுப்பார்கள். ஆனால் விளையாட்டு அவர்களிடமிருந்து விலகிச் செல்லும், அல்லது அவர்கள் விளையாட்டிலிருந்து விலகிச் செல்வார்கள் என்பதை நாம் அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும்" என்று கூறினார்.

### 4 ஆண்டுகளுக்கு பிறகு

# 2-வது டெஸ்ட் போட்டியில் களமிறங்குகிறார் ஆர்ச்சர்..?

**லண்டன், ஜூன் 23-**

இந்தியாவுக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் ஜோப்ரா ஆர்ச்சர் களமிறங்க வாய்ப்புள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

**பின்னடைவு...**

இந்தியா மற்றும் இங்கிலாந்து அணிகளுக்கு இடையேயான முதல் டெஸ்ட் போட்டி லீட்ஸில் நடைபெற்று வருகிறது. இந்திய அணி முதல் இன்னிங்ஸில் 471 ரன்களுக்கு ஆட்டமிழக்க, இங்கிலாந்து அணி அதன் முதல் இன்னிங்ஸில் விளையாடி வருகிறது. இந்தப் போட்டியின் முதல் நாளில் இந்திய அணி சிறப்பாக விளையாடி ரன்கள் குவித்தது. யஷஸ்வி ஜெய்ஸ்வால் மற்றும் ஷுப்மன் கில் இருவரும் முதல் நாளில் சதம் விளாசினர். பந்துவீச்சில் இந்திய அணிக்கு இங்கிலாந்து சவாலளிக்கத் தவறியது. அந்த அணியில் வேகப் பந்து வீச்சாளர்கள் ஜோப்ரா ஆர்ச்சர் மற்றும் மார்க் வுட் இல்லாதது பெரும் பின்னடைவாகப் பார்க்கப்பட்டது.

**களமிறங்குவாரா...?**

இங்கிலாந்து அணியின் வேகப் பந்துவீச்சாளர் ஜோப்ரா ஆர்ச்சர் கவுன்ட்டி போட்டியில் விளையாடவுள்ளதால், இந்தியாவுக்கு எதிரான 2-வது டெஸ்ட் போட்டிக்கான இங்கிலாந்து அணியில் அவர் சேர்க்கப்படலாம் எனக் கூறப்படுகிறது. இது தொடர்பாக வெளியான தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: ஜோப்ரா ஆர்ச்சர் கவுன்ட்டி போட்டிகள் மூலம், மீண்டும் சிவப்புப் பந்து போட்டிகளில் விளையாடவுள்ளார். இந்தப் போட்டியில் எந்த ஒரு அசௌகரியமுமின்றி அவர் பந்துவீச்சில் ஈடுபடும் பட்சத்தில், இந்தியாவுக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டிக்கான இங்கிலாந்து அணியில் அவர் சேர்க்கப்படலாம். பிளேயிங் லெவனில் அவர் விளையாடுவதற்கான வாய்ப்பு அதிகம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**காயம் காரணமாக...**

நடப்பு ஐ.பி.எல். தொடரில் ராஜஸ்தான் ராயல்ஸ் அணிக்காக விளையாடிய ஜோப்ரா ஆர்ச்சர், கடந்த நான்கு ஆண்டுகளாக காயம் காரணமாக முதல் தர கிரிக்கெட்டில் விளையாடாதது குறிப்பிடத்தக்கது. இந்தியா மற்றும் இங்கிலாந்து அணிகளுக்கு இடையேயான இரண்டாவது டெஸ்ட் போட்டி வருகிற ஜூலை 2 ஆம் தேதி முதல் தொடங்குகிறது.

**மழைத்துளி மண்ணின் உயிர்துளி**

# கடன் வாங்குவதில் நாட்டிலேயே தமிழ்நாடு முதலிடம்: இ.பி.எஸ்.



**சென்னை, ஜூன் 23-**

கடன் வாங்குவதில் நாட்டிலேயே முதன்மை மாநிலமாக்கியது தான் மு.க.ஸ்டாலினின் சாதனை என்று எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.

அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில் கூறியிருப்பதாவது:- உலக நாடுகளுக்கு முதலீட்டை ஈர்க்கச் செல்கிறேன் என்று கூறி சுற்றுலா சென்று, தமிழ்நாடு அந்நிய முதலீடுகளில் பின்னடைவில் உள்ளது என்பதை தொழில் மற்றும் உள்நாட்டு வர்த்தகத்தை மேம்படுத்துவதற்கான துறையின் 2024-25 நிதியாண்டு தரவுகள் அம்பலப்படுத்துகின்றன. நான்காண்டுகளில் தமிழகத்தை அனைத்துத் துறைகளிலும் பின்னுக்குத் தள்ளி, கடன் வாங்குவதில் நாட்டிலேயே முதன்மை மாநிலமாகியுள்ளது. இந்தச் சாதனையை பல கோடி அரசு செலவில் விளம்பரப்படுத்துவது வேதனை.

இரு நாட்களுக்கு முன்பு தகவல் தொழில்நுட்பம் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் பி.டி.ஆர். பழனிவேல் தியாகராஜன் ஆந்திரா, கர்நாடகா, தெலுங்கானாவுடன் ஒப்பிடுகையில், தமிழகத்தில் தொழில்துறை பின்தங்கியுள்ளது என்று கருத்து தெரிவித்துள்ளார். இதுவே, ஸ்டாலினின் ஆட்சியில் தொழில்துறை பின்தங்கியுள்ளது என்பதற்கு சான்று. இந்தக் கொடுமையை அனுபவிக்கும் தமிழக மக்கள், 2026 சட்டமன்றப் பொதுத் தேர்தலில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தை ஆட்சியில் அமர்த்துவார்கள். இவ்வாறு அவர் கூறினார்.

# உலகின் முதல் புரட்சித்தலைவர் முருகன்: மதுரை மாநாட்டில் பவன் கல்யாண் பேச்சு



**மதுரை, ஜூன் 23-**

உலகின் முதல் புரட்சித்தலைவர் முருகப்பெருமான் என்று ஆந்திர துணை முதல்வர் பவன் கல்யாண் தெரிவித்தார்.

மதுரை பாண்டிகோவில் அம்மா திடலில் இந்து முன்னணி சார்பில் முருக பக்தர்கள் மாநாடு நடைபெற்றது. திருப்பரங்குன்றம் மலை, கோவில் பின்னணியில் இருப்பது போன்று இந்த மாநாட்டுக்கு மேடை அமைக்கப்பட்டிருந்தது. மேலும் மேடையில் அறுபடை வீடுகளின் கோபுரங்கள் அமைக்கப்பட்டு நடுவில் முருகப்பெருமான் வேலுடன் நிற்கும் பிரமாண்ட சிலை போன்ற வடிவமைப்பும் இடம் பெற்றுள்ளது.

முருக பக்தர்கள் மாநாட்டில் ஆந்திர துணை முதல்வர் பவன் கல்யாண் பங்கேற்றுள்ளார். அவர் வேட்டி, சட்டை மற்றும் பச்சை துண்டு அணிந்து பங்கேற்றுள்ளார். இந்த நிலையில் முருக பக்தர்கள் மாநாட்டில் பேசிய பவன் கல்யாண் கூறியதாவது:-

என்னை மதுரைக்கு வரவழைத்தது முருகன். மதுரைக்கும் முருகனுக்கும் நெருக்கம் அதிகம். உலகின் முதல் புரட்சித்தலைவர் முருகப்பெருமான். கடைசி அறுபடைவீடு மதுரையில் தான் உள்ளது. மதுரை என்பது மீனாட்சியின் பட்டணம். மீனாட்சி அம்மன் தாய் பார்வதியின் அம்சம். முருகனின் தந்தை சிவபெருமான் முதல் சங்கத்துக்கு தலைமை ஏற்று மதுரையில் தான் இருந்தார். எனவே இந்த மதுரையில் தான் தாயும் இருக்கிறார்; தந்தையும் இருக்கிறார்; மகனும் இருக்கிறார்.

அப்படி என்றால் மதுரை மக்கள் எவ்வளவு புண்ணியம் செய்து இருக்க வேண்டும். அந்த புண்ணியத்தின் விளைவாக பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவதரித்தார். தென் தமிழ்நாட்டின் மாபெரும் தலைவர் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் முருகனின் அவதாரமாக கருதப்படுகிறார். மீனாட்சி அம்மன் கோவில் குறித்து இந்த தலைமுறைக்கு தெரியாத விஷயத்தை சொல்கிறேன். 14-ம் நூற்றாண்டில் மீனாட்சியம்மன் கோவில் மூடப்பட்டிருந்தது மதுரையின் இருண்ட காலம்.

எல்லாரையும் சமமாக பார்ப்பதுதான் அறம். இந்துக்களை சீண்டி பார்க்காதீர்கள். சாதுமிரண்டால் காடு கொள்ளாது. இன்றைக்கும் முருகனை சீண்டி பார்க்கிறது ஒரு கூட்டம். அறத்தை அசைத்து பார்க்க அவர்கள் யார்? மற்றவர்கள் நம்பிக்கையை கொச்சைப்படுத்த அவர்கள் யார்? உங்கள் நம்பிக்கையை நாங்கள் கேள்வி கேட்கவில்லை. இந்து மதத்தை அவமரியாதை செய்யாதீர்கள். என் கடவுளை கேலி செய்துவிட்டு அதனை மதசார்பின்மை என்று கூறுகிறார்கள். இவ்வாறு அவர் கூறினார்.

# ஜம்மு - காஷ்மீரில் இயல்புநிலை திரும்பிவிட்டது: மத்திய அமைச்சர்

**புது தில்லி, ஜூன் 23-**

ஜம்மு - காஷ்மீரில் பஹல்காம் தாக்குதலுக்குப் பின் இயல்பு நிலை திரும்பிவிட்டதாக மத்திய அமைச்சர் ஜிதேந்திர சிங் தெரிவித்துள்ளார்.

அவர் பேசியதாவது: "இன்று (நேற்று) பஹல்காமுக்குச் சென்ற நான், ஜம்மு காஷ்மீரில் சுற்றுலா துறை வளர்ச்சியடைந்து வருகிறது. இயல்புநிலை திரும்பியுள்ளது என்பதை உறுதிப்படுத்துகிறேன்" என்றார். மேலும், அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: "இந்த பகுதியில் ரயில் வசதியின்றி பல ஆண்டுகளாக காத்திருந்ததற்கு பிரதமர் மோடியின் தலைமையின் கீழ் இப்போது இந்த பகுதிகளுக்கு ரயில் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

பிரதமர் மோடி பதவியேற்ற கடந்த 11 ஆண்டுகளில் ஒவ்வோர் ஆண்டும், புது மைல்கல் சாதனையை எட்டுகிறோம். உள்கட்டமைப்பு, அரசு நிர்வாகம், தொழில்நுட்பம், இளைஞர் மேம்பாடு இப்படி எந்த துறையானாலும் ஒவ்வொரு இந்தியருக்கும் ஏராளமான வாய்ப்புகளை உருவாக்கியுள்ளோம். கடந்த 11 ஆண்டுகளில் மத்திய அமைச்சரவையில் உள்ள எந்தவொரு அமைச்சர் மீதும் ஒரு ஊழல் குற்றச்சாட்டு கூட இல்லை. ஆனால், அதற்கு முந்தைய ஆட்சியில் முறைகேடு நடைபெறுவதே வாடிக்கையாக இருந்து வந்திருக்கிறது" என்றார்.

### அகமதாபாத்தில் விபத்துக்குள்ளான

# விமான பாகங்களை அகற்றும் பணி முழுவீச்சில் தொடக்கம்

**அகமதாபாத், ஜூன் 23-**

அகமதாபாத்தில் விபத்துக்குள்ளான ஏர் இந்தியா விமானத்தின் சிதைந்த பாகங்களை அப்புறப்படுத்தும் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன.

குஜராத் மாநிலம், அகமதாபாத் விமான நிலையத்தில் இருந்து கடந்த 12ஆம் தேதி லண்டன் புறப்பட்ட ஏர் இந்தியா விமானம், புறப்பட்ட சில நொடிகளில் கீழே விழுந்து வெடித்துச் சிதறியது. இதில், விமானத்தில் பயணித்த ஒருவரை தவிர, மீதமுள்ள 241 பேர் உள்பட 270 பேர் பலியாகினர். இந்த நிலையில் விபத்துக்குள்ளான ஏர் இந்தியா விமானத்தின் சிதைந்த பாகங்களை விபத்து நடந்த இடத்திலிருந்து அப்புறப்படுத்தும் பணிகள் ஞாயிற்றுக்கிழமை தொடங்கப்பட்டன.

இதுகுறித்து போலீஸ் அதிகாரி ஜெய்பால்சிங் ரத்தோர் கூறுகையில், விபத்துக்குள்ளான ஏர் இந்தியா விமானத்தின் பாகங்களை நேற்று முதல் விமான நிலைய வளாகத்தில் உள்ள குஜராத் மாநில விமான போக்குவரத்து உள்கட்டமைப்பு நிறுவன கட்டடத்திற்கு நகர்த்தத் தொடங்கியுள்ளோம். முழு உடைந்த பாகங்களையும் மாற்ற 48 முதல் 72 மணிநேரம் ஆகும். விமான விபத்து குறித்து விசாரணை நடத்தி வரும் விமான விபத்து புலனாய்வு அமைப்பின் கட்டுப்பாட்டில் இந்த விமானத்தின் பாகங்கள் இருக்கும் என்று தெரிவித்தார்.

**மரம் மனிதனின் உரம்**

# உங்கள் நட்சத்திர பலன்கள்

( 23.06.2025 முதல் 29.06.2025 வரை )

ஜோதிடர்
எஸ். விஜயநரசிம்மன், மதுரை.

## மேஷம்

(அஸ்வினி-1, 2, 3, 4 பாதங்கள்— பரணி-1, 2, 3, 4 பாதங்கள்— கார்த்திகை-1, பாதம்)

அஸ்வினி --

இந்த வாரம் உங்களுக்கு ஆபரண சேர்க்கை உண்டு. உடன்பிறப்புகள் இடையே கருத்து வேறுபாடு ஏற்படும். புத்திர பாக்கியம் ஏற்படும். கௌரவப் பட்டங்கள், பதவிகள் ஆகியவை கிடைக்கும். அரசாங்கத் துறைகள் மூலம் எதிர்பார்த்த அனுகூலங்கள் யாவும் வந்து சேரும். சில விஷயங்களில், சிலருக்குத் தடை, தாமதங்கள் ஏற்படும். மேடைப் பேச்சாளர்கள் தங்கள் பேச்சின் மூலம் வருமானம் ஈட்டுவது உறுதி. கொடுத்த கடனை திரும்பப் பெறுவதில் சிக்கல்கள் எழாது. சுலபமாக வசூலாகிவிடும். தம்பதிகளுக்கு இடையே கோபம் மறைந்து சமாதானமாக இணைந்து பேரின்பம் அடைவது உறுதி. மிகவும் அன்பு காட்டும் பெண்களின் ஆதரவால் லாபம் ஏற்படும்.

பரணி --

இந்த வாரம் உங்களுக்கு சிறப்பான பலன்கள் கிடைக்கும். விருந்தினர் வருகையால் வீட்டில் கும்மாளமும், குஷியாகும் இருக்கும். சினிமா, மால்களில் பொழுது போக்குதல் எனச் செலவுக்கும் குறைவிருக்காது. பண விஷயமான சிந்தனைகள் எழும். தந்தைவழி உறவுகளால் அனுகூலம் ஏற்படும். அரசு வகையில் கட்ட வேண்டிய நிலுவைகள், வரி பாக்கிகள் ஆகியவற்றைச் செலுத்துவதற்கு தேவையான பணவரவுகள், பணவுதவி கள் வந்து சேரும். பணிபுரியும் இடத்தில் மேலதிகாரிகளின் ஆதரவால் பதவி உயர்வு போன்ற முன்னேற்றங்களை அடைய முற்படுவீர்கள். மனதுக்குப் பிரியமான மங்கையுடன் ஏற்படும் இனிய பயணங்களால் இன்புறுவீர் கள்.

கார்த்திகை 1 ஆம் பாதம்.—

இந்த வாரம் விருந்தினர் வருகையால் வீட்டில் கும்மாளமும், குஷியாகும் இருக்கும். சுப வார்த்தைகளைக் கேட்டு ஞான தன்மைக்கு மாற முயல்வீர்கள் சிலருக்கு நண்பர்கள் பகைவர் ஆகலாம். எப்போதும் பண விஷயமான சிந்தனைகள் எழும். அரசு அதிகாரிகள் தொல்லை தரலாம். நண்பர்களிடையே போட்டி பொறாமைகள் அதிகமாகும். சிலர் காவல்துறை பிரச்சினைகளை சந்திக்க நேரலாம். செய்யும் தொழிலில் இலாபம் குறைந்து, தடைகள் ஏற்படலாம். தந்தை வழி உறவுகள் மூலம் தொல்லை ஏற்படலாம். சிலருக்குக் குழந்தைகள் மூலம் அவமானமும், மனக் கலக்கம் ஏற்படும். அரசாங்க வகை இலாபத்தால் மனம் மகிழ்ச்சி அடையும். புதிய நண்பர்கள் சேர்க்கையால் தொழிலில் இலாபம் ஏற்படலாம்.

## ரிஷபம்

(கார்த்திகை – 2,3,4 பாதங்கள்-ரோகிணி-1,2,3,4-பாதங்கள்-மிருகசிரீடம்-1,2 பாதங்கள் )

கார்த்திகை 2,3,4 பாதங்கள் –

இந்த வாரம் எதிர்பாராத தனவரவு ஏற்படும். புத்திர பாக்கியம், பதவி உயர்வு, புதிய தொழில் வாய்ப்புகள் ஏற்படும். ஆன்மீகவாதிகளின் சந்திப்பு மகிழ்ச்சி தரும். வருமானம் அதிகம் வந்தாலும், செலவுகளை கட்டுப்படுத்த முடியாது. தொழிலில் கூட்டாளியின் புதிய ஆலோசனைகள் வரவேற்கத்தக்கதாக இருக்கும். அவரது கடமை உணர்வும், திறமையும் உங்களுக்கு திருப்திகரமாக இருந்தாலும், அவரை முழுமையாக நம்பி விடாதீர்கள். சந்தையின் தேவைக்கு ஏற்ப புதிய முதலீடுகளை செய்ய முற்படுவீர்கள். சிலருக்குக் குதூகலமாய் இருந்த குடும்ப ஒற்றுமை குறைவதால் மகிழ்ச்சி குறையும். எனவே, அனுசரித்துச் செல்வது நல்லது. தூக்கமின்மையால் சுறுசுறுப்பற்ற தன்மை நிலவும்.

ரோகிணி –

இந்த வாரம் தனவரவு அதிகரிக்கும். புத்திர பாக்கியம் ஏற்படும். கௌரவப் பட்டங்கள், பதவிகள் ஆகியவை கிடைக்கும். தொழிலில் எதிர்பார்த்தபடி இலாபங்கள் இருக்கும். நண்பர்கள் மற்றும் உறவுகளின் உதவியால் உள்ளம் மகிழும். அரசுப் பணியாளர்களுக்கு ஆணையிடும் அதிகார பதவி கிடைக்கும். கோடை வெப்பம் காரணமாக உஷ்ணம் சம்பந்தமான உபாதைகள் வரலாம். உடல் நிலையை அலட்சியப்படுத்தாதீர்கள். மனைவியின் அரவணைப்பு மூலம் மனக் கவலைகள் மறந்து பறந்துவிடும். குடும்ப நண்பர்கள் அனுசரணையாக இருந்து உதவிகரம் நீட்டுவர். பெண்கள் சுகபோகத்தை, வேலையையும் ஒருசேர பார்த்து சமாளிக்கத் திணற வேண்டிய சூழ்நிலை நிலவும். ஆயினும் தங்கள் திறமையால் சமாளித்து விடுவர்.

மிருகசிரீஷம் – 1, 2 பாதங்கள் –

இந்த வாரம் விருந்தினர் வருகை வீட்டில் கொண்டாட்டத்தையும், கும்மாளத்தையும் ஏற்படுத்தி மனதை குஷியாக வைக்கும். உங்கள் எண்ணங்கள் யாவும் ஈடேறும். புதிய சொத்துக்கள் சேரும். சுக சௌகரியங்கள் மேம்படும். சுப வார்த்தைகளைக் கேட்டு நல்ல குணங்களுக்கு மாற முயல்வீர்கள். சிலருக்கு எப்போதும் பண விஷயமான சிந்தனைகள் எழும். அரசு அதிகாரிகள் தொல்லை தரலாம். செய்யும் தொழிலில் இலாபம் அதிகரிக்க பொருளாதாரம் சீராகும். தந்தை வழி உறவுகளால் ஆதாயம் உண்டு. குழந்தைகளின் முன்னேற்றம் மகிழ்ச்சி அளிக்கும். அரசாங்க வகை இலாபத்தால் மனம் மகிழ்ச்சி அடையும். புதிய நண்பர்கள் சேர்க்கையால் தொழிலில் இலாபம் ஏற்படலாம்.

## மிதுனம்

(மிருகசீரிடம்- 3,4 பாதங்கள், திருவா திரை-1,2,3,4 பாதங்கள், புனர்பூசம் -1,2,3 பாதங்கள்)

மிருகசிரீஷம் – 3 , 4 பாதங்கள். –

இந்த வாரம் எதிர்பார்த்தபடி தனவரவுகள் கைக்கு வந்து சேரும். வந்த பணத்தை தரும காரியங்களுக்கு தாராளமாகச் செலவு செய்து மகிழ்வார்கள். வாழ்க்கையில் முன்னேற்ற ங்களையும், சுகானுபவங்கள் மற்றும் சௌகரியத்தையும் அடைவீர்கள். தாய் மாமனுக்கு நன்மை ஏற்படும். தொலை தூரப் பயணங்களின் மூலம் நன்மை ஏற்படும். வெற்றிகரமான தொழில் முன்னேற்றங்கள் ஏற்படும். உங்கள் மனதில் எழும் புதுப்புது யோசனைகள் காரணமாகவும், திறமையான நடவடி க்கைகள் மூலமாகவும், உங்களுக்கு, உங்கள் எதிர்பார்ப்பை விட தொழிலில் அதிக இலாபங்களை அள்ளித் தரும். பிரயாணத்தின் போது எச்சரிக்கையாக இருத்தல் அவசியம். குடும்பத்தில் சில நேரங்களில் அமைதியின்மையும் நிலவும்.

திருவாதிரை —

இந்த வாரம் வாக்கு வன்மையால் பொருளாதார முன்னேற்றங்கள் ஏற்படும். பூஜா வழிபாடுகளும், பெரியோர் ஆசிகள் எண்ணிய எண்ணங்கள் ஈடேறும். சுபச் செய்திகளை க் கேட்டு மகிழ்வார்கள். தொழிலில் புதிய முதலீடுகளால் உற்பத்தி திறன் அதிகரித்து இலாபம் பெருகும். புத்தக வெளியீட்டாளர் களுக்கு தங்கள் தொழிலில் ஏற்றமான காலம். பெரியவர்கள் ஆசிகள், ஆதரவு ஆகியவை எப்போதும் இருக்கும். அறிவு விருத்தி ஆகும். மேலதிகாரிகளின் ஆதர வால் மேன்மை அடைவீர்கள். வாகனங்களில் செல்கையில் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டிய நாள். விபத்தை சந்திக்க நேரலாம். கற்பனை வளம் பெருகும். சிலர் மனம் நண்பர்கள் சகவாசத்தால் தீய வழி முறைகளை நாடும். எனவே, கவனம் தேவை.

புனர்பூசம் – 1, 2, 3 – பாதங்கள்.

இந்த வாரம் பக்தி மார்க்கத்தில் மனம் செல்வதால் உற்சாகம் பெருகும். குடும்பத்தோடு கோவில், குளம் புண்ணிய ஸ்தல யாத்திரைகள் எனச் சென்று மகிழ்வீர்கள். பணிபுரியும் இடத்தில் மேலதிகாரிகளின் ஆதரவால் பணியில் முன்னேற்றங்களை அடைய முற்படுவீர்கள். மனதுக்குப் பிரியமான மங்கையுடன் நட்பு ஏற்படும். வாழ்க்கையில் மனமகிழ்ச்சியையும், சுகானுபவங்கள், அடைவீர்கள். இடைவிடாத கடின உழைப்பின் காரணமாக நேரத்துக்கு உணவு உட்கொள்ளும் கால நேரம் இருக்காது. தந்தைவழி உறவுகளால் அனுகூலம் ஏற்படும். அரசு வகையில் கட்ட வேண்டிய நிலுவைகள், வரி பாக்கிகள் ஆகியவற்றைச் செலுத்துவதற்கு தேவையான பணவரவுகள், பணவுதவி கள் வந்து சேரும்.

## கடகம்

(புனர்பூசம்- 4 ஆம் பாதம், பூசம்-1,2,3,4 பாதங்கள், ஆயில்யம்-1,2,3,4 பாதங்கள்)

புனர்பூசம் – 4 ஆம் பாதம்.

இந்த வாரம் பெரியவர்களின் ஆலோசனைக்கு ஏற்ப பூஜா வழிபாடுகளில் ஈடுபடுவீர்கள். நல்ல குரு வாய்க்கப்பெற்று ஆன்மீக வழியில் அறிவுத் தெளிவு ஏற்படும். விரும்பிய பொருட்களை வாங்கக் கூடிய அளவுக்குத் திருப்திகரமான தனவரவு இருக்கும். நல்லவர்களின் தொடர்பு மூலம் நன்மைகள் அதிகம் ஏற்படலாம். உணவருந்தும் நேரமின்றி உழைக்க வேண்டியது வரும். அப்படி உண்ணும் உணவும் வாய்க்கு ருசியாக கிடைக்காது. புதிய தொழில் தொடர்புகள் மூலம் எதிர்பார்ப்புக்கு மேல் பணவரவு ஏற்படும். அரசு அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர். பங்குச் சந்தையில் இலாபமும், போட்டி பந்தயங்களில் ஆதாயமும் கிடைக்கும். சிலர், தேவையற்ற காரணங்களால் அரசுக்கு அபராதம் செலுத்த நேரலாம்.

பூசம் –

இந்த வாரம் எதிர்பாராத தனவரவு ஏற்படும். வீட்டில் சுப காரியங்கள் அனைத்தும் சிறப்புற, வெற்றிகரமாக நடக்கும். தொலை தூரப் பயணங்களின் மூலம் நன்மை ஏற்படும். உறவுகள் மூலமாகவும் பணவுதவி கள் கிடைக்கும்.. தொழிலில் விஸ்தரிப்பு நடவடிக்கைகள் மூலம் வருமான வாய்ப்புகள் பெருகும். கோபத்தைக் குறைத்தால் குடும்பத்தில் குழப்பங்கள் குறையும். தந்தைவழி உறவுகளால் ஆதாயங்கள் ஏற்படலாம். நல்லவர்கள் தொடர்பால் நன்மைகள் ஏற்பட வாய்ப்புண்டு. மேலதிகாரிகளால் பாராட்டப்படும் பதவி உயர்வின் மூலம் பணப் பலன்களை அடைவார்கள். வாகனங்களில் செல்லும் போது எச்சரிக்கையுடன் இருக்காவிட்டால் விபத்தில் சிக்க நேரிடலாம். கவனம் தேவை.

ஆயில்யம் –

இந்த வாரம் தெய்வ சிந்தனைகள் ஏற்பட மனதில் அமைதி நிலவும். ஆடை, ஆபரணங்கள், நல்ல உணவு, எதிர்பாராத தனவரவு ஆகியவை ஏற்படும். கௌரவப் பட்டங்கள், பதவிகள் தேடிவரும். விருந்தினர் வருகையால் மனம் மகிழ்ச்சி ஏற்படும். அவர்களுடன் சினிமா போன்ற கேளிக்கைகளில் ஈடுபட்டு இன்பம் துய்ப்பீர்கள். மேலதி காரிகளின் ஆதரவால் பதவி உயர்வுகளை எதிர்பார்க்கலாம். புதிய நண்பர்களால் நன்மை ஏற்படும். மாணவர்களின் கவனச் சிதறல்கள் காரணமாக படிப்பில் ஆர்வம் குறையும். உங்களுக்குப் பயணங்களில் எதிர்பாராத பிரச்சினைகள் ஏற்படலாம். தந்தைவழி உறவுகளால் உதவி இருக்காது. சிலருக்குக் காரியத்தடைகள், கால தாமதங்கள் ஏற்படும்.

## சிம்மம்

(மகம்-1,2,3,4 பாத ங்கள்,பூரம்- 1,2,3,4 பாதங்கள் மற்றும் உத்திரம்- 1 பாதம்)

மகம் –

இந்த வாரம் பல வழிகளிலும் தனவரவு அதிகரிக்கும். பயிர், மனை இவற்றால் இலாபம் ஏற்படும். சிலருக்குத் திருமணம், சந்ததி விருத்தி ஏற்படும். சகோதரரால் நன்மைகள் உண்டு. மனோதைரியம் அதிகரிப்பதன் காரணமாக எவரையும் எதிர்த்து போராடி வெற்றி பெறுவீர்கள். தொழிலில் பொருட்களின் உற்பத்தி பெருகி, இலாபமும் எதிர்பார்த்தபடி அதிகரிக்கும். அரசுப் பணியாளர்களுக்கு புதிய பதவியும், பொறுப்பும் கிடைக்கும். வாகன வசதியும், நற்கல்வியும் கிடைக்கும். சிலருக்கு அரசாங்க விருதுகள் கிடைக்கும். வாக்கு வன்மை ஓங்கும். பூரண சயன சுகம் ஏற்படும். பிறருக்கு உதவும் நல்ல எண்ணம் மேலோங்கும். கோபத்தை அடக்கி உடன் பிறப்புகளுடன் ஒத்துப் போவது நல்லது.

பூரம் –

இந்த வாரம் விருந்து, மகிழ்ச்சி கொண்டாட்டம், ஆரவாரம், என வீட்டில் மகிழ்ச்சி பொங்கும். இந்த நாட்களில் உங்கள் திறமை மிக்க செயல்பாடுகளால் அனைவரின் பாராட்டையும் பெறுவீர்கள். நீங்கள் எதிர்பார்த்த இடங்களில் இருந்து பணவரவு தாராளமாக இருக்கும். அரசாங்கத்திடம் இருந்து அனுகூலமான செய்திகள் மற்றும் தகவல்கள் வந்து சேரும். நல்ல பல கருத்துக்களை கேட்பதின் மூலம் உங்களுக்கு ஞானத் தன்மை அதிகரிக்கும். பக்தி மார்க்கத்தில் செல்ல மனைவியின் பூரண ஒத்துழைப்பு கிடைக்கும். புதிய கொள்முதல் மூலம் தொழிலில் அதிகமாக வருவாய் பெருக்கம் ஏற்படும். தூர தேசங்களில் இருந்து எதிர்பார்த்த நல்ல செய்திகள் வரும். உங்கள் உடலில் சுறுசுறுப்பு குறைந்து, சோம்பல் அதிகரிக்கும்.

உத்திரம்- 1 பாதம் –

இந்த வாரம் எதிர்பார்த்தபடி தனவரவுகள் கைக்கு வந்து சேரும். பிறந்த நாள், திருமண விருந்துகளில் கலந்து கொண்டு மகிழ்ச்சி அடைவீர்கள். சுபகாரிய செலவுகள் ஏற்படும். இளைஞர்களுக்குப் புதிய வேலைவாய்ப்புக்கள் ஏற்படும். புதிய நண்பர்கள் சேர்க்கை, தொழில் இலாபம் ஆகியவை ஏற்படும். கற்பனை வளம் பெருகும். தாய் மூலம் நன்மைகள் ஏற்படும். மற்றவர்கள் உயர்வைக் கண்டு பொறாமை கொள்ளாதிருப்பது நல்லது. வியாபாரத்தில் விரிவாக்கத் திட்டங்கள் மூலம் வாடிக்கையாளர்களை கவர்ந்து இலாப த்தைப் பெருக்கிக் கொள்வீர்கள். பணத்தை தரும காரியங்க ளுக்கு தாராளமாகச் செலவு செய்து மகிழ்வார்கள். நல்லோர் சேர்க்கையால் மாணவர்களுக்கு கல்வியில் தேர்ச்சி உண்டு.

## கன்னி

( உத்திரம் – 2, 3, 4-பாதங்கள், ஹஸ்தம்-1, 2, 3, 4 பாதங்கள், சித்திரை – 1,2 பாதங்கள்)

உத்திரம் – 2, 3, 4 – பாதங்கள்.

இந்த வாரம் பக்தி மார்க்கத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். எதிர்பாராத தனவரவுகள் இருக்கும். திருமணம், வளைகாப்பு போன்ற சுப காரியங்களுக்கு வீடே விழாக்கோலம் பூணும். திடீரென ஏற்படும். பயணங்களால் ஆதாயம், மகிழ்ச்சியும் ஏற்படும். சிலருக்கு உழைப்பு அதிகமாகி அதற்கேற்றார் போல் ஆதாயமும் அதிகரிக்கும். அரசுப் பணியாளர்களுக்கு எதிர்பார்த்தபடி தலைமைப் பதவிகள் தேடி வரும். நல்ல வகையான உணவு வகைகளை உட்கொள்வார்கள். டீக்காக உடையணிந்து ஆட்களை அசத்துவார்கள். வார மத்தியில், குடும்பத்தில் சுபகாரியப் பேச்சுக்கள் பேசப்படும். இளைஞர்களுக்கு அரசு வேலை வாய்ப்புகள் பிரகாசமாக இருக்கும்.

அஸ்தம் –

இந்த வாரம் மனைவி மூலம் மட்டற்ற மகிழ்ச்சி நிலவும். வாக்கால் வருமானம் பெருகும். விருப்பங்கள் அனைத்தும் நிறைவேறும். அரசாங்கத்தால் அனுகூலம் உண்டு. விரும்பிய பொருட்களை எல்லாம் வாங்கிக் குவிப்பீர்கள். மிகமிக முக்கியமான பெரியவர்கள் சகாயத்தால் பெருவாழ்வுக்கான அஸ்திவாரம் அமையும். கையில் எடுக்கும் காரியங்களில் எல்லாம் தடை, தாமதங்கள் ஏற்படும், வேலைகளை முடிக்க தேவையற்ற அலைச்சல்கள் ஏற்படும். பழைய நண்பர்களிடம் சுமுகமாக இருப்பது நல்லது. பயணத்தின் போது எச்சரிக்கையுடன் இருக்கவும். வீட்டில் பெண்களால் அதிக வீண் செலவுகள் ஏற்படும். வேலை விஷயமாக அலைச்சல்கள் ஏற்படும்.

சித்திரை – 1,2 பாதங்கள் –

இந்த வாரம் எதிர்பாராத தன வரவுகள், வஸ்திர லாபம், சுகபோஜனம் ஆகியவை ஏற்படும். அரசுத்துறை மூலம் எதிர்பார்த்த ஆதாயங்கள் அனைத்தும் விரைவில் கிடைக்கும் சினத்தை அடக்கினால் சிரமங்கள் குறையும். பொறுமையைக் கடைப் பிடித்தால் குடும்பத்தில் வாக்குவாதங்களை தவிர்க்கவும். உடன் பிறந்தவர்களை அனுசரித்துச் செல்வது நல்லது. கல்வியில் தேர்ச்சி, தெய்வ சிந்தனை மற்றும் தர்ம சிந்தனையும் ஏற்படும். சிலருக்கு உயர் ரக வாகனங்கள் கிடைக்கும். பணம் சம்பாதிப்பதில் ஆக்கமும், ஊக்கமும் ஏற்படும். சிலருக்கு உழைப்பு அதிகமாகி அதற்கேற்ற ஆதாயம் இருக்காது.. தொலைதூர செய்திகள் மூலம் இல்லத்தில் மகிழ்ச்சி பெருகும்.

## துலாம்

( சித்திரை-3,4 பாதங்கள், சுவாதி – 1,2,3,4 பாதங்கள் மற்றும் விசாகம்-1,2,3 பாத ங்கள்)

சித்திரை-3,4 பாதங்கள் –

இந்த வாரம் புதிய முயற்சிகள் மூலம் பண வருமானம் அதிகரிக்கும். சிலருக்குப் புதுப்புதுப் பதவிகளும் அதன் மூலம் வருவாய் பெருக்கமும் ஏற்படும். தொழில் வாய்ப்புகள் பிரகாசமாக இருக்கும். உங்கள் தொழில் விஷயமாகத் தீட்டிய முக்கியத் திட்டங்கள் நிறைவேற எடுத்த முயற்சிகள் வெற்றி பெறும். வியாபாரிகளுக்கு வங்கிக் கடன்கள் உடனடியாக கிடைக்கும். அவர்கள் தங்கள் வாக்கால் வாடிக்கையாளர்களை கவர்ந்து இலாபத்தைப் பெருக்குவர். பெண்களின் அழகும், பொலிவும், அறிவுத்திறனும் கூடும். குழந்தைகளின் ஆரோக்கியத்தில் மிகுந்த கவனம் தேவை. பண விஷயங்களில் மிகவும் எச்சரிக்கையுடன் இருப்பது நல்லது. நல்லவர்களுடன் ஏற்படும் பழக்கத்தால் நல்லதே நடக்கும்.

சுவாதி –

இந்த வாரம் இரவு விருந்துகளில் கலந்து கொண்டு நண்பர்களுடன் மகிழ்ச்சி பொங்க பொழுதை கழிப்பீர்கள். கல்வியில் தேர்ச்சி, தெய்வ சிந்தனை மற்றும் தர்ம சிந்தனையும் ஏற்படும். சிறப்பான பலன்களை எதிர்பார்க்கலாம் அரசியல்வாதிகளிடம் மற்றும் அரசாங்கத்திடமும் எதிர்பார்த்த அனுகூலங்கள் அனைத்தும் தாமதமின்றி கிடைக்கும். தொழில் சம்பந்தமான முயற்சிகள் வெற்றி திக்கை நோக்கிச் செல்லும். சுபச் செய்திகள் எதிர்பார்க்கலாம். சிலருக்கு உயர்ரக வாகனங்கள் கிடைக்கும். பிரபலமானவர்களின் ஆறுதலும், அன்பும் கிடைக்கும். புத்தக வெளியீடு போன்ற தொழில்களில் முன்னேற்றம் ஏற்பட்டு, ஆதாயம் அதிகரிக்கும். புதிய தொழில் முயற்சிகள் அரசு உதவியுடன் வெற்றி பெறும்.

விசாகம்- 1,2,3 பாதங்கள் –

இந்த வாரம் பல புண்ணிய ஸ்தலங்களுக்கு பயணம் செய்யும் வாய்ப்பு கிட்டும். திருமணம் ஆகாதவர்களுக்கு திருமணம் நடக்கும். எப்போதும் தங்கள் சேவைகள் அனைவராலும் அங்கீகரிக்கப்படும். நீங்கள் எதிர்பாராத விதத்தில், நினைத்த இடத்திற்கு இடமாற்றங்கள் ஏற்படலாம். அதிகாரிகள் நட்பால் ஆதாயம் பெறுவீர்கள். அரசாங்கத்தால் அனுகூலம் உண்டு. வியாபாரிகள் கவர்ச்சிகரமான பொரு ட்களை பரிசாக அறிவித்து தங்கள் வாடிக்கையாளர்களை கவர்ந்து இலாபத்தை அதிகரித்துக் கொள்வர். நண்பர்கள் விரும்பி வந்து உதவி செய்வார்கள். மாணவர்கள் அன்றன்றை க்கு தங்கள் பாடங்கள் அனைத்தையும் அக்கறையுடன் படித்தால் அதிக மதிப்பெண்கள் பெறமுடியும்.

## விருச்சிகம்

(விசாகம்- 4, அனுஷம்-1,2,3,4 பாதங்கள் மற்றும் கேட்டை -1,2,3,4 பாதங்கள் )

விசாகம்- 4 ஆம் பாதம் –

இந்த வாரம் உங்களுக்கு மிக்க அனுகூலமான வாரம். பல வழிகளிலும் தனவரவு ஏற்படும். எந்தக் காரியத்தையும் திறம்படச் செய்யும் உங்கள் செயல்திறன் கூடும். அதன் காரணமாக உங்கள் பணி இலக்கை அடைவீர்கள். சிலருக்கு மற்றவர்களுக்கு ஆணையிடும் உயர் பதவிகள் கிடைக்கும். புதிதாக வேலை தேடுபவர்களுக்கு நல்ல காலம் பிறக்கும். மாணவர்கள் தங்கள் கிரகிப்பு தன்மையால் கல்வியின் தரத்தை உயர்த்தி கொள்வர். உத்தியோகம் மற்றும் தொழிலில் அபிவிருத்தி ஏற்படும். சிலருக்குப் பணமுடை ஏற்படுவதோடு, தேவையற்ற அலைச்சல்களும் ஏற்படும். வீண் மனஸ்தாபங்கள் தவிர்த்தால் வீட்டில் அமைதி நிலவும்.

அனுஷம் –

இந்த வாரம் எதிர்பாராத இடத்தில் இருந்து வந்த பணவரவால் மனம் மகிழும். பொருளாதார நிலைகள் திருப்திகரமாக இருக்கும். தனவரவு அதிகரிப்பால் குடும்பத்தில் மகிழ்ச்சியும் அதிகரிக்கும். நவநாகரீக ஆடைகள் வாங்கி உடுத்தி மகிழ்வதோடு, உறவுகள் வருகையால் உள்ளம் மகிழும். உறவுகளுடன் உயர்தர உணவகங்களில் உணவருந்தி மகிழ்வீர்கள். சிலர் பலவகையிலும் பிறரால் குற்றம் சாற்றப்பட்டு அவதிப்பட நேரலாம். பணிபுரியும் பெண்கள் பதவி உயர்வுகளை எதிர்பார்க்கலாம். புதிய தொழில் தொடங்க எடுக்கப்படும் முயற்சிகள் வெற்றி பெறும் காலம் கனிந்து வரும். தொழிலில் நல்ல வளர்ச்சி ஏற்படும். திடீர்ப் பயணங்கள் மூலம் ஆதாயங்கள் ஏற்படும்.

கேட்டை –

இந்த வாரம் எல்லா வசதிகளும் இன்பமும் ஏற்படும் உடன் பிறப்புக்களின் மூலம் நீங்கள் எதிர்பார்க்கும் பணவுதவி கள் கிடைக்கும். புதிய வீடு, பூமி வாங்கக் கூடிய சந்தர்ப்பங்கள் உருவாகலாம். வாகனங்களில் செல்லும் போது கவனமாக செல்லவும். சிலருக்கு ஏதாவது மனக்குறை இருந்து கொண்டே இருக்கும். அரசு வேலைக்கு மனு செய்தவர்கள் அனுகூல பதில்களை எதிர்பார்க்கலாம்.. வியாபாரிகளுக்கு வியாபாரம் ஏற்ற இறக்கமின்றி ஒரே சீராக இருக்கும். நல்ல உயர்ந்த மனிதர்களின், பண்பு மிக்கவர்களின் நட்பு ஏற்படும். சிலருக்குப் பயணங்களிலும், அரசு வகையில் தொல்லைகள் ஏற்படலாம். சில நேரங்களில் சுறுசுறுப்பு இல்லாத நிலையும், மனோபயம் நிலவும்.

## தனுசு

( மூலம்-1,2,3,4 பாதங்கள், பூராடம்- 1,2,3,4 பாதங்கள் மற்றும் உத்திராடம் –1 பாதம்)

மூலம் –

இந்த வாரம் குடும்ப சந்தோஷம் குறைவில்லாது நிறைந்திருக்கும். தம்பதிகளிடையே அன்யோன்யம் அதிகரிக்கும். பெரியவர்கள் ஆசியால் நீங்கள் எடுக்கும் அனைத்து முயற்சிகளும் வெற்றி அடையும். சுகமும் ஆடை ஆபரண சேர்க்கை, புத்திர பாக்கியம் மற்றும் எதிர்பாராத பண வரவுகள் ஆகியவை ஏற்படும். சிலருக்கு வீண் பேச்சு, வீண் அலைச்சல் மற்றும் வீண் செலவுகள் ஏற்படும். மிகப்பெரிய சாகசங்களை புரிவீர்கள். அதிகாரிகளுடன் வீண் சச்சரவுகளை விலக்கினால் பணியில் எதிர்பார்த்த உயர்வுகள் இருக்கும். சம்பாதிக்கும் திறன் மேம்படும். மிகக் கடினமான வேலைகளையும் தன்னம்பிக்கை காரணமாக சிறப்பாக செய்து முடிப்பீர்கள்.

பூராடம் –

இந்த வாரம் புதிய தொழில் வாய்ப்புகள், லாட்டரி யோகங்கள், புண்ணியத்தல தரிசனங்கள் ஆகியவை ஏற்படும். நல்ல புத்திர பாக்கியம் ஏற்படும். பண விஷயத்தைப் பொறுத்தவரை திருப்திகரமான வாரமாக இருக்கும். சிலருக்குப் பெரிய இடத்துப் பெண் மனைவியாக அமைவாள். மனைவி மூலம் பூரண சுகம் கிடைக்கும். மாணவர்களுக்கு கல்வியில் தேர்ச்சி உண்டாகும். அரசுப் பதவியில் உள்ளவர்கள் தயவால் அனுகூலமான பலன்களை அடைவர். சிலருக்கு தங்கள் கை வைக்கும் வேலைகளில் எல்லாம் தடை தாமதங்கள் ஏற்பட வாய்ப்புண்டு.. வாகனங்களுக்கு உரிய ஆவணங்களை மறக்காமல் எடுத்துச் செல்லவில்லை என்றால் தண்டம் கட்ட வேண்டியது வரும்.

உத்திராடம் –1 ஆம் பாதம் –

இந்த வாரம் எல்லா நிகழ்வுகளும் மகிழ்ச்சியை வரவழைக்கும். பெரியோர்களின் ஆசி, பக்தி மார்க்கத்தில் ஈடுபாடு ஆகியவற்றால் நல்ல மனிதர்களின் தொடர்புகள் ஏற்படும். உறவுகள், நண்பர்கள் மற்றும் குடும்பத்தார் மூலம் உதவிகள் தடைப்படாது. எடுத்த முயற்சிகள் யாவும் வெற்றி அடைய அதிக உழைப்பு தேவைப்படும். கடின உழைப்பு எப்போதும் உங்கள் பையை பணத்தால் நிரப்பும். சிலருக்கு நினைத்த காரியங்கள் அனைத்தும் மனம் போல் நடக்கும். சிலருக்குப் புதிய பெண்கள் தொடர்பு ஏற்படும். பல வகையான உயர்ந்த வாகன வசதி அமையும். அரசுப் பதவியில் உள்ளவர்களின் அனுகூலமான நடவடிக்கைகள் மனதில் புத்துணர்ச்சியை ஏற்படுத்தும்

## மகரம்

( உத்திராடம்- 2,3,4-பாதங்கள், திருவோ ணம்-1,2,3,4 மற்றும் அவிட்டம் 1,2 பாதங்கள் )

உத்திராடம்- 2,3,4- பாதங்கள் ---

இந்த வாரம் புது தெம்பும், உற்சாகமும் கூடும். வாகன வசதிகள் மேம்படும். அந்தஸ்து உயரும். தொலை தூரத்திலிருந்து நற்செய்திகள் வந்து மகிழ்ச்சி அளிக்கும். பக்திப் பெருக்கினால் ஞானத் தன்மை எய்துவார்கள். சிலருக்கு அதிகாரப் பதவியும், அமைச்சர் போன்ற பதவிகளும் கிடைக்கும். நண்பர்களிடம் சுமுகமாக இருக்க முயற்சியுங்கள். பயணங்களால் செலவுகள் அதிகமாகும், ஆதலால் பணமுடையும் இருக்கும்.பணிபுரிவர்களுக்கு வேலையில் சிரத்தையும், மாணவர்களுக்கு கல்வியில் தேர்ச்சியும் உண்டாகும். அரசுப் பதவியில் உள்ளவர்கள் மேலதிகாரிகளின் தயவால் அனுகூலமான பலன்களை அடைவர். நல்ல புத்திர பாக்கியம் ஏற்படும். பயணங்களில் எச்சரிக்கை தேவை.

திருவோணம்-

இந்த வாரம் சுக சௌகரியங்கள் கூடும். சுபசெய்திகளால் மனம் மகிழும். வெளிநாட்டுப் பயணம் மற்றும் வாணிபத்தால் தன லாபம் அதிகரிக்கும். வீட்டில் அமைதியும், நிம்மதியும் நிலவும். மனைவியின் பேச்சைக் கேட்டு நடக்க வேண்டிய நிலை ஏற்படும். செலவுகளைக் குறைத்து சேமித்து வைப்பது எதிர்காலத்துக்கு பயன்படும். வியாபாரத்தில் போட்டிகளைச் சமாளிக்க கடினமாக உழைக்க வேண்டியது வரும். விவசாயிகளுக்கு அதிக மகசூல் ஏற்பட்டு, இலாபத்தால் வசதிகள் பெருகும். சிலருக்கு உழைப்பு அதிகமாகி. அதற்கேற்ற இலாபமோ, பலனோ கிடைக்காது. புத்தி தெளிவு மற்றும் செயல்திறன் அதிகரிக்கும். புதுத்தெம்பு, உற்சாகமும் கூடும்.

அவிட்டம் 1,2 பாதங்கள் –

இந்த வாரம் தொலை தூரத்திலிருந்து நற்செய்திகள் வந்து மகிழ்ச்சி அளிக்கும். வாகன வசதிகள் மேம்படும். அந்தஸ்து உயரும். சிலருக்கு அதிகாரப் பதவியும், அமைச்சர் போன்ற பதவிகளும் கிடைக்கும். உதவிகரமான புதிய நண்பர்கள் கிடைப்பர். எழுத்துத் தொழிலில் முன்னேற்றம் ஏற்படும். தாய்மாமனுக்கு நன்மை ஏற்படும். சிலருக்குக் கௌரவப் பட்டங்கள் கிடைக்கும். இரவுப் பயணங்களில் எச்சரிக்கை தேவை. பல திசைகளில் இருந்தும் பணம் கூடுதலாக வரும். மனைவியுடன் கருத்து வேறுபாடு ஏற்படாதிருக்க அனுசரித்துச் செல்வது நல்லது. எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டு தொழிலில் புதிய திட்டங்களைத் தீட்டி முன்னேற முயல்வீர்கள்.

## கும்பம்

(அவிட்டம் – 3,4 பாதங்கள்– சதயம்-1,2,3,4 பாதங்கள்-பூரட்டாதி-1,2,3 பாதங்கள்)

அவிட்டம் – 3,4 பாதங்கள்—

இந்த வாரம் பூமி அல்லது வாகனம் வாங்கும் யோகம் ஏற்படும். மனதில் தெய்வ பக்தி கூடும். நினைத்ததை நினைத்தபடியே சாதிக்கும் திறன் அதிகரிக்கும். உங்கள் நற்குணங்கள் அனைவரின் பாராட்டையும் பெறும். மாணவர்களுக்கு கல்வியில் தேர்ச்சி உண்டாகும். பொன் பொருள் ஆபரணங்கள் ஆகியவை விதவிதமாகக் கிடைக்கும். நல்ல பண்பாளர்களின் நட்பும், அன்பும் கிடைக்கும். எப்போதும், உங்கள் எதிரிகளிடம் இருந்து விலகி இருப்பது நல்லது. உறவுகள் வருகையால் சந்தோஷம் பெருகுவது போல், செலவுகளும் அதிகரிக்கும். சிறப்பான பொதுஜன தொடர்பு காரணமாக உபரி வருமானம் கிடைக்கும். நண்பர்கள் மற்றும் உறவினர்களுடன் வீண் வாக்குவாதம் செய்யாதிருப்பது நல்லது.

சதயம்-

இந்த வாரம் நல் ஆரோக்கியமும், புதுத் தெம்பும், புத்தொளியும் ஏற்படும். பணக்கார மனைவியும் அமைவாள். அழகான, எழில் நிறைந்த வீடு கிடைக்கும். தாயின் ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. சிலருக்கு குடும்ப வாழ்க்கையில் குழப்பம் வரலாம். கடன் கொடுத்தவர்கள் கண்டிப்புடன் நடந்து கொள்வர். புதிய நண்பர்கள் மற்றும் உறவினர்கள் சந்திப்பால் உள்ளம் மகிழும். தொழிற்சாலையில் புதிய எந்திரங்களை நிர்மாணித்து, உற்பத்தியை பெருக்கி உன்னத நிலையை அடைவீர்கள்.தொழிற்சாலைக்கு விஜயம் செய்யும் வெளிநாட்டு முதலீட்டாளர்களுடன் நவீன உணவு விடுதிகளில் உண்டு மகிழ்வார்கள். உங்கள் தொழில் வழி முன்னேற்றம் அனைவரின் பாராட்டுதல்களையும் பெறும்.

பூரட்டாதி-1,2,3 பாதங்கள் –

இந்த வாரம் தாராளமான பணவரவு இருக்கும். இனிய தகவல்கள் இல்லம் தேடி வரும். சுற்றமும், நட்பும் சூழ சுபகாரியப் பேச்சுக்கள் இனிதே நடைபெறும். சமயோஜிதமாக செயல்பட்டு எதிரிகளின் திட்டங்களை முறியடிப்பீர்கள். நவீன காலத்துக்கு ஏற்றபடி புதுப்புது சாமான்களை அறிமுகப்படுத்தி வியாபாரத்தில் ஏற்றம் காண்பீர்கள். அரசுப் பணியாளர்கள் அக்கறையுடன் பணிபுரிந்து, அதிகாரிகள் பாராட்டுதல்களை பெறுவார்கள். குடும்பத்தில் இதுவரை ஏற்பட்ட பெரும் குழப்பங்கள் தீரும். புதிய கடன்களை வாங்க வேண்டிய சூழ்நிலை எழும். தீய குணம் உள்ள நபர்களிடம் இருந்து விலகி இருப்பதே நல்லது. புதிய முதலீடுகளால் தொழில் ஏற்றம் காணும்.

## மீனம்

( பூரட்டாதி – 4 ஆம் பாதம், உத்திரட்டாதி-1,2.3.4 பாதங்கள் , ரேவதி- 1,2,3,4 பாதங்கள்)

பூரட்டாதி – 4 ஆம் பாதம் –


இந்த வாரம் கலைஞர்களுக்கு சிறப்பான வாரம். புதிய ஒப்பந்தங்கள் கையெழுத்தாகி, கை நிறைய முன் பணம் பெற்று மகிழ்வர். தொழிலில் ஈடுபட்டு உள்ளவர்களுக்கு இதுநாள் வரை இருந்து வந்த இழுபறி நிலைகள் பகலவனைக் கண்ட பனிபோல் விலகும், சிலருக்கு வருமான வரி பிரச்சனைகள் தலை தூக்கலாம் எனவே, கம்பெனி கணக்குகளை சீராக எழுதி வைக்கவும். இல்லையெனில் சிக்கல்களைச் சந்திக்கலாம். வந்தபின் ஓடுவதை விட, வருமுன் காப்பது தானே புத்திசாலித்தனம். வீட்டில் பிடிவாதங்களை தளர்த்தினால் பிணக்குகள் தீரும். இடம் சம்பந்தமான வழக்குகள் வெற்றி பெற்று, புதிய சொத்துக்கள் சேரும்.

உத்திரட்டாதி-

இந்த வாரம் எதிர்பார்த்த இனங்களில் இருந்து தனவரவு உண்டு. குடும்ப உறவுகளின் ஒத்துழைப்பால் குடும்ப முன்னேற்றம் சாத்தியப்படும். உறவுகள், நண்பர்கள் மற்றும் குடும்பத்தினர் ஆகியோரின் ஒத்துழைப்பால் அகம் மகிழும். நீண்ட நாட்களுக்குப் பின்னர் வந்த பழைய உறவுகளின் வரவு மகிழ்வைத் தரும். நெருங்கிய நண்பர்களின் உதவியால் கூட்டாளிகளிடையே ஏற்பட இருந்த குழப்பங்கள் தீர்த்து வைக்கப்படும். வீட்டு வாடகை வசூல் திருப்திகரமாக இருக்கும். மாணவர்களின் கல்வி முன்னேற்றத்திற்கு கடின உழைப்பு தேவைப்படும். வீட்டில் நவீன உபகரணங்கள் பலவற்றை வாங்கி மகிழ்வீர்கள். வியாபார சம்பந்தமான வெளிநாட்டுப் பயணங்கள் இலாபம் தரும்.

ரேவதி-

இந்த வாரம் உங்கள் திறமை மிக்க செயல்களால் வெற்றிகளும், பாராட்டுதல்களும் குவியும். தங்கள் வாழ்க்கையில் மனைவி மூலமாக முன்னேற்றத்துக்கான நல்ல ஆலோசனைகள் கிடைக்கும். வெளியூர்ப் பயணங்கள், வெற்றிகரமாகவும், இலாபகரமாகவும் அமையும். இல்லத்தில் மகிழ்ச்சி பொங்க, மங்கல காரியங்கள் ஈடேறும். அன்பு மிக்க பெண்களால் ஆனந்தம் பெருகும். அரசு வகையில் எதிர்பார்த்த ஆதாயம் மற்றும் உதவிகளால் தொழிலில் முன்னேற்றம் ஏற்படலாம். மாணவர்களுக்கு படிப்பில் தேர்ச்சி ஏற்பட்டு, அறிவுச் சுடரொளி வீசும். புது வீடு கட்டிக் குடியேறும் பாக்கியம் ஏற்படும். இது நாள் வரை போராடி வந்த வழக்குகள் உங்களுக்கு சாதகமாக வெற்றி அடையும்.



● சென்னையில் குழந்தைகள் உயர் சிறப்பு பன்னோக்கு மருத்துவமனை, ஆராய்ச்சி நிலையம் இடம் தேர்வு மற்றும் கட்டுமான பணி குறித்த மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேரில் ஆய்வு செய்தார்.

# நெடுஞ்சாலை துறையில் புதிய...(1-ம் பக்க தொடர்ச்சி)

வேளச்சேரி - தாம்பரம் சாலையை இணைக்கும் முதல் அடுக்கு பாலப்பகுதிப் பணி. ரூ.95.21 கோடி மதிப்பீட்டில் மேடவாக்கம் சாலை சந்திப்புகளை இணைக்கும் வகையில் தாம்பரத்திலிருந்து வேளச்சேரி செல்லும் பாலப் பகுதி. ரூ.53.12 கோடி மதிப்பீட்டில் மதுரை- தொண்டி சாலை மற்றும் மதுரை சுற்றுச் சாலை சந்திப்பு பல்வழிச்சாலையில் மேம்பாலம். ரூ.20 கோடியில் சென்னையில் இந்திரா நகர் சந்திப்பில் 'யு' வடிவிலான மேம்பாலம்! ரூ.140.49 கோடி மதிப்பீட்டில் கோயம்புத்தூர்- உக்கடம் ஆத்துப்பாலத்தில் சாலை மேம்பாலம் மற்றும் ரூ.265.44 கோடி மதிப்பில் உக்கடம்- ஆத்துப்பாலம் நீட்சிப்பணி ஆகிய சாலை மேம்பாலங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

ரூ.1134.01 கோடியில் கட்டி முடிக்கப்பட்டுள்ள 29 ரெயில்வே மேம்பாலங்கள்ஃ ரெயில்வே கீழ்பாலங்கள், ரூ.52.98 கோடி மதிப்பீட்டில் அன்னனூர் அருகில் ரெயில்வே மேம்பாலம், ரூ25.74 கோடி மதிப்பீட்டில் கடம்பத்தூர் ரெயில் நிலையம் அருகில் கடம்பத்தூர்- திருவாலங்காடு ரயில் நிலையங்களுக்கிடையில் ரெயில்வே மேம்பாலம், சென்னை-பொன்னேரிக்கரை காஞ்சிபுரம் சாலையில் ரூ.59.63 கோடி மதிப்பீட்டில் காஞ்சிபுரம் ரெயில் நிலையம் அருகில் ரெயில்வே மேம்பாலம், ரூ.37.12 கோடி மதிப்பீட்டில் ஊரப்பாக்கம் அருகில் வண்டலூர் கூடுவாஞ்சேரி ரெயில் நிலையங்களுக்கு இடையில் ரெயில்வே மேம்பாலம், ரூ.20.96 கோடி மதிப்பீட்டில் ஒலக்கூர் பீடர் ரெயில்வே மேம்பாலம், கடலூர்- சித்தூர் சாலையில் ரூ.22.63 கோடி மதிப்பீட்டில் திருவெண்ணைநல்லூர் பரிக்கல் ரெயில் நிலையங்களுக்கு இடையே ரெயில்வே மேம்பாலம்.

பாண்டி- கிருஷ்ணகிரி சாலையில் ரூ.38.74 கோடி மதிப்பீட்டில் தண்டரை திருவண்ணாமலை ரெயில் நிலையங்களுக்கிடையே ரெயில்வே மேம்பாலம், பொள்ளாச்சி- பாலக்காடு சாலையில் ரூ.48.48 கோடி மதிப்பீட்டில் பொள்ளாச்சி- கிணத்துக்கடவு ரெயில் நிலையங்களுக்கிடையே ரெயில்வே மேம்பாலம், பெருங்களத்தூர் ரெயில் நிலையம் அருகில் ரெயில்வே மேம்பாலம் அமைக்கும் பணியில் ரூ.37.00 கோடி மதிப்பீட்டில் செங்கல்பட்டிலிருந்து- சென்னை செல்லும் பாலப்பகுதிப் பணி, ரூ.24.80 கோடி மதிப்பீட்டில் சீனிவாச ராகவன் தெரு பாலப்பகுதிப் பணி, ரூ.60.13 கோடி மதிப்பீட்டில் சென்னையிலிருந்து செங்கல்பட்டு செல்லும் பாலப்பகுதிப் பணி முதலிய 29 இடங்களில் ரெயில்வே பாதையின் குறுக்கே மேம்பாலங்களாகவும். கீழ்பாலங்களாகவும் அமைக்கப்பட்டு போக்குவரத்து இனிதாக நடைபெற வழிவகுத்துள்ளது திராவிட மாடல் அரசு.

## நம்ம சாலை செயலி

சாலைகளில் கண்டறியப்படும் பள்ளங்கள் குறித்து பொதுமக்கள் உதவியுடன் அறிந்து சரிசெய்திட நம்ம சாலை செயலி என்னும் புதிய செயலி உருவாக்கப்பட்டுள்ளது. இச்செயலி வழியாகப் பொதுமக்கள் சாலைகளில் ஏற்பட்டுள்ள பள்ளங்கள் குறித்துத் தகவல் தெரிவிக்க முடியும். அதன் மூலம் சாலைப் பகுதிகளில் ஏற்பட்ட பள்ளங்கள் குறிப்பிட்ட நேரத்திற்குள் சரி செய்யப்படுகின்றன.

## பொறியாளர்களுக்கு பயிற்சிகள்

வளர்ந்து வரும் புதிய புதிய தொழில்நுட்பங்களைக் களத்தில் கடைப்பிடித்து சாலை - பாலப்பணிகள் சிறப்பாக நடைபெறப் பொறியாளர்களுக்கும். இதர அலுவலர்களுக்கும் பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளன. அந்த வகையில், 379 பொறியாளர்களுக்கும், 112 தொழில்நுட்பம் சாரா அலுவலர்களுக்கும், விரிவான பயிற்சித் திட்டத்தின் (ஊவுP) கீழ் 2,881 பொறியாளர்களுக்கும், மற்றும் 832 தொழில்நுட்பம் சாரா அலுவலர்களுக்கும் பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளன. பெருநகர சென்னை மாநகராட்சியின் 368 பொறியாளர்களுக்கும், 40 மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை பொறியாளர்களுக்கும். 41 துணை ஆட்சியர்கள் (பயிற்சி) மற்றும் தலைமைச் செயலகத்தின் 134 பதிவு அதிகாரிகளுக்கும் இப்பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளன.

## சாலைப் பாதுகாப்பு விழிப்புணர்வு

நாமக்கல், செங்கல்பட்டு, நீலகிரி, தேனி, மதுரை, தூத்துக்குடி சிவகங்கை. ராமநாதபுரம், ஈரோடு, கோயம்புத்தூர் விருதுநகர் கரூர். திருப்பூர். திருவாரூர். நாகப்பட்டினம் தென்காசி, திருநெல்வேலி, கன்னியாகுமரி, கடலூர் திண்டுக்கல். திருச்சி மற்றும் மயிலாடுதுறை ஆகிய 22 மாவட்டங்களில் சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு கூட்டங்கள் நடத்தப்பட்டன. 454 சாலைப் பாதுகாப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள். நெடுஞ்சாலைத் துறையின் சாலைப் பாதுகாப்புப் பொறியாளர்கள் மூலம் பள்ளி மற்றும் கல்லூரிகளில் நடத்தப்பட்டு பள்ளி, கல்லூரி மாணவர்களிடையே சாலைப் போக்குவரத்து குறித்து விழிப்புணர்வு வளர்க்கப்பட்டுள்ளது.

## 919 புதிய பணி நியமனங்கள்

84 உதவிப்பொறியாளர்கள், 416 இளநிலை வரைதொழில் அலுவலர்கள் 182 உதவியாளர்கள். 3 தணிக்கை உதவியாளர்கள், 67 இளநிலை உதவியாளர்கள், 6 சுருக்கெழுத்துத் தட்டச்சர்கள் நிலை-3 மற்றும் 49 தட்டச்சர்கள் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலமாகவும். 4 உதவியாளர்கள் விளையாட்டு ஒதுக்கீட்டின் மூலம் நேரடியாகவும், 3 உதவி வரைவாளர், 45 இளநிலை உதவியாளர்கள், 9 தட்டச்சர்கள், 15 பதிவுரு எழுத்தர் மற்றும் 36 அலுவலக உதவியாளர்கள் கருணை அடிப்படையிலும் பணியமர்த்தப்பட்டுள்ளனர். ஆக 919பேர் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

## நடைபெற்று வரும் முக்கியப் பணிகள்

கோயம்புத்தூர் மேற்கு வட்டச்சாலை, மன்னார்குடி கட்டம்-1. அம்பாசமுத்திரம், திருச்செங்கோடு (1-2) பவானி (கட்டம் 1) நாமக்கல் (கட்டம் 1 - கட்டம் -2), பொள்ளாச்சி மேற்கு புறவழிச்சாலை, அருப்புக்கோட்டை மேற்கு புறவழிச்சாலை, கமுதி சிவகங்கை கட்டம் 1, உத்திரமேரூர், துறையூர் கட்டம் 2, தாம்பரம் கிழக்குப் புறவழிச் சாலை (இரு பகுதிகள்) மற்றும் திருப்போரூர் கேளம்பாக்கம் ஆகிய பகுதிகளில் புறவழிச்சாலைகள் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

ரூ.944.21 கோடி மதிப்பீட்டில் 812.8 கி.மீ நீளமுள்ள ஊராட்சி ஃ ஊராட்சி ஒன்றிய சாலைகள் மாவட்ட இதர சாலைகளாகத் தரம் உயர்த்தும் பணிகள் ரூ.331 கோடி மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த சாலை உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 373 சாலை பாதுகாப்புப் பணிகள். ஒருங்கிணைந்த சாலைகள் உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.8,076 கோடி மதிப்பீட்டில் 2,264 கி.மீ. நீளமுள்ள சாலைப் பணிகள் மற்றும் ரூ.694 கோடி மதிப்பில் 69 பாலம் ஃ சிறுபாலப் பணிகள் ரூ.763.80 கோடி மதிப்பீட்டில் 134 தரைப்பாலங்களை உயர் மட்ட பாலங்களாக மாற்றும் பணிகள் ரூ.375.32 கோடி மதிப்பீட்டில் நபார்டு கடனுதவி திட்டத்தின் கீழ் 32 உயர் மட்டப் பாலங்கள், ரூ.596.64 கோடி மதிப்பீட்டில் மாநில நிதி திட்டத்தின் கீழ் 19 உயர் மட்டப் பாலங்கள்.

ரூ.1791.23 கோடி மதிப்பீட்டில் கோயம்புத்தூரில் கோல்டுவின்ஸ் முதல் உப்பிலிப்பாளையம் வரை உயர்மட்ட சாலை அமைக்கும் பணிகள். ரூ.621 கோடி மதிப்பீட்டில் சென்னையில் தேனாம்பேட்டை முதல் சைதாப்பேட்டை வரை உயர்மட்டச் சாலை அமைக்கும் பணிகள் ரூ.25.52 கோடி மதிப்பீட்டில் படப்பையில் சாலை மேம்பாலம் ரூ.190.40 கோடி மதிப்பீட்டில் மதுரையில் கோரிப்பாளையம் சந்திப்பில் சாலை மேம்பாலம். ரூ.150.28 கோடி மதிப்பீட்டில் மதுரையில் மதுரை-தொண்டி சாலையில் சாலை மேம்பாலம்.

ரூ.2,105.49 கோடி மதிப்பீட்டில் 41 ரயில்வே மேம்பாலங்கள்ஃ ரயில்வே கீழ்பாலங்கள் கட்டும் பணிகள் ரூ.27.5 கோடி மதிப்பீட்டில் டைடல் பார்க் சந்திப்பில் "யு" வடிவிலான மேம்பாலம் கட்டும் பணிகள் என பல்வேறு முக்கிய பாலங்கள் கட்டும் பணிகள் நடைபெறுகின்றன.

தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆட்சியில் இத்தகைய பல சாலைத் திட்டங்கள், மேம்பாலப் பணிகளால் மற்ற துறைகளைப் போலவே இந்தியாவில் தமிழ்நாடு நெடுஞ்சாலைத் துறையிலும் சிறந்த மாநிலம் என புதிய வரலாறு படைத்து வருகிறது.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# கல்வியின் மூலம் சாதித்த திருநங்கை: முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து

சென்னை, ஜூன் 23-

லயோலா கல்லூரியில் ஆங்கிலத்துறையில் முனைவர் பட்டம் பெற்ற முதல் திருநங்கை டாக்டர் ஜென்சி, அக்கல்லூரியில் ஆங்கில உதவி பேராசிரியராக நியமனம் செய்யப்பட்டுள்ளார். அவருக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் எக்ஸ் தள பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில்,

வாழ்த்துகள் டாக்டர் ஜென்சி. உங்களது உழைப்பின் ஒளியால் இன்னும் பல நூறு பேர் கல்விக்கரை சேரட்டும்.

தடைகளையும் புறக்கணிப்புகளையும் கல்வி எனும் பேராற்றலால் வெல்லட்டும் என்று கூறியுள்ளார்.



● விஜய்யின் 51-வது பிறந்தநாளையொட்டி த.வெ.க. நிர்வாகி ஆர்.கோபி ஏற்பாட்டில் சென்னை சைதாப்பேட்டையில் அரசு மருத்துவமனையில் பிறந்த 15 குழந்தைகளுக்கு தங்க மோதிரத்தை த.வெ.க. பொதுச்செயலாளர் புஸ்ஸி ஆனந்த் வழங்கினார். அருகில் தேர்தல் பிரச்சார மேலாண்மை பொதுச்செயலாளர் ஆதவ் அர்ஜூனா உடனிருந்தனர்.



● சேலத்தில் முன்னாள் முதல்வர் எடப்பாடி பழனிசாமி முன்னிலையில் மாற்று கட்சிகளை சேர்ந்த பலர் நேற்று அ.தி.மு.க.வில் இணைந்தனர். இந்த நிகழ்ச்சியின் போது எடப்பாடி பழனிசாமிக்கு 'வேல்' பரிசளிக்கப்பட்டது.

### எடப்பாடி பழனிசாமி முன்னிலையில்

# அ.தி.மு.க.வில் இணைந்த மாற்று கட்சியினர்

சேலம், ஜூன் 23-

சேலத்தில் முன்னாள் முதல்வர் எடப்பாடி பழனிசாமி முன்னிலையில் மாற்று கட்சிகளை சேர்ந்த பலர் நேற்று அ.தி.மு.க.வில் இணைந்தனர்.

தமிழக சட்டசபை தேர்தல் அடுத்த ஆண்டு நடைபெற உள்ளது.

தேர்தலுக்கு இன்னும் சில மாதங்களே உள்ள நிலையில் அரசியல் களம் சூடுபிடிக்கத் தொடங்கி விட்டது. கூட்டணி, தொகுதி பங்கீடு, பிரசாரம் உள்பட பல்வேறு தேர்தல் வியூகங்களை அரசியல் கட்சிகள் தீவிரப்படுத்தி வருகின்றன. தேர்தலில் அ.தி.மு.க. - பா.ஜ.க. கூட்டணி அமைத்துள்ளது.

இந்நிலையில், சேலத்தில் முன்னாள் முதல்வர் எடப்பாடி பழனிசாமி முன்னிலையில் மாற்று கட்சிகளை சேர்ந்த பலர் நேற்று அ.தி.மு.க.வில் இணைந்தனர்.

இந்த நிகழ்ச்சியின் போது அ.தி.மு.க.வில் இணைந்த மாற்று கட்சியினர் எடப்பாடி பழனிசாமிக்கு 'வேல்' பரிசளித்தனர்.

### பல்வேறு கலைநிகழ்ச்சிகளுடன்

# மதுரையில் முருக பக்தர்கள் மாநாடு கோலாகலம்

## ஆந்திர துணை முதல்வர், இந்து முன்னணி, பாரதிய ஜனதா தலைவர்கள் பங்கேற்பு

மதுரை, ஜூன் 23-

பல்வேறு கலைநிகழ்ச்சிகளுடன் மதுரையில் முருக பக்தர்கள் மாநாடு கோலாகலமாக நடைபெற்றது. ஆந்திர துணை முதல்வர் பவன் கல்யாண், அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர்கள் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.



உலகம் முழுவதும் உள்ள முருக பக்தர்களை ஒருங்கிணைக்கும் வகையில் சமீப காலமாக தமிழகத்தில் பல்வேறு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகிறது. அந்த வகையில் வேல் யாத்திரை, பழனியில் முத்தமிழ் முருகன் மாநாடு நடத்தப்பட்டது. அதிலும் குறிப்பாக முருகப்பெருமானின் அறுபடை வீடுகளில் முதலாம் படை வீடாக திகழும் திருப்பரங்குன்றம் மலை மீதான சர்ச்சைக்கு பிறகு தமிழ்க்கடவுள் முருகனுக்கு முக்கியத்துவம் அளித்தும், இந்துக்களிடம் எழுச்சியை ஏற்படுத்தவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அந்த வரிசையில் சங்கம் வைத்து தமிழ் வளர்த்த மதுரையில் இந்து முன்னணி களாகவே வெளிமாநிலங்களில் இருந்து ஆயிரக்காணக்கானோர் மதுரை வந்து சேர்ந்தனர். அவர்கள் மதுரையில் பல்வேறு விடுதிகளில் தங்கி மதுரையை சுற்றியுள்ள கோவில்களுக்கு ஆன்மீக பயணம் மேற்கொண்டனர். நேற்று காலை மாநாட்டு திடலில் பக்தர்கள் குவிந்தனர். இருக்கைகளிலும், தலையிலும் துண்டுகளைப் போட்டுக் கொண்டு மாநாட்டில் பங்கேற்றுள்ளனர். மாநாட்டு நிகழ்வுகளையும், தலைவர்களின் உரை, ஆன்மிக கலை நிகழ்ச்சிகளை நேரடி ஒளிப்பரப்பு மூலம் காண, மாநாடு நடைபெறும் திரன் மலர்கொத்து கொடுத்து, பொன்னாடை போர்த்தி வரவேற்றார். மேலும் மாநாட்டில் பங்கேற்க வருகை தரும் முக்கிய பிரமுகர்களை வரவேற்க மதுரை விமான நிலையத்தில் தமிழக பா.ஜ.க. சார்பில் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.



அமைப்பு சார்பில் நேற்று முருக பக்தர்கள் மாநாடு பிரமாண்டாக நடைபெற்றது. மாநாடு நடைபெறும் பாண்டி கோவில் அம்மா திடலில் முருகனின் பிரமாண்ட தோற்றத்துடன் நுழைவு வாயில், திருப்பரங்குன்றம் மலையையும், வேல் ஏந்தியவாறு முருகப்பெருமான் நின்ற கோலத்தில் காட்சி அளிப்பது போலவும் பிரமாண்ட மேடை அமைக்கப்பட்டிருந்தன.

3 லட்சம் சதுர அடி பரப்பில் 5 லட்சம் பக்தர்கள் அமரும் வகையில் தரை விரிப்புகள் போடப்பட்டுள்ளன. மேலும் முதியோர்கள், பெண்கள், குழந்தைகளுடன் வருபவர்கள் அமர 1 லட்சம் இருக்கைகளும் அமைக்கப்பட்டிருந்தன. மாநாட்டில் கலந்து கொள்வதற்காக கடந்த 2 நாட்களில் அவர்கள் மாநாட்டு வளாகத்தில் வைக்கப்பட்டு இருந்த முருகனின் அறுபடை வீடுகளின் மாதிரிகளை தரிசித்தனர்.

மாநாட்டு பகுதிக்கு வரிசையில் செல்வதற்கு தடுப்புகளை ஏற்படுத்தி வழித்தடங்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதன்வழியே செல்வோர் அனைவரையும் போலீஸார், தீவிர சோதனைக்கு பிறகே அனுமதித்தனர். முக்கிய நிர்வாகிகள், விஐபிக்கள் மெயின் ரோட்டில் இருந்து மேடைக்கு செல்வதற்கென தனித்தனி வழிகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

மாநாட்டில் பங்கேற்க வந்த பக்தர்கள், பொதுமக்கள், பெண்கள் சுட்டெரிக்கும் வெயிலையும் பொருட்படுத்தாமல் மாநாட்டுக்கு வந்துள்ளனர். இடத்தைச் சுற்றிலும் 16-க்கும் மேற்பட்ட இடங்களில் பிரமாண்ட எல்இடி திரைகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. மாநாட்டில் பங்கேற்க வெளியூர்களில் இருந்து வந்த பக்தர்கள் பலர், தங்களது வீடுகளில் இருந்தும், புதிதாகவும் முருகனின் வேல்களை வாங்கியும் வந்துள்ளனர். சிலர் காவடிகளை எடுத்து வந்தனர். ஒரு கட்டத்தில் அவர்கள் வீரவேல், வெற்றி வேல் , முருகனுக்கு அரோகரா போன்ற கோஷங்களை முழங்கினர்.

இந்நிலையில் இந்த மாநாட்டில் கலந்துகொள்வதற்காக, ஆந்திர மாநில துணை முதல்வர் பவன் கல்யாண் நேற்று காலை மதுரை விமான நிலையம் வந்தடைந்தார். அவரை, பா.ஜ.க. மாநில தலைவர் நயினார் நாகேந்

இந்த மாநாட்டில் மத்திய அமைச்சர் எல்.முருகன், முன்னாள் அமைச்சர் பொன்.ராதாகிருஷ்ணன், பா.ஜ.க. முன்னாள் மாநில தலைவர் அண்ணாமலை, மற்றும் இந்து முன்னணி முக்கிய தலைவர்கள், அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர்கள், இந்து முன்னணி மாநில பொதுச்செயலாளர் ஜெ.எஸ்.கிஷோர்குமார், மாநாடு ஒருங்கிணைப்பாளர், இந்துமுன்னணி அமைப்பாளர் ச.ராஜேஷ், ஆர்.எஸ்.எஸ். அகில பாரத இணை சேவை பிரிவு பொறுப்பாளர் செந்தில்குமார், இந்து முன்னணி தென்பாரத அமைப்பாளர் க.பக்தன், இந்து முன்னணி மாநிலத்தலைவர் காடேஸ்வரா சுப்பிரமணியம் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.